# புதூகுஷ்ஷாம்

## வரலாறும் புனைவும்

கலாநிதி  ஸாதியா பௌஸர்
எஸ்.ஆர்.எப்.ஸபிய்யா

# புதூகுஷ்ஷாம்
## வரலாறும் புனைவும்

கலாநிதி. ஸாதியா பௌஸர்

செல்வி. எஸ். ஆர். எப். ஸபிய்யா

**புதாகுஷ்ஷாம் : வரலாறும் புனைவும்**

ஆசிரியர் : கலாநிதி. ஸாதியா பௌஸர்
செல்வி. ஸபிய்யா ஸமீர் றிபாய்
உரிமை : ஆசிரியர்களுக்கு
முதற்பதிப்பு : 2020
வெளியீடு : எக்ஸலன்ட் பப்ளிகேஷன்,
இல: 478 யு.ஃ1
அலிம் வீதி,
சாய்ந்தமருது - 16
கணினித் தட்டச்சு : கலாநிதி. ஸாதியா பௌஸர்
செல்வி. ஸபிய்யா ஸமீர் றிபாய்
அட்டை வடிவமைப்பு :

தொடர்புகளுக்கு : மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில் சூ32360

தொலைபேசி : 0778082019, 0774580005
மின்னஞ்சல் : saadhiyas@gmail.com
sameerrifai1994@gmail.com
பக்கங்கள் : 161
விலை : 500.00
சர்வதேச தர இல : ISBN978-955-3492-13-5

**futhoohush sham : Varalaarum punaivum**

Author : Dr. Saadhiya Fowzer
Miss. Safiya Sameer Rifai
Copyrights : Authors
First Edition : 2020
Publishers : Excellent Publication
No, 478 A/1,
Alim Road,
Sainthamaruthu - 16
Typing : Dr. Saadhiya Fowzer
Miss. Safiyya Sameer Rifai
Cover Design :
Contact : Department Of Languages,
South Eastern University of Sri – Lanka
Oluvil #32360
Phone : 0778082019, 0774580005
Email : saadhiyas@gmail.com
sameerrifai1994@gmail.com
Pages : 161
price : 500.00
ISBN : ISBN978-955-3492-13-5

## புதுகுஷ்ஷாமும் புனைவுகளும்

இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்றால் சீறாப்புராணமே நம்மில் பலருக்கு ஞாபகம் வரும். ஆனால், இஸ்லாமிய தமிழ் இலக்கியம் பலவற்றை நமக்கு அறிமுகப்படுத்திய பெரும் பங்கு பேராசிரியர் உவைஸ் அவர்களையே சாரும். அவருடைய முயற்சியினாலேயே க.பொ.த.சாதாரண தர தமிழ் பாடத்தில் 'அ' பாடத்திட்டம் 'ஆ' பாடத்திட்டம் என்ற இரு வகை இருந்தது. அதில் 'ஆ' பாடத்திட்டத்தில் இரு இஸ்லாமிய இலக்கியங்கள் இருந்தன. ஒன்று சீறாப்புராணம். மற்றையது புதூகுஷ்ஷாம். இந்த வழியில் ஒரு சிலருக்கு புதூகுஷ்ஷாமும் அறிமுகமாகி இருக்கிறது.

புதூகுஷ்ஷாமினை இயற்றியவர் சேகுனாப் புலவர். இவர் இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்ற போர்களின் வெற்றியை இக்காப்பியத்தில் சித்திரித்திருக்கிறார். இவ்வகையில் ஷாம் தேசத்தை வெற்றி கொண்ட வரலாறு 'புதூஹ்' என்ற வெற்றிகள் எனும் கருத்துள்ள அறபுச்சொல்லோடு சேர்ந்து புதூகுஷ்ஷாம் என வழங்கலாயிற்று.

பெரும்பாலும் மரபு ரீதியான எல்லா இலக்கியங்களிளும் பொருளும் கற்பனையும் அழகும் முதன்மை பெற்றிருந்தன. இவ்வகையில் தாம் எடுத்துக்கொண்ட பொருளை விளக்குவதில் யதார்த்தத்திற்கு அப்பால் தமிழ் இலக்கியத்திலுள்ள மரபு ரீதியான இலக்கியங்களின் பாங்குடன் ஆக்குவதில் அதிகம் அக்கறை கொள்ளலாயினர். அவ்வகையில் இவ்விலக்கியங்களில் புனைவும் சேரலாயிற்று. அவ்வகையான புனைவு அம்சங்களைப் பற்றிய ஆராய்ச்சியாகவே இந்நூல் அமைகிறது.

இஸ்லாமியக் கோட்பாட்டுவாதிகள் இந்த வரலாற்றுத் திரிபுகளையும் புனைவுகளையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்தத் திரிபுகள் வரலாற்றுச் சான்றுக்காக வேறொரு இடத்தில் உசாத்துணையாகக்கூட பயன்படலாம். இந்த ஆபத்து நேர்ந்துவிட யாரும் அனுமதிக்கமாட்டார்கள். ஆகவேதான் இப்படியான ஆய்வுகளும் இன்று கவனத்தில்

கொள்ளப்படுகின்றது. அது இந்த இலக்கியங்களை தரங்குறைத்துப் பார்க்கின்ற ஒரு முயற்சியல்ல. இவ்வாறான இலக்கியங்களில், இவ்வாறான தவறுகள் நேர்ந்திருக்கும் என்பதை கண்டறியும் முயற்சியாகும்.

கலாநிதி ஸாதியா பௌஸர் தமது கலாநிதிப்பட்ட ஆய்வுக்காக இவ்விடயங்கள் பற்றி விரிவானதொரு ஆய்வினை மேற்கொண்டார். அதன்பின்னர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ் துறையிலுள்ள இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடுள்ள தமது மாணவியான செல்வி எஸ்.ஆர். பாத்திமா ஸபிய்யாவை இத்துறையில் ஈடுபடச் செய்து, தாமே அவரது மேற்பார்வையாளராகவும் கடமையாற்றி புதூகுஷ்ஷாம் தொடர்பாக ஆய்வினை செய்வித்தார். தற்போது அதில் பல்வேறு திருத்தங்களைச் செய்து, தமது கலாநிதிப்பட்ட ஆய்விலிருந்து பல பகுதிகளை இவ்வாய்வோடு சேர்த்து நூலாக வெளியிடப்படுவது பாராட்டத்தக்க அம்சமாகும்.

இப்படியான பல தலைப்புக்களில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ் துறையிலுள்ள இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடுள்ள மாணவர்கள் கவனம் செலுத்தியிருக்கிறார்கள். அவ்வகையிலே இந்நூலின் இணைஆசிரியரான எஸ்.ஆர். பாத்திமா ஸபிய்யா அவரது தமிழ் சிறப்புக்கலைமாணிக்காக இந்த ஆய்வை சமர்ப்பித்திருந்தார். இதன் மேற்பார்வையாளராக கலாநிதி ஸாதியா பௌஸர் கடமையாற்றியிருந்தார். அவர்கள் இருவரது முயற்சியாகவும் இன்று இது நூலுருப்பெற்றிருக்கிறது.

உண்மையில் இவ்வாசிரியர்களை பாராட்ட வேண்டும். ஸபிய்யா தற்போது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ் துறையில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறவர். ஆர்வத்தோடு இந்தப்பாடங்களை கற்பிப்பவர். இதுபோன்ற ஆய்வுகளில் அவர் மேலும் ஈடுபடவேண்டும் என விரும்புகிறோம். அதேநேரம் மொழித்துறையின் தலைவராக இருக்கின்ற ஸாதியா பௌஸர் அவர்கள் இத்தகைய முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது மிகவும் பராட்டப்படவேண்டிய விடயமாகும்.

அதுமாத்திரமன்றி இவ்வகையான ஆய்வேடுகள் நூலாக வருகிறபோதுதான் அது ஆக்கப்பட்ட பயனைப் பெறுகிறது. ஆகவே இவ்வாய்வேடுகளை பயனுள்ளதாக்கி ஆர்வலர்களின்

கைகளுக்குக் கிடைக்கச் செய்திருக்கிற மொழித்துறை தலைவருக்கும் நமது பாராட்டையும் நன்றி அறிதலையும் தெரிவித்துக்கொள்கின்றோம். இது போன்ற முயற்சிகள் இன்னும் ஆகவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

ரமீஸ் அப்துல்லா
மொழித்துறை
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
10.06.2019

**முன்னுரை**

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்வேறுபட்ட காப்பியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றுள் இஸ்லாமிய வரலாற்றை கூறுவதை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்ட காப்பியமாக புதூகுஷ்ஷாம் விளங்குகின்றது. இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்களில் அளவில் பெரிய காப்பியமாகவும் இது விளங்குகின்றது. 'பத்ஹ்' என்ற அறபுச்சொல் வெற்றியைக் குறிக்கும். 'புதூஹ்' என்பது 'வெற்றிகள்' என பன்மையில் அமைந்துள்ளது.

இக்காப்பியத்தில் பலரது ஆட்சிக்காலங்களில் இடம்பெற்ற போர்களில் கிடைக்கப்பெற்ற வெற்றி சித்திரிக்கப்படுவதால் 'புதூஹ்' என பன்மையில் இப்பெயர் அமைந்துள்ளது. 'ஷாம்' அரேபியாவிலுள்ள முக்கியதொரு தேசம். இன்று சிரியா என வழங்கப்படும் பிரதேசமாகும். எனவே முஸ்லிம்கள் ஷாம் தேசத்தை வெற்றி கொண்ட வரலாற்றை இக்காப்பியம் கூறுவதால் இதற்கு 'புதூகுஷ்ஷாம்' என அழைக்கப்படுகின்றது. இக்காப்பியத்தில் நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்வின் இறுதிப் பகுதியிலிருந்து உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலப்பகுதி வரையில் ஷாம் நாடு வெற்றிக் கொள்ளப்பட்ட வரலாறு சித்திரிக்கப்பட்டுள்ளது. இக்காப்பியத்தை எழுதியவர் சேகுனாப் புலவராவார்.

முஸ்லிம்களால் ஷாம் தேசம் வெற்றி கொள்ளப்பட்ட வரலாற்றைப் புலவர் ஆழமாகக் கற்று அதனை இலக்கியமாக்கியுள்ளார் என்பதனை இவ்விலக்கியத்தைப் படிக்கும்போது புரிந்து கொள்ள முடியும். அந்த வரலாற்றை அழகிய தமிழில் காவியமாகப் படைத்துள்ளார். எனவே அது இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பதாய் அமைந்துள்ளது.

அதேவேளை, புலவருக்கு ஏற்கனவே தமிழ் மொழியிலும் தமிழ் இலக்கியத்திலும் இருந்த பரிச்சயம், அவர் தமிழ்ச் சூழலில் இருந்து பெற்றுக் கொண்ட அனுபவங்கள், அக்காலகட்டத்தில் மார்க்கம் என்ற பெயரில் நிலவி வந்த நம்பிக்கைகள், நடைமுறைகள் அனைத்தும் இவவிலக்கியத்தைப் படைக்கும்போது தாக்கம் செலுத்தி இருப்பதை அவதானிக்க முடியும். அதனால், இஸ்லாமிய மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத சில விடயங்களையும் இக்காவியம் தன்னகத்தே கொண்டுள்ளது. இஸ்லாமிய வரலாற்றோடும் பண்பாட்டோடும் முரண்படக்கூடிய ஏகத்துவம் தொடர்பான விடயங்களும் இதில் இடம்பெற்றுள்ளன. ஏனைய புலவர்களும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில், இலக்கிய ரசனையைக் கருத்தில் கொண்டு இஸ்லாத்திற்கு முரண்பட்ட விடயங்களைக் கூறியிருப்பதைப் போன்று புதூகுஷ்ஷாம் காப்பியத்தில் சேகுனாப்புலவரும் கையாண்டுள்ளார்.

மேலும் சேகுனாப்புலவர், தமிழர்களின் பண்பாட்டம்சங்கள் சிலவற்றையும் முஸ்லிம்களின் பண்பாடுகள் போல் இக்காப்பியத்தில் கையாண்டுள்ளார். அத்தோடு

இலக்கிய நயத்தை மேம்படுத்துவதற்காக, இக்காப்பியத்தில் இஸ்லாமிய வரலாற்றில் நிகழ்ந்ததாக பல சம்பவங்களைப் புனைந்திருப்பதோடு, இஸ்லாத்திற்கு முரணான வர்ணனைகளையும் செய்துள்ளார். இவ்வாறு இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெறாத, ஆதாரமற்ற பல விடயங்களை கூறியிருப்பதானது, இஸ்லாம் தொடர்பான பிழையான கண்ணோட்டத்தை சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்தும். இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் அது இஸ்லாமிய வரையறைக்குட்பட்டதாக, இஸ்லாத்தின் ஆதாரபூர்வமான விடயங்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். அவ்வாறான இலக்கியங்களே இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் எனும் அந்தஸ்தினைப் பெறும்.

இந்நூல் புதூகுஷ்ஷாமில், ஷாம் நாடு வெற்றி கொள்ளப்பட்ட வரலாற்றை எந்தளவுக்கு கூறுகின்றது, அதில் ஆசிரியரின் கற்பனை எந்தளவுக்குக் காணப்படுகின்றது போன்ற விடயங்கள் அல்குர்ஆன், ஹதீஸ், இஸ்லாமிய வரலாற்றை சரிவர எடுத்தியம்பும் நூல்கள் எனபனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளன. இலக்கியங்கள் வரலாற்றை அறிந்து கொள்வதற்கான ஆதாரங்களாகக் கொள்ளப்படுபவை. அதனால் இஸ்லாமிய வரலாறுகளை விளங்கிக் கொள்வதற்கு புதூகுஷ்ஷாம் எந்தளவுக்கு உதவியாக அமையும் என்பதனை இந்நூல் சமூகத்திற்கு தெளிவுபடுத்தும் என நம்புகிறோம். இந்நூல் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் படைப்போருக்கான ஒரு வழிகாட்டியாகவும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் கற்கும் மாணவர்களுக்கும் அது தொடர்பில் ஆய்வு முயற்சியில் ஈடுபடும் மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் உறுதுணையாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

கலாநிதி. ஸாதியா பௌஸர்
செல்வி . ஸபிய்யா ஸமீர் றிபாய்

**பொருளடக்கம்**


அணிந்துரை
ஹை

முன்னுரை ஏஐ

1. புதூகுஷ்ஷாம் அறிமுகம் 01

2. புதூகுஷ்ஷாம் கூறும் இஸ்லாமிய வரலாறு (ஆதாரபூர்வமானவை) 26

3. புதூகுஷ்ஷாமில் புனைவுகள் : சமயமும் வரலாறும் 108

4. புதூகுஷ்ஷாமில் புனைவுகள்:தமிழ் இலக்கியச் செல்வாக்கு 129

# புதூகுஷ்ஷாம் அறிமுகம்

## இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் அறிமுகம்

செம்மொழியான தமிழ், சர்வ சமயங்கள் சார்ந்த மற்றும் சமயம் சாரா இலக்கியங்களால் செறிவு பெற்று திகழ்கிறது. எல்லா சமயத்தைச் சார்ந்த இலக்கியங்களும் தமிழில் காணப்படுவது தமிழின் சிறப்பாகும். சைவம், வைணவம், இஸ்லாம், பௌத்தம், சமணம் மற்றும் சமயம் சாரா நெறிகளும் தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்றன. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பக்தி இலக்கியங்கள் பரிணமித்த காலகட்டத்தில் அறபு நாட்டிலே தோன்றிய ஏகத்துவ மார்க்கம், தமிழ் மண்ணுக்குள் அறிமுகமானது. சங்க காலம் தொட்டு தொடர்பு கொண்டிருந்த அறபு நாட்டவர் 'யவனர்' என்றும் பின்னர் 'சோனகர், துலுக்கர், முஸ்லிம்கள்' என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் சிங்கப்பூர், மலேசியா மற்றும் தூரகிழக்கு நாடுகளிலும் தென் ஆபிரிக்காவிலும் பரவிக்கிடக்கிறார்கள். இவ்வாறே முஸ்லிம்களது பரவல் தமிழ் மண்ணுள் புகுந்தது.

1950 ஆம் ஆண்டிற்கு முன்னர் தமிழ் மூதறிஞர் கூட இஸ்லாமிய தமிழ் இலக்கியம் என்றால் இரண்டு நூல்களைத்தான் அறிந்திருந்தனர். உமறுப் புலவரின் சீறாப்புராணம், மஸ்தான் சாகிபு பாடல் என்னும் இரண்டை மாத்திரமே தெரிந்து வைத்திருந்தனர். பிற்காலங்களில் தான் ஏனைய இலக்கியங்கள் தோன்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த வகையில் இஸ்லாம் வழியில் தமிழ் மொழியில் 1950 ஆம் ஆண்டு வரை ஈராயிரத்துக்கும் அதிகமான இஸ்லாமியத் தமிழ் இலக்கிய நூல்கள் தோன்றியுள்ளன. அவை நூலின் பெயர் மற்றும் ஆசிரியரின் பெயர் என்ற அடிப்படையில் அகரவரிசைப்படுத்தப்பட்டும் கால வரையறைப் பின்னணியிலும் மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை வெளியிட்டுள்ள நூல் விவரத்தொகுப்பில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். இன்றைய சூழ்நிலையில் இதுவும் ஒரு சாதனை எனக் கொள்ளலாம்.

மேலும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் தோன்றிய புதுவகைச்சிற்றிலக்கிய வடிவங்களாக கிஸ்ஸா, முனாஜத்து, நாமா, படைப்போர், மஸ்அலா, மாலை போன்றவற்றைக் குறிப்பிடலாம். அத்தோடு மேலும் பல இலக்கிய வடிவங்களாக கண்ணி, திருமண வாழ்த்து, நொண்டி நாடகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் முக்கியத்துவம் பெற்றவையாக காப்பியங்களும் விளங்குகின்றன. அவை தொடர்பாக பின்வருமாறு நோக்கலாம்.

## இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்கள் அறிமுகம்

காப்பியங்கள் எனும் போதே அவை தனிச்சிறப்புப் பொருந்தியவை. எந்த மொழியின் இலக்கியத்திலும் காப்பியங்கள் ஓர் முக்கிய இடத்தையே வகிக்கின்றன. ஒரு மொழியின் பழமை, அம்மொழியின் இலக்கியத் தரம், சொல்லாட்சியின் சிறப்பு, இலக்கிய நடை அழகு, அதன் ஊடான உணர்ச்சிப்பெருக்கு, கவிதை நயம், சொல் வளம் இவை அத்தனையையும் பிரதிபலித்ததாக அமைவதே காப்பியமாகும். தமிழ் மொழியில் இவ்வாறான அம்சங்களைக் கொண்ட காப்பியங்கள் பெருமளவிலே காணப்படுகின்றன.[1]

அந்த வகையில் இஸ்லாமிய அடிப்படையில் பல காப்பியங்கள் தமிழில் தோன்றியுள்ளன. இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்கள், அநேகமாக இஸ்லாமிய அடிப்படையிலே தான் அமைந்திருக்கும். அதிலும் பெரும்பாலானவை இஸ்லாமியப் பெரியார்களை கருப்பொருளாகக் கொண்ட, காப்பிய இலக்கணங்கள் அமைய பாடப்பட்டவையாகும். இஸ்லாமியப் பெரியாரின் உலக சாதனைகளை அதே அடிப்படையில் விவரிப்பனவாக சில அமைந்துள்ளன. மறைந்த பின்னர் சில பெரியார் செய்து காட்டிய ஆற்றல் மிக்க செய்கைகளை வருணிப்பனவாக வேறு சில காப்பியங்கள் காட்சி அளிக்கின்றன. இஸ்லாமிய வரலாற்றிலே தொடர்ச்சியாக நிகழ்ந்த சில போர்களை விளக்குவனவாக மற்றும் சில காப்பியங்கள் திகழ்கின்றன.

[1] உவைஸ், எம். எம்., (1973), இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்கள், ப. 1

ஒரு பெரியாரின் வாழ்க்கையிலே நிகழ்ந்த வியக்கத்தக்க ஒரே நிகழ்ச்சியைக் கருவாகக் கொண்டு இன்னும் சில காப்பியங்கள் விளங்குகின்றன. இவ்வாறு பல்வேறு வகையான காப்பியங்கள் தமிழிலே தோன்றி, தமிழ் இலக்கியப் பரப்பை பெருக்கிக் கொண்டு வந்துள்ளன.[1] அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்:

## பெருங்காப்பியங்கள்

பெருங்காப்பியங்கள் எனும் போது அவை அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு அம்சங்களையும் கொண்டதாக அமைந்திருக்கும். அந்த வகையில் இஸ்லாமிய அடிப்படையில் மேற்குறிப்பிட்ட நான்கு அம்சங்களையும் கொண்டதாக பல காப்பியங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.

நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் காப்பியங்களாக கி.பி 1703 ஆம் ஆண்டு உமறுப்புலவரால் இயற்றப்பட்ட சீறாப்புராணம் மற்றும் கி.பி 1732 இல் பனீ அகமது மரைக்காயரால் இயற்றப்பட்ட சின்னச்சீறா எனும் காப்பியங்கள் அமையப் பெற்றுள்ளன. இவ்வாறே நபிகளாரின் மறுமை வாழ்க்கையைக் கூறுவதாக கி.பி 1710 இல் செய்தக்காதிப் புலவரால் இயற்றப்பட்ட திருமணக்காட்சி எனும் காப்பியம் விளங்குகிறது.

மேலும் இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்ப கால கட்டத்தில் நடைபெற்ற பாதுகாப்புப் போர்களை விவரிப்பனவாக, கி.பி 1818 இல் குஞ்சுமூசுப் புலவரால் இயற்றப்பட்ட இறவுசுல்கூல் படைப்போரும் கி.பி 1821 ஆம் ஆண்டு சேகுனாப் புலவரால் இயற்றப்பட்ட புதூகுஷ்ஷாம் காப்பியமும் மற்றும் அதே ஆண்டில் வண்ணக்களஞ்சியப் புலவரால் இயற்றப்பட்ட தீன்விளக்கம் எனும் காப்பியமும் காணப்படுகின்றன. அத்தோடு கி.பி 1648 ஆம் ஆண்டு இமாம் ஹுஸைன் (றழி) அவர்களின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து பாடப்பட்டதாக கனகவிராயரின் கனகாபிஷேகமாலை அமைந்துள்ளது.

---

[1] உவைஸ், எம். எம்., (1990), இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு (தொகுதி இரண்டு), காப்பியங்கள், ப. 1

மேலும் அஹமது கபீறூர் ரிபாயி ஆண்டகையின் வாழ்க்கையை வர்ணிக்கும் வகையில், குலாம் காதிறு நாவலரால் ஆரிபு நாயகம் எழுதப்பட்டது. மேலும் இவரால் நாகூர்ப்புராணம் காப்பியம் கி.பி 1882 ஆம் ஆண்டு இயற்றப்பட்டுள்ளது. அத்தோடு சுலைமான் (அலை) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு கி.பி 1807 ஆம் ஆண்டு இராஜநாயகம் எனும் காப்பியம் வண்ணக்களஞ்சியப்புலவரால் இயற்றப்பட்டது.

மேலும் இப்றாஹீம் (அலை) அவர்களின் வாழ்க்கையைக் கருப்பொருளாய்க் கொண்டு கி.பி 1816 ஆம் ஆண்டில் திருமணிமாலை எனும் காப்பியம் செய்கு அப்துல் காதிறு நயினார் லெப்பை ஆலிம் புலவரால் பாடப்பட்டுள்ளது. மேலும் பல பெருங்காப்பியங்களாக கி.பி 1810 ஆம் ஆண்டில் சேகுனாப்புலவரால் பாடப்பட்ட குத்பு நாயகத்தையும் கி.பி 1812 ஆம் ஆண்டில் சேகுனாப்புலவராலேயே பாடப்பட்ட திருக்காரணப்புராணத்தையும் கி.பி 1814 ஆம் ஆண்டு வண்ணக்களஞ்சியப் புலவரால் இயற்றப்பட்ட குத்பு நாயகத்தையும் கி.பி 1816 இல் பதுறுதீன் புலவரால் இயற்றப்பட்ட முகைதீன் புராணத்தையும் கி.பி 1855 இல் ஐதுறூசு நயினார்ப் புலவரால் இயற்றப்பட்ட நவமணிமாலையையும் குறிப்பிடலாம்.

## சிறு காப்பியங்கள்

சிறு காப்பியங்கள் எனும் போது அவை அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கினுள் ஏதேனும் ஒன்று குறைவுற்று அமைந்திருக்கும். அந்த வகையில் இஸ்லாமிய அடிப்படையில் மேற்குறிப்பிட்ட அடிப்படையில் பல காப்பியங்கள் காணப்படுகின்றன. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் சிறுகாப்பியங்களை நோக்குகையில், ஆலிம் புலவரின் மிகுராசு மாலை, மின்னா நூறுத்தீன் புலவரின் பொன்னரிய மாலை, முஹம்மது முகியுதீன் லெப்பையின் சாதுலி நாயகம், முஹம்மது நூறுத்தீனின் மூசா நபி புராணம், செய்தக்காதிப்புலவரின் அபூசகுமா மாலை, பக்கீர் மதாறு புலவரின் இராசமணி மாலை, குங்சுமூசுப் புலவரின் செய்யிதத்துப் படைப்போர், மதாறு

சாகிப் புலவரின் யூஸுப் நபி கிஸ்ஸா, அப்துல் காதர் சாகிபுவின் சைத்தூன் கிஸ்ஸா போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**தற்காலக் காப்பியங்கள்**

பிற்காலங்களில் தோன்றிய, குறுங்காப்பியங்களாக அமையப்பெற்ற பல காப்பியங்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் தோன்றின. அவையே தற்காலக் காப்பியங்கள் எனப்படுகின்றன. அந்த வகையில் தற்காலக் காப்பியங்களாக, யூசுப் சுலைகா காவியம், காதல் யாத்திரை (லைலா – மஜ்னூன் குறுங்காப்பியம்) மற்றும் பிரளயம் கண்ட பிதா (குறுங்காப்பியம்) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வடிப்படையில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் பெருங்காப்பியங்கள் வரிசையில் முக்கியத்துவம் வாய்ந்ததோர் காப்பியமான புதூகுஷ்ஷாம் தொடர்பில் பின்வருமாறு நோக்கலாம்:

**புதூகுஷ்ஷாம்**

இஸ்லாமியத் தமிழ் காப்பியங்களுள் காலத்தால் ஒன்பதாவது இடத்தைப் பெறுவது புதூகுஷ்ஷாம் என்னும் பெருங்காப்பியமாகும். செய்யுட்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் இக்காவியம் பாரிய காவியமாகத் திகழ்கிறது. இந்த அடிப்படையில் முதலாவது காப்பியமாக விளங்குகின்றது புதூகுஷ்ஷாம். இது தமிழிலக்கிய உலகில் புலவர் நாயகம் என்றும் சேகுனாப்புலவர் என்றும் அழைக்கப்படும் செய்கப்துல் காதிறு நெயினார் லெப்பை ஆலிம் புலவர் அவர்களால் இயற்றப்பெற்றது. இவ்வாசிரியர் நான்கு இஸ்லாமியத் தமிழ் காப்பியங்களை இயற்றிய பெருமைக்குரியவர்.

புதூகுஷ்ஷாம் காப்பியம் கி.பி 1821 ஆம் ஆண்டு இயற்றப்பட்டுள்ளது. இதற்கான அகச்சான்றுகள் காப்பியத்துள் காணப்படுகின்றன. இக்காப்பியம் பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வரலாற்றில்

பிற்பகுதியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது. புதூகுஷ்ஷாம் என்பதில் 'புதூஹ்' என்பது 'பத்ஹ்' என்பதன் பன்மையாகும். புதூஹ் (futuh) என்பது 'வெற்றிகள்' என்பதையும் ஷாம் (sham) என்பது 'சிரியா' நாட்டினையும் குறிப்பதாகும். எனவே இக்காப்பியம் சிரியா நாட்டின் வெற்றியைப்பற்றி விரித்துரைக்கிறது. ஷாம் நாடு அறபு நாட்டின் வடதிசையில் அமைந்து உரோமப் பேரரசின் ஒரு பகுதியாயிருந்தது. 'சிரியா' என்பது அந்நாட்டின் இக்காலப் பெயர். ஷாம் என்பது அறபு வழக்கில் இடக்கைப் பக்கத்தில் இருப்பதைக் குறிக்கும். அறபு நாட்டார் சூரியன் உதிக்கும் திக்கை நோக்கி நிற்குங்கால் இடப்புறமாய் அமைந்து விளங்கும் நாடு ஷாம் என அவர்களால் வழங்கப்பட்டது.

## மூல நூல் விளக்கம்

சேகுனாப்புலவரின் புதூகுஷ்ஷாம் காப்பியத்திற்கு மூலநூலாய் அமைந்தது அறபு மொழியிலுள்ள புதூகுஷ்ஷாம் என்னும் நூலேயாகும். புதூகுஷ்ஷாம் என்னும் அறபு நூலை இயற்றியவர் அபூ அப்துல்லாஹ் முகம்மது பின் உமர் என்பவராவார். இவர் அல்வாக்கிதி எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார். அல்வாக்கிதி என்பது இவருக்குக் குடும்பப் பெயராய் அமைந்து பின்னர் சிறப்புப் பெயராகி விட்டது. இவர் ஒரு தலைசிறந்த வரலாற்றாசிரியர் எனவும் கருதப்பட்டார். மேலும், இவர் மாலிக் பின் அனஸ் என்பவரினதும் சுபியான் அல் தௌரி என்பவரினதும் மாணவராக இருந்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இவர் வரலாற்றுத்துறை, நீதித்துறை, ஹதீஸ் கலை போன்றவற்றில் சிறந்து விளங்கியுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது. இவர் சுல்தான் ஹாறூன் அல்றஷீத் அவர்களினால் காழியாக நியமிக்கப்பட்டுள்ளார். அத்தோடு சுல்தான் மஃமூன் காலத்தில் அரச பதவியை வகித்துள்ளார். மேலும் இவருக்கு அபார ஞாபக சக்தி இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. இவர் ஹிஜ்ரி நூற்று முப்பதாம் ஆண்டு பிறந்து ஹிஜ்ரி இருநூற்று ஏழாம் ஆண்டு மறைந்தார் எனக் கூறப்பட்டுள்ளது. இவர் சிரியாவை வெற்றிக் கொண்டமை பற்றி மாத்திரமல்லாது

ஈராக் வெற்றி கொள்ளப்பட்டமை தொடர்பிலும் இலக்கியம் படைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.[1]

### காப்பிய அமைப்பு

புதூகுஷ்ஷாம் காப்பியத்துள் ஆறாயிரத்து எழுநூற்று எண்பத்து ஆறு செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன. இச்செய்யுட்களைச் சேகுனாப்புலவர் மூன்று காண்டங்களாகவும் அறுபத்தொரு படலங்களாகவும் பாகுபடுத்தியுள்ளார். அத்தோடு ஆறாயிரத்து எழுநூற்று எண்பத்தாறு திருவிருத்தங்களும் காப்பு விருத்தமொன்றும் இப்பெருங் காப்பியத்திலடங்கியுள்ளன. மேலும், இதில் காண்டங்களாக முஹம்மதிய்யா, சித்தீக்கிய்யா, பாறூக்கிய்யா என்ற அமைப்பு முறையில் அமைந்துள்ளன. இம்மூன்று காண்டங்களுள் முதல் காண்டமான முஹம்மதிய்யா காண்டம் பதினொரு படலங்களையும் தொளாயிரத்து அறுபத்தைந்து திருவிருத்தங்களையும் கொண்டது. மேலும், இக்காண்டம் பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா நகர் சென்று அரசு செலுத்துவதிலிருந்து தொடங்குகிறது. இரண்டாவது காண்டமான சித்தீக்கிய்யா காண்டம் பதின்மூன்று படலங்களையும் ஆயிரத்து எழுநூற்று நாற்பத்தேழு திருவிருத்தங்களையும் கொண்டுள்ளது. இதில் கலீபா அபூபக்கர் சித்தீக் (றழி) அவர்களின் அரசியல் முறைகள் விவரிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் காண்டமான பாறூக்கிய்யா முப்பத்தேழு படலங்களையும் நாலாயிரத்து எழுபத்து நான்கு திருவிருத்தங்களையும் கொண்டது. இக்காண்டம் கலீபா உமர் (றழி) அவர்களின் அரசாட்சியையும் அவர்களது ஆட்சியில் நடைபெற்ற சிரிய நாட்டுப்போர் வெற்றியையும் விரிவாக எடுத்துரைக்கிறது.

---

[1] உவைஸ், எம்.எம்., *(1990)*, இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு (தொகுதி இரண்டு), காப்பியங்கள், ப. *370*

## படல விளக்கம்

மூன்று காண்டங்களிலுமுள்ள படலங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை சுருக்கமாக பின்வருமாறு விளக்கலாம் :

### 1. கடவுள் வாழ்த்துப் படலம்

ஏனைய காப்பியங்களில் உள்ளது போன்றே கடவுள் வாழ்த்து புதூகுஷ்ஷாமிலும் இடம்பெற்றுள்ளது. காப்புச் செய்யுளைத் தவிர்த்துக் கடவுள் வாழ்த்துப் படலத்தில் எட்டுச் செய்யுட்கள் இறைவனைப் புகழ்ந்து அவன் அருளைக் கோரிப் பாடப்பட்டுள்ளன. அடுத்த இரண்டு பாடல்களில் பெருமானார் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாடியுள்ளார் புலவர். பின்னர் எல்லா நபிமார்களையும் நான்கு கலீபாக்களையும் ஹஸன், ஹுஸைன் ஆகிய இருவரையும் சுவர்க்கத்திற்குரியவர்கள் என நபி (ஸல்) அவர்களால் நன்மாராயம் கூறப்பட்ட பத்து நபித் தோழர்களையும் என மொத்தமாக எல்லா நபித் தோழர்களையும் போற்றிப் பாடியுள்ளார்.

அடுத்து நான்கு மதுகபுகளையும் நிறுவிய நான்கு இமாம்களையும் முகையுத்தீன் ஆண்டவரையும் ஆரிபு நாயகரையும் நாகூர் ஆண்டகையையும் சதக்கத்துல்லா அப்பாவையும் புகழ்ந்துப் பாடியுள்ளார். மேலும், ஆரிபீன்கள், சாதிகீன்கள், ஆஷிகீன்கள், ஆபிதீன்கள் ஆகிய நால்வகைச் சான்றோரையும் பாடிப் புகழ்கின்றார் புலவர். இவ்வாறு கடவுள் வாழ்த்துப் படலம் அமைந்துள்ளது.

### 2. நாட்டுப் படலம்

ஷாம் நாட்டின் சிறப்புக்களும் அதன் இயற்கை வளங்களும் சிறப்பாக இப்படலத்தில் இடம் பெற்றுள்ளன.

### 3. நகரப் படலம்

மதீனா நகரத்தின் சிறப்புக்களும் அதன் இயற்கை வர்ணிப்புக்களும் இப்படலத்தில் இடம் பெற்றுள்ளன.

### *4. றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம்*

இப்படலத்தில் நபி (ஸல்) அவர்கள் மக்கமா நகரை விட்டும் நீங்கி மதீனாவில் அரசு செலுத்திய விதம் குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நபி (ஸல்) அவர்களது சிறப்புக்களும் வர்ணிப்புக்களும் இடம் பெற்றுள்ளன.

### *5. கிறக்கீலுக்கு நிருபம் விடுத்த படலம்*

இதில் பெருமானார் (ஸல்) அவர்கள் உரோமச் சக்கரவர்த்தியாகிய கிறக்கீலுக்கு நிருபம் அனுப்பிய வரலாறு விளக்கப்பட்டுள்ளது. மேலும், கிறக்கீலுக்கும் அபூசுப்யானுக்குமிடையில் நடைபெற்ற உரையாடலும் இடம் பெற்றுள்ளது.

### *6. கிறக்கீலுடன் போர்புரி படலம்*

நபி (ஸல்) அவர்கள் அனுப்பிய நிருபத்தையும் அழைப்பையும் உரோமச் சக்கரவர்த்தி கிறக்கீல் புறக்கணித்து விட்டான். இஸ்லாத்தின் மேன்மையை அவன் உணர்ந்த போதிலும் இறைவனின் பகைக்கு அஞ்சாது தன் இனத்தாரின் பகைக்கே அஞ்சினான். இதனை அறிந்த நபி (ஸல்) அவர்கள் படையெழுச்சியொன்றுக்கு உத்தரவிட்டமை தொடர்பிலும் அப்போர் நடைபெற்ற விதம் குறித்தும் இப்படலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### *7. தபூக்கில் திறை கொண்ட படலம்*

முஅத்தாவின் போர்களத்தில் புறமுதுகிட்டு பின்வாங்கிய உரோமச் சக்கரவர்த்தி அவமானத்திற்குள்ளானான். எனவே அத்தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியாமல் வலிமைமிக்க அவனது படையொன்றை மதீனாவை நோக்கி அனுப்பினான். இதனை கேள்வியுற்று நபி (ஸல்) அவர்களும் படையெழுச்சிக்கு ஆயத்தமானமை தொடர்பிலும் தபூக்கில் திறை பெற்றமை தொடர்பிலுமான வரலாறுகள் இப்படலத்தில் இடம் பெற்றுள்ளன.

## 8. மூவர் பிழை பொறுத்த படலம்

பெருமானார் (ஸல்) அவர்களின் படையெழுச்சியினோடு சேர்ந்து செல்லாத நபித் தோழர்களான கருபு (றழி), ஹிலால் (றழி), முறாறா (றழி) போன்றோர் தாம் இழைத்த குற்றத்திற்காக பெருமானாரிடம் மன்னிப்புக் கோரி பின் மன்னிப்பினை பெற்றுக் கொண்ட வரலாற்றை இப்படலம் கூறுகிறது.

## 9. உஸாமா தலைமை பூண்ட படலம்

கிறக்கீலுடன் போரிட்டு முஅத்தாவின் களத்தில் வீரமரணம் எய்திய முதலாம் தளபதியும் பெருமானாரின் வளர்ப்பு மகனுமான ஸைத் (றழி) அவர்களின் புதல்வாரன உஸாமா (றழி) அவர்களின் தலைமையில் படையொன்று ஷாம் நோக்கி அனுப்பப்பட்டமை தொடர்பிலும் உஸாமா (றழி) இளமையானவராக இருந்தமையால் சிலர் அவரை பின்தொடர்ந்துச் செல்லத் தயங்கிய போது பெருமானார் (ஸல்) ஆற்றிய உரை பற்றிய விடயங்களும் இப்படலத்தில் கூறப்பட்டுள்ளன.

## 10. அபூபக்கரை முன்னிலை நிறுத்த படலம்

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு உடல் நலம் குறைவுற்ற போது நபி (ஸல்) அவர்கள் இமாமாக நின்று தொழுவிக்க இயலாமல் போனதால் அவர்களின் ஸ்தானத்தில் அபூபக்கர் (றள ழி) அவர்களை நிறுத்திய வரலாறு இப்படலத்தில் கூறப்பட்டுள்ளது.

## 11. நபி நாயகம் உபாத்துப் படலம்

நபி (ஸல்) அவர்களுக்கு உடல்நலக் குறைவினால் ஏற்பட்ட வேதனைகளும் அவர்களது வபாத் தொடர்பிலும் இப்படலம் விளக்குகிறது. மேலும் நபி (ஸல்) அவர்களது வபாத்தினால் ஸஹாபாத் தோழர்களின் கவலைக்கிடமான நிலைமைகளும் இப்படலத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

### *12.* அபூபக்கர் அரசுரிமைப் படலம்

நபி (ஸல்) அவர்களது வபாத்துக்கு பின் ஸஹாபாத் தோழர்கள் ஒன்று கூடி அபூபக்கர் (றழி) அவர்களை கலீபாவாக நியமித்தமை தொடர்பாகவும் அபூபக்கர் (றழி) அவர்களது குணாம்சங்களும் இப்படலத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

### *13.* படையெழுச்சிப் படலம்

நபி (ஸல்) அவர்களது இறுதிக்காலப்பகுதியில் முஅத்தாவில் கொல்லப்பட்டவர்களின் பழி தீர்ப்பதற்காகவும் எல்லைப் புறக் காவல் நடவடிக்கைக்காகவும் உஸாமா (றழி) யின் தலைமையில் அனுப்பி வைக்கப்பட்ட படை அன்னாரின் மறைவினால் தொடர்ந்து செல்லாது திரும்ப அதனை அபூபக்கர் (றழி) அவர்கள் பொறுப்பேற்று நிறைவேற்றியமை தொடர்பாகவும் அபூபக்கர் (றழி) அவர்களால் ஆற்றப்பட்ட உரைகள் மற்றும் எழுதப்பட்ட கடிதங்கள் தொடர்பாகவும் இப்படலம் கூறுகிறது.

### *14.* தபூக்குக் கொண்ட படலம்

அபூபக்கர் (றழி) அவர்கள் எஸீது (றழி) அவர்களை படைத்தளபதியாக நியமித்து தபூக்கு நோக்கி அனுப்பியமையும் அங்கு உரோம தளபதி நாத்திலிக்கும் றபீஅத்து (றழி) அவர்களுக்குமிடையில் நடைபெற்ற போர்கள் தொடர்பில் கூறப்பட்டுள்ளதுடன் இறுதியில் தபூக் நகர் வெற்றி கொள்ளப்பட்டமை தொடர்பிலும் கூறப்பட்டுள்ளன.

### *15.* பலஸ்தீன் கொண்ட படலம்

அபூபக்கர் (றழி) அவர்கள் ஏனைய அறபு நாடுகளான மக்கா, ஹிஜாஸ், யமன், ஸாகில் கிமான், தாயிப் போன்றவற்றிலிருந்து படையுதவியைப் பெற்று ஓர் பெரும் படையை பலஸ்தீனை நோக்கி அனுப்பி இறுதியில் பலஸ்தீன் வெற்றி கொள்ளப்பட்ட வரலாறு இப்படலத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இதன் போது அபூபக்கர் (றழி)

அவர்கள் கூறிய போர் உபதேசங்களும் இப்படலத்தில் இடம் பெற்றுள்ளன.

### *16.* காலித் இப்னு வலீத் தலைமை பூண்ட படலம்

இப்படலத்தில் அபூ உபைதா (றழி) அவர்களை தலைமைப் பதவியிலிருந்து நீக்கி போர் நுட்பங்களையும் தந்திரங்களையும் அறிந்த காலித் இப்னு வலீத் (றழி) அவர்களை நியமித்த வரலாறு கூறப்பட்டுள்ளதுடன் காலித் (றழி) அவர்களால் அரிக்கா, சைமனா, ததம்மர், சவுசான் போன்ற நகரங்கள் வெற்றி கொள்ளப்பட்டமை தொடர்பிலும் விளக்கப்பட்டுள்ளன.

### *17.* உமறுகத்தாப் (றழி) அரசியற் படலம்

இப்படலத்திலே அபூபக்கர் சித்தீக் (றழி) அவர்களுக்கு பின் அரசு செலுத்திய உமர் (றழி) அவர்களது அரசாட்சி துவங்கும் விதம் குறித்து வர்ணிக்கப்பட்டுள்ளதுடன் உமர் (றழி) அவர்களின் நீதியான ஆட்சி முறைமைக் குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளன.

### *18.* அபூ உபைதா தலைமை பூண் படலம்

உமர் (றழி) அவர்கள் மதீனாவில் அரசு செலுத்திக் கொண்டிருக்கையில் திமிஷ்க் நகரைக் கைப்பற்றிய முஸ்லிம்களின் படைத்தளபதி காலித் இப்னு வலீத் (றழி) அவர்கள், அபூபக்கர் (றழி) அவர்களுக்கு எழுதிய கடிதத்துடன் அகபா (றழி) அவர்கள் வந்தமை தொடர்பிலும் அப்பொழுது ஆட்சியிலிருந்த உமர் (றழி) அவர்கள் அக்கடிதத்தை பார்த்து விட்டு அபூ உபைதா (றழி) அவர்களை அமீருல் அக்பராகவும், காலித் இப்னு வலீத் (றழி) அவர்களை அமீருல் ஜைஸாகவும் நியமித்து, காலித் இப்னு வலீத் அவர்களுக்கு கடிதம் எழுதியமை தொடர்பிலும் கூறப்பட்டுள்ளது.

மேலும் காலித் இப்னு வலீத் அவர்களுக்கும் கலீபா உமர் (றழி) அவர்களுக்குமிடையிலான கடிதப்பறிமாற்றங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தோடு

உமர் (றழி) அவர்களின் கட்டளைக்கிணங்க அபூ உபைதா (றழி) அவர்கள் தலைமை பூண்டமை தொடர்பிலும் இப்படலம் விவரிக்கிறது.

## 19. அபுல் குதுசு கொண்ட படலம்

இதில் அஸ்மா (றழி) அவர்களுக்கும் அவரது மகனார் அப்துல்லாஹ் இப்னு ஜஹ்பர் (றழி) அவர்களுக்குமிடையிலான உரையாடல் கூறப்பட்டுள்ளது. அத்தோடு அபூ உபைதா (றழி) அவர்கள் தனது ஆலோசனை சபையைக் கூட்டி கலந்தாலோசித்து அபுல் குதுசு மீது போர் தொடுத்து கைப்பற்றியமை தொடர்பிலும் கூறப்பட்டுள்ளது.

## 20. கன்சரீன் சமாதானப் படலம்

இப்படலத்தில் அபூ உபைதா (றழி) அவர்கள் திமிஸ்கை விட்டு ஏனைய நகரங்கள் மீது படையெடுத்தமை தொடர்பில் கூறப்பட்டுள்ளது. மேலும் ஹிறக்கீல் மன்னன் அபூ உபைதா (றழி) அவர்களுக்கு எழுதிய கடிதம் தொடர்பிலும் அக்கடிதத்தை பெற்று வந்த பாதிரிக்கும் காலித் இப்னு வலீத் (றழி) அவர்களுக்குமிடையில் இடம்பெற்ற உரையாடல்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு ஹிறக்கீலுக்கும் அபூ உபைதா (றழி) அவர்களுக்குமிடையில் ஓர் சமாதான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு கன்சரீன் எல்லைகள் பாதுகாக்கப்பட்டமை தொடர்பாகவும் இப்படலம் விவரிக்கிறது.

## 21. கன்சரீன் கொண்ட படலம்

அபூ உபைதா (றழி) அவர்கள் தோழர்களுடன் கிம்மசின் அருகில் பாசறை அமைத்து, கன்சரீனுக்கு கொடுத்த தவணைக் காலம் முடிவதை எதிர்பார்த்துக் காத்திருந்தமை, பின் உமர் (றழி) அவர்கள் அபூ உபைதா (றழி) அவர்களுக்கு கடிதமொன்று எழுதியமை, கன்சரீன் மன்னன் ஒப்பந்தத்தை மீறி வஞ்சகத்துடன் போரிட வந்தமையால் முஸ்லிம் படைகளும் போரிட்டமை

போன்றவற்றுடன் காலித் இப்னு வலீத் (றழி) அவர்களது வீரப்போராட்டமும் இப்படலத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## *22. பகுலபு கொள் படலம்*

பகுலபு நகரத்தவரின் உடைமைகளைக் கொள்ளையிட்டதால் அந்நாட்டு மன்னன் கோபங்கொண்டு தனது படைகளை அனுப்ப அவர்களுடன் அபூ உபைதா (றழி) அவர்களின் படை போரிட்டு இறுதியில் மன்னன் திறை கொடுக்கும் நிலைமையை ஏற்றுக் கொண்டமை தொடர்பிலும் இப்படலம் கூறுகிறது.

## *23. கிம்மசு அரண் முற்றிய படலம்*

அபூ உபைதா (றழி) அவர்கள், மைசறா (றழி) மற்றும் அம்ர் (றழி) ஆகியோரிடம் கொடியைக் கொடுத்து கிம்மசுக்கு அனுப்பியமை தொடர்பிலும் கிம்மசு மன்னனின் கடிதப் பரிமாற்றங்களும் இப்படலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இறுதியில் ஓர் சமாதான உறுதி மொழியினால் கிம்மசு நகர் பாதுகாக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

## *24. முப்புரங் கொண்ட படலம்*

முஸ்லிம் படையினரால் றசுத்தன், கிமாத்து, சீறாஜ் எனும் மூன்று நகரங்கள் வெற்றி கொள்ளப்பட்டமையை இப்படலம் விவரிக்கிறது. அத்தோடு இம்மூன்று நகரத்து மன்னர்களும் திறை செலுத்தி போரை தடுத்துக்கொண்டமை தொடர்பிலும் இப்படலத்தில் கூறப்பட்டுள்ளன.

## *25. கிம்மசு கொண்ட படலம்*

தளபதியவர்கள் கிம்மசு நகரை முற்றுகையிட்டமையும், பின் கறுபிசு மன்னன் நஞ்சூட்டிய அம்புகளைக் கொண்டு முஸ்லிம்களின் படையை எதிர்த்தமை தொடர்பிலும் இப்படலம் கூறுகிறது.

மேலும் இப்போரில் இக்ரிமா (றழி), மிறுக்கால் (றழி), கைசிப்னு ஹுபைறதுல் முறாதி (றழி) மற்றும் காலித் இப்னு வலீத் (றழி) ஆகியோரது வீரப்போராட்டங்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இறுதியில் கிம்மசு மக்கள் சிலர் இணக்கம் அடைந்து இஸ்லாத்தை ஏற்றதாகவும் இன்னும் சிலர் திறை கொடுக்க சம்மதித்ததாகவும் இப்படலத்தில் கூறப்பட்டுள்ளது.

### *26. மாகான் புறப்படு படலம்*

அறபிகள் இவ்வாறாக ஒவ்வொரு நகராக வெற்றி கொள்வதனைக் கண்டு உரோமர்கள் அச்சமடைந்து சிறந்த செல்வப் பெருக்குள்ள அறுமணிய நாட்டரசன் மாகான் என்பவனின் தலைமையில், ஐந்து வழியாகப் பிரிந்து, போருக்குப் புறப்பட்டமை தொடர்பில் இப்படலம் விவரித்துள்ளது.

### *27. எறுமூக்கில் பாசறை வகுத்த படலம்*

மாகான் பெரும் படையுடன் போருக்கு வந்திருப்பதை ஒற்றற்களினூடாக அறிந்து கொண்ட அபூ உபைதா (றழி) அவர்கள், முஸ்லிம்களின் ஆலோசனைகளைப் பெற்று இறுதியில் காலித் இப்னு வலீத் (றழி) அவர்களின் ஆலோசனையை ஏற்று எறுமூக் சென்று பாசறை அமைத்து தங்கிய வரலாறு இப்படலத்தில் கூறப்பட்டுள்ளது.

### *28. ஜபலா முதற் போர்புரி படலம்*

எறுமூக்கில் வந்திறங்கிய மாகான் அறபிகளும் வந்திருப்பதை அறிந்து அறபிகளுடன் இணங்கிப் போவதா அல்லது போராடுவதா எனக் கேட்டு ஹிறக்கீலுக்கு ஒரு கடிதம் அனுப்பினான். அதன் பின் ஹிறக்கீலின் பதிலின் படி ஜபலா, அறபிகளுடன் உடன்பாட்டிற்க்குச் செல்ல அதனை அறபிகள் ஏற்கவில்லை. பின் காலித் இப்னு வலீத் (றழி) அவர்களின் படையும் ஜபலாவின் படையும் போர் மேற்கொண்டமை தொடர்பில் இப்படலம் விவரிக்கிறது.

## 29. ஜவரைச் சிறைமீட்ட படலம்

இப்படலத்தில் அபூ உபைதா (றழி) அவர்கள், உமர் (றழி) அவர்களிடம் போருக்காக மேலும் படைகளை அனுப்பும் படி கேட்டு கடிதம் அனுப்பியமையும் அத்தோடு ஜபலாவால் சிறைபிடிக்கப்பட்ட ஜவரையும் காலித் இப்னு வலீத் (றழி) அவர்கள் மீட்டு வந்த வரலாறும் விவரிக்கப்பட்டுள்ளன.

## 30. மாகான் முதற் போர்புரி படலம்

காலித் (றழி) அவர்களும் தோழர்களும் மாகானுடன் போரிட்டமை தொடர்பில் இப்படலம் கூறுவதுடன் றாமாஸ் (றழி), கைஸ் (றழி) ஆகியோரது வீரப்போராட்டங்களும் இதில் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

## 31. திருமுகம் பெற்ற படலம்

இப்படலத்தில் மாகான், ஹிறக்கீலுக்கு எழுதிய கடிதம் தொடர்பிலும், அபூ உபைதா (றழி) அவர்கள் அப்துல்லாஹ் இப்னு குரூத்திடம் கொடுத்தனுப்பிய கடிதத்தை உமர் (றழி) அவர்கள் பெற்றுக் கொண்டமை தொடர்பிலும் பின் உமர் (றழி) அவர்கள் அபூ உபைதா (றழி) அவர்களுக்கு சபுறு செய்யுமாறு பணித்து எழுதிய கடிதம் தொடர்பிலும் கூறப்பட்டுள்ளன.

## 32. இரண்டாம் போர்புரி படலம்

மாகானின் கடிதத்திற்கு ஹிறக்கீலிடமிருந்து பதில் வரத் தாமதித்ததால் ஏழு நாட்கள் வரை எறுமூக்கில் இரண்டாம் போர் நடைபெறாதிருந்தது. ஆயினும் சிறிது நாட்களின் பின் இரண்டாம் தடவையாகவும் போர் தொடர்ந்தது. இதில் ஜபலாவின் போராட்டம் முக்கியப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு இப்போரில் ஸஹாபாக்கள் பலர் ஷஹீதானமையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 33. மூன்றாம் போர்புரி படலம்

மூன்றாவது தடவையாக நடைபெற்ற போர்பற்றி இப்படலம் கூறுகிறது. இப்போரில், துல்கிலாஸ் (றழி), சறுக்கபீல் (றழி), லிறார் (றழி), காலித் (றழி) உட்பட ஸஹாபாப் பெண்மணிகளினது போர்களச் செயற்பாடுகள் குறித்தும் இப்படலம் கூறுகிறது.

### 34. மாகான் போர் புரிந்த படலம்

இப்படலத்தில் மாகானுடன் நடந்த போர் விவரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு சுஜத் என்பவரின் தந்திரம் அறபிகளுக்கு சாதகமாய் அமைந்த விதமும் விளக்கப்பட்டுள்ளது. அபூ உபைதா (றழி) அவர்களுக்கும் சறுசறு என்பவனுக்குமிடையிலான போராட்டமும் கூறப்பட்டுள்ளது. இறுதியில் சறுசறு கொல்லப்பட்ட செய்தியும் மாகானின் போராட்டமும் விளக்கப்பட்டுள்ளன.

### 35. சூறை கொண்ட படலம்

றூமிகள் விட்டுச் சென்ற பொருட்களை ஸஹாபாக்கள் பெற்றுக்கொண்டமை, றூமிகளில் ஓரிலட்சத்தையாயிரம் பேர் இறந்தமை, ஸஹாபாக்களில் நாலாயிரம் பேர் ஷஹீதானமை தொடர்பான தகவல்கள் இப்படலத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

### 36. மாகான் வதையுண்ட படலம்

இப்படலத்தில் மதீனாவிலிருந்து கலீபா உமர் (றழி) அவர்களால் அனுப்பப்பட்ட படை வந்து சேர்ந்தமையும், பின் நுஃமான் (றழி) அவர்கள் மாகானுடன் போரிட்டு அவனைக் கொன்றமை தொடர்பிலும் இப்படலத்தில் கூறப்பட்டுள்ளன.

### 37. ஆவணம் விடுத்த படலம்

அபூ உபைதா (றழி) அவர்கள், தான் திமிஸ்கிலிருந்து எறுமூக் வந்தமை, பின் மாகான் கொல்லப்பட்டமை, தொடர்பான அனைத்து அம்சங்களையும்

விவரித்து கலீபா உமர் (றழி) அவர்களுக்கு ஓர் கடிதம் அனுப்பியமை தொடர்பான விடயங்கள் இப்படலத்தில் கூறப்பட்டுள்ளன. மேலும் உமர் (றழி) அவர்கள் அக்கடிதத்தைப் பார்த்து உவகையடைந்தமையும், அதன் பின் பைத்துல் முகத்தஸ் மீது படையெடுக்குமாறு கட்டளையிட்டமை தொடர்பிலும் விவரிக்கப்பட்டுள்ளன.

### *38.* உமறுகத்தாப் (றழி) அவர்கள் பைத்துல் முகத்தசுக்கெழுந்த படலம்

அபூ உபைதா (றழி) அவர்கள் கலீபாவின் கட்டளைக்கிணங்க ஆறு அமீர்களை நியமித்து முப்பதாயிரம் வீரர்களை பைத்துல் முகத்தஸை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அப்பொழுது றூமிகளின் அரசன் முன்னைய வேதங்களை அறிந்திருந்தமையால் உமர் (றழி) அவர்கள் தொடர்பான முன்னறிவிப்புக்களை அவரிடம் கண்டால் தான் முகத்தஸை விட்டுத் தருவதாகவும் அவ்வாறு இல்லாமலிருந்தால் போரிடுவதாகவும் கூறி ஓர் கோரிக்கையை முன் வைத்தான். இதற்கு அபூ உபைதா (றழி) அவர்கள் உடன்பட்டு அவ்வாறே செய்வதாகக் கூறி கலீபா உமர் (றழி) அவர்களுக்கு இவ்விடம் வருமாறு கூறி ஓர் கடிதம் அனுப்பினார்கள். அவ்வாறே உமர் (றழி) அவர்களும் பைத்துல் முகத்தஸ் வந்து சேர, பின் கலீபாவின் சொற்பொழிவு நிகழ்ந்தது. இவ்வாறான செய்திகளை இப்படலம் கூறுகிறது.

### *39.* பைத்துல் முகத்தஸ் கொண்ட படலம்

இதில் உமர் (றழி) அவர்களும் அபூ உபைதா (றழி) அவர்களும் மற்றும் சில ஸஹாபாத் தோழர்களுடன் பைத்துல் முகத்தஸுக்குச் சென்று, அங்கு அரசன் தான் முன்னறிவிப்புக்களில் உணர்ந்தவாறு உமர் (றழி) அவர்களைக் கண்டதும் எவ்வித போருமின்றி பைத்துல்முகத்தஸை கலீபாவிடம் ஒப்படைத்தார்கள். இதனை இப்படலம் விவரிக்கின்றது.

## 40. கருபுல் அருபாறு ஈமான் கொண்ட படலம்

பைத்துல் முகத்தஸில் உமர் (றழி) அவர்களைச் சூழ, ஸஹாபாக்கள் இருக்கையில் கருபுல் அருபாறு என்பவர் வந்து உமர் (றழி) அவர்களின் கையைப் பிடித்து இஸ்லாத்தை ஏற்று தான் ஈமான் கொண்ட வரலாற்றைக் கூறுவதாக இப்படலம் முழுவதும் அமையப் பெற்றுள்ளது.

## 41. உமறு கத்தாப் (றழி) மதீனம் புக்க படலம்

இப்படலம், உமர் (றழி) அவர்கள், அபூ உபைதா (றழி) அவர்களிடம் இருபதினாயிரம் வீரர்களைச் சேர்த்து கலபு, முஆர்றாத்து, அந்தாக்கிய்யா ஆகிய நகரங்கள் மீது படையெடுக்கும் படி பணித்து விட்டு, மதீனா நகர் வந்தடைந்தமை தொடர்பில் விரிவாகக் கூறுகிறது.

## 42. கலபு அரண் முற்றிய படலம்

உமர் (றழி) அவர்கள் மதீனாவுக்குத் திரும்பிய பின், அபூ உபைதா (றழி) அவர்கள் கைசாரியா, கிஸ்தந்தீனியா போன்ற நகரங்களுக்கு முஸ்லிம் படைகளை அனுப்பியமை தொடர்பாகவும் கலபின் அரசன் யூக்கினாவுக்கும் அவரது தம்பி யூகினாவுக்குமிடையிலான உரையாடலும் இப்படலத்தில் கூறப்பட்டுள்ளதுடன் யூக்கினா தன் படையுடன் சென்று முஸ்லிம் படையுடன் போரிட்டமையும் அதில் கருபுல் (றழி) அவர்களது போராட்டமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அடுத்து யூக்கினா, தன் படையிலுள்ளோர் திறை செலுத்தியமையினால் அவர்களை கொன்றொழித்தமையும் இதனை கேள்வியுற்ற காலித் (றழி) அவர்கள் பெரும் சமர் செய்த வரலாறும் கூறப்பட்டுள்ளதுடன் இறுதியில் கலபு நகர் முற்றுகையிடப்பட்டதையும் இப்படலம் விவரிக்கிறது.

## 43. இருவரின் வினை முதிர்ச்சி படலம்

முஸ்லிம் படையினருக்காக உணவுப்பண்டங்கள் வாங்கி வரச் சென்ற சில ஸஹாபாக்களை, யூக்கினாவால் அனுப்பப்பட்ட றூமிகள் கண்டந்துண்டமாக வெட்டினர்.

இதனை அறிந்த காலித் (றழி) அவர்கள் போருக்காகச் சென்ற வரலாற்றை இப்படலம் கூறுகிறது.

அதேபோல் இப்படலத்தில் உமர் (றழி) அவர்களுக்கும் அபூ உபைதா (றழி) அவர்களுக்குமிடையில் இடம்பெற்ற கடிதப்பறிமாற்றங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தோடு மதீனாவிலிருந்து ஷாம் நோக்கி போருக்காக இன்னொரு படையும் வர உத்தேசித்தமையாலே இப்படலம் இருவரின் வினைமுதிர்ச்சி படலம் எனப்பட்டது.

### *44. கலபு கொண்ட படலம்*

கலீபா உமர் (றழி) அவர்கள் புதிதாக ஐந்நூறு வீரர்களை ஷாமிற்கு அனுப்பியமையும், அப்படையினர் வரும் வழியில் நடக்கும் விடயங்களும் இப்படலத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஸஹாபாக்கள் வீரதீரமாகப் போரிட்டு கலபினை மீட்டுக் கொண்டமை பற்றியும் அதில் போரிட்ட தாசிமின் வீரச் செயல்கள் கூறப்பட்டுள்ளதுடன் இறுதியில் யூக்கினாவும் இன்னும் சில றூமிகளும் இஸ்லாத்தை ஏற்றதாகவும் ஏனையோர் திறை செலுத்தியதாகவும் இப்படலத்தில் கூறப்பட்டுள்ளன.

### *45. அகுசாசு கொண்ட படலம்*

இப்படலத்தில் யூக்கினா நபி (ஸல்) அவர்கள் தொடர்பில் கூறிய கூற்றுக்கள் மற்றும் தான் அறபு மொழியை நாகரிகமாக பேசுவதன் காரணத்தையும் அத்தோடு தான் கண்ட கனவை விளக்கியுள்ளமையும் இடம் பெற்றுள்ளது. அத்தோடு அகுசாசு நகர் வெற்றிக் கொள்ளப்பட்ட வரலாறும் கூறப்பட்டுள்ளது.

### *46. யூக்கினா தலைமை பூண்ட படலம்*

யூக்கினா அந்தாக்கியா மீது படையெடுத்துச் சென்றமையும் அபூ உபைதா (றழி) அவர்கள் உமர் (றழி) அவர்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பியமை தொடர்பாகவும் இப்படலத்தில் கூறப்பட்டுள்ளன. மேலும் யூக்கினா தன் தந்திரத்தினால் ஹிறக்கீல் மன்னனிடமிருந்து

அந்தாக்கியாவின் பிரதானி என்ற பட்டத்தை பெற்றுக் கொண்ட வரலாறும் இதில் கூறப்பட்டுள்ளது.

### 47. லிறாரைச் சிறைப்படுத்திய படலம்

ஹாயம் எனப்பட்ட றூமானியன், உணவுப் பொருட்கள் கொண்டு வரும் வழியில் லிறார் இப்னு அஸ்வர் (றழி) அவர்களையும் இன்னும் இருநூறு வீரர்களையும் சிறைபிடித்து தலைவனிடம் ஒப்படைத்தமை தொடர்பிலும் இறுதியில் லிறார் அவர்கள் வதைக்கப்பட்ட நிகழ்வுகளையும் இப்படலம் விவரிக்கிறது.

### 48. அந்தாக்கியா மேற் செல் படலம்

இப்படலத்தில் ஹாயம் என்பவரால் சிறையில் அகப்பட்டிருந்த சுபைனா (றழி) அவர்கள் தப்பித்துச் செல்கையில் நடந்த சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், கலீபா உமர் (றழி) அவர்களின் கட்டளைக்கிணங்க அந்தாக்கியா நோக்கி படைமேற் கொண்டமை பற்றியும் இப்படலம் கூறுகிறது.

### 49. கிறக்கீல் புறப்படு படலம்

அந்தாக்கியாவில் ஸஹாபாக்கள் வந்து தங்கியிருப்பதை அறிந்த ஹிறக்கீல் அவ்விடத்துக்கு புறப்பட்டு வருவதை இப்படலம் விவரிக்கிறது. அதேவேளை றிபாஅத்து (றழி) அவர்களுக்கும் ஹிறக்கீலுக்குமிடையில் நடந்த உரையாடல்களும் இதில் கூறப்பட்டுள்ளன.

### 50. அந்தாக்கியாவில் முதற் போர்புரி படலம்

அந்தாக்கியாவில் ஹிறக்கீலுடன் நடைபெற்ற போர் விடயங்களும் அதில் தாமிசு (றழி), லஃலாக்கு (றழி) போன்றோரின் வீரப்போராட்டங்களும் இப்படலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### *51.* பலீத்தானூசு ஈமான் கொண்ட படலம்

இப்படலத்தில் அறுமணி நகரத்தரசன் பலீத்தானூசு இஸ்லாத்தை ஏற்ற விடயம் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. அத்தோடு யூக்கினா மற்றும் பலீத்தானூசுக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடல்களும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### *52.* அரசிருக்கைக் கொண்ட படலம்

இப்படலத்தில் ஹிறக்கீல், தலீத் என்பவருக்கு அரசாட்சியைக் கொடுத்து விட்டு தப்பியோடியமை தொடர்பிலும் றூமிகளோடு முஸ்லிம் படைகளின் போர் நடந்தேறியமை தொடர்பிலும் கூறப்பட்டுள்ளன.

### *53.* வாகை பூண்ட படலம்

இப்படலத்தில் இறுதியாக அந்தாக்கியாவின் அரசன் தலீத், திறை செலுத்துவதற்கு உடன்பட்டு அபூ உபைதா (றழி) அவர்களிடம் மேற்கொண்ட உரையாடல்கள் இடம்பெற்றுள்ளது. அடுத்து அந்தாக்கியாவையும் முஸ்லிம்கள் வெற்றி கொள்கின்றனர். இவ்விடயங்களை அபூ உபைதா (றழி) அவர்கள், உமர் (றழி) அவர்களுக்கு எழுதி அனுப்பினார்கள். இதைக் கண்ட உமர் (றழி) அவர்களும் தோழர்களும் மிகுந்த ஆனந்தமுற்றனர். இவ்வாறாக இப்படலம் நிறைவுறுகிறது.

## காப்பிய ஆசிரியர் அறிமுகம்

### சேகுனாப்புலவர்

தமிழ் இலக்கியத்தில் காப்பியங்கள் தோன்றாத காலம் எனத் தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் பலரால் கருதப்பட்ட ஒரு காலகட்டத்தில் பல காப்பியங்களை இயற்றி, தமிழ் மொழிக்கு பெருமை சேர்த்தோராக முஸ்லிம் அறிஞர்கள் கருதப்படுகின்றனர். அத்தகைய முஸ்லிம் தமிழ் சான்றோர் பதினைந்து பேருக்கும் அதிகமானோர் காப்பியங்களை இயற்றியுள்ள

போதிலும் உமறுப்புலவர் போன்ற ஒரு சிலரையே பலரும் அறிந்திருக்கின்றனர். ஆனால், தமிழ் மொழியில் இஸ்லாமிய அடிப்படையில் ஒன்றுக்கு மேற்பட்ட காப்பியங்களை எழுதிய பெருமை முஸ்லிம் தமிழ்ச் சான்றோரையே சாரும்.[1]

அத்தகையோருள் சிறப்புடையோராய் திகழ்பவர் செய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் ஆவார். புலவர் நாயகம் எனும் சிறப்புப் பெயரையும் சேகுனாப்புலவர் எனும் அன்புப் பெயரையும் இவர் பெற்றுள்ளார். இவர் காயல்பட்டணத்தில் இரத்தின வணிகர் மரபொன்றில் பிறந்தார். இளமையிலேயே கவிபாடும் இயல்பினைப் பெற்றிருந்தார். அத்தோடு தமிழ், அறபு, பாரசீகம், வடமொழி முதலான பன்மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். வேத நூல் வித்தகராய் விளங்கியதோடு திருக்குர்ஆனை மனப்பாடம் செய்து ‘ஹாபிழ்’ ஆகவும் விளங்கியதாக கூறப்படுகிறது. மேலும், தவ ஒழுக்கங்களில் மேம்பட்டு இறை நேசராயும் திகழ்ந்தார். இரு முறை மக்கா நகர் சென்று ஹஜ் செய்துள்ளார். இறையன்பரான அவுலியாக்களுள் ஒரு வகையினராம் ‘அப்தால்’ களுள் இவரும் ஒருவர் எனப் பெரியோர்கள் இவரைப் போற்றினர்.

அத்தோடு சேகுனாப்புலவர் நான்கு காப்பியங்களை இயற்றியுள்ளார். அவை, முகையுத்தீன் ஆண்டவரின் வாழ்க்கையை குத்பு நாயகம் எனும் காப்பியத்தில் அமைத்துள்ளார். நாகூர் ஆண்டகையின் வாழ்க்கையைத் திருக்காரணப்புராணம் எனும் காப்பியத்தில் பாடியுள்ளார். இப்றாஹீம் நபி (அலை) அவர்களின் வாழ்க்கையைத் திருமணிமாலை எனும் காப்பியத்தில் வருணித்துள்ளார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும் செய்யிதினா அபூபக்கர் (றழி) அவர்களின் ஆட்சியிலும் செய்யிதினா உமர் (றழி) அவர்களின் கலீபாப் பதவிக் காலத்திலும் நடைபெற்ற நிகழ்வுகளையும் சிரியா என்று

[1] உவைஸ், எம். எம், (1957), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்), அணிந்துரை : ப. 1

‘/

இப்பொழுது வழங்கும் அன்றைய ஷாம் நாடு வெற்றி கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகளையும் புதூகுஷ்ஷாம் எனும் காப்பியத்தில் விவரித்துள்ளார்.

மேலும், சேகுனாப்புலவரின் சாதனைகளைக் குறிப்பிடுகையில் இவர் சொல்லலங்கார வித்தையில் கைதேர்ந்தவர். சிறுவரும் உணரத்தக்க இலகு நடையில் பல நூல்களை எழுதியுள்ளார். நல்லொழுக்கங்களையும் நீதியையும் புகட்டும் சொர்க்கநீதி எனும் நூல் சிறுவர்களுக்கு உபயோகமாகக் கூடிய நூலாகக் காணப்படுகிறது. அத்தோடு இவர் நூல்களை அச்சிட்டு வெளியாக்குவதிலும் முன்னோடியாகத் திகழ்கின்றார். உமறுப்புலவரின் முன்னோடியாகிய மழவை மகாலிங்கையாரின் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தை முதன்முதலாக ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தேழில் அச்சிட்டுள்ளார். இவ்வாறாக இவரது இலக்கியப் பணிகள் அமையப் பெற்றுள்ளன.

## உரை வழங்கியோர்

புதூகுஷ்ஷாம் தமிழில் இயற்றப்படுவதற்கு உரை வழங்கியவர் முஹம்மது ஜான் லெப்பை ஆலிம் என்பவராவார். இவர் முஹம்மது சகிய்யி என்பவரின் புதல்வராவார். இவர் அறபியில் உள்ள சிரியா வெற்றி கொண்டமை பற்றிய முதல் மூல நூலிலிருந்தே உரையினைப் பெற்று தமிழில் எழுதியுள்ளார். முதனூலும் வழிநூலும் பெறப்பட்டமையால் இக்காப்பியம் சார்பு நூலாக அமைகின்றது. மேலும், ஜே.எம்.எம் அப்துல் காதிர் அவர்களே முஹம்மதிய்யா காண்டத்திற்கும் சித்தீக்கிய்யா காண்டத்தின் இரண்டு பாகங்களுக்கும் தமிழில் உரை எழுதியுள்ளார்.

அத்தோடு பாறூக்கிய்யா காண்டத்தில் இடம்பெற்றுள்ள திருவிருத்தங்களுக்கு மருதமுனை அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் புலவர் உரை எழுதியுள்ளார். அன்வயம், பொருள், விளக்கக்குறிப்பு என்பவற்றைக் கொண்டதாக புலவர் அவர்களுடைய உரை சிறந்து விளங்குகிறது. இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய காப்பியங்களைப் பொறுத்தவரையில் இப்பணி முக்கியம்

பெறுகிறது. புதூகுஷ்ஷாம் காண்டத்தில் அதிகமான பாகங்களுக்கு உரை எழுதியவராக ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்கள் சிறப்புப் பெறுகிறார்கள்.

# புதூகுஷ்ஷாம் கூறும் இஸ்லாமிய வரலாறு (ஆதாரபூர்வமானவை)

புதூகுஷ்ஷாமில் இஸ்லாமிய வரலாறு தொடர்பில் கூறப்பட்டுள்ள பல விடயங்கள் உண்மைத்தன்மை உடையனவாக அமைந்துள்ளன. அவற்றை அல்-குர்ஆன், அல்-ஹதீஸ், மற்றும் இஸ்லாமிய வரலாற்று நூல்களின் துணை கொண்டு நோக்க முடியும்.

## *1.* நபி (ஸல்) அவர்கள் தொடர்பானவை

### நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கை

நபி (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு மதீனா வந்து அரசு செலுத்தினார்கள். பின் அங்கு உரோம் மன்னருக்கு இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்தார்கள். அதன் போது இஸ்லாத்தை ஏற்காதோருடன் நபி (ஸல்) அவர்கள் பல போர்களை மேற்கொண்டார்கள். அத்தோடு நபி (ஸல்) அவர்கள் தமது இறுதி காலகட்டத்தை அடைந்த போது அபூபக்கர் (றழி) அவர்களை இமாமாக நிறுத்தியதோடு மக்களுக்கு பல்வேறு உபதேசங்களும் புரிந்தார்கள். மேலும் நபி (ஸல்) அவர்களின் இறப்பினால் ஸஹாபாத்தோழர்கள், பெண்மணிகள் மற்றும் ஏனைய அனைத்து மக்களும் பெரிதும் துயருற்றனர். இவ்வாறாக நபி (ஸல்) அவர்களது மதீனா வாழ்க்கைப் பகுதிகளை பின்வருமாறு நோக்கலாம்:

### நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் அரசு செலுத்தியமை

நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத்தை மேற்கொண்டார்கள். இந்த ஹிஜ்ராவிற்குக் காரணம் மக்காவில் அவர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக மட்டுமல்ல. மாறாக பாதுகாப்பான ஒர் ஊரில் புதியதொரு சமூகத்தையும் இறைமார்க்கத்தையும் நிறுவுவதும் ஹிஜ்ராவின் நோக்கமாகும். இதனை பின்வரும் செய்யுள் விளக்கியுள்ளது:

*"கருந்தாது வரைநலியுந் திறற்றோளின் குறைசியெனுங்*

*கடலி னாப்ப*
*ணிருந்தாதி திருவருளி னிதியாகி யுலகனைத்து*
*மியற்ற வாய்ந்த*
*பெருந்தாது முகம்மதுநந் நயினாரம் மக்கநகர்*
*பிரிந்து வந்து*
*வருந்தாது மதநிறுத்தி யுலகுபதி யரியணைமேல்*
*மகிழ்வி னுற்றார்''[1]*

அதாவது, வலிமை கொண்ட பெருமானார் (ஸல்) அவர்கள் மக்கமா நகரை விட்டும் நீங்கி மதீனாவிலே இறைமார்க்கத்தை நிறுவி, ஆட்சி புரிந்து மகிழ்ந்திருந்தார்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும், நபி (ஸல்) அவர்கள் அங்குள்ள மக்களை நேர்வழியின்பால் அழைத்தார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. அதனை பின்வரும் செய்யுள் தெளிவுபடுத்துகிறது:

*''இழுக்காறு தனிலியற்றும் வெறுமையெனுந் தழலவிப்பா*
*னிசைந்த நீழ*
*லொழுக்காறு பயன்படர்ந்த கருமேகக் குடையோங்க*
*வுலகின் மீதே*
*யழுக்காறு நிந்தைமத வஞ்சமுதற் றீவினைக*
*ளனைத்தும் போக்கும்*
*விழுப்பாறு புனைநீத வறவாழி வையகத்து*
*விளங்க மாதோ''[2]*

அதாவது, நபி (ஸல்) அவர்கள் மக்களிடத்திலுள்ள தீய செயற்பாடுகளான பெருமை, வஞ்சகம் போன்றவற்றை நீக்கும் விதமாகவும் வாழ்ந்தார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. அத்தோடு மதீனாவிலே நபி (ஸல்) அவர்களைச் சூழ பல ஸஹாபாக்கள் காணப்பட்டனர். அவர்களுள் வஹியினை எழுதிக்கொள்வோராக இருபத்தைந்து பேர் இருந்தனர். மேலும் நபி (ஸல்) அவர்களால் சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் கூறப்பட்ட பத்துத் தோழர்களும் சூழ்ந்திருந்தனர். அது மாத்திரமன்றி சன்மார்க்கத்தை

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : 02, ப. 40

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : 12, ப. 44

நிலைநிறுத்திய வீர ஸஹாபாக்கள் பன்னிருவரும் இருந்தனர். இவை தொடர்பாக புதூகுஷ்ஷாமில் (றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம்: *9,10,15*) ஆவது செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது:

> *"……வையர்மன நிலைநோக்க மவைநோக்கி யடையார்க*
> *ளடைய வென்றி*
> *யுய்யுமதி யுணர்வுடைய வமைச்சரொரு பதின்மர்மருங்*
> *குவப்பிற் சூழ"*[1]

அத்தோடு நேர்மைமிக்க ஸஹாபாக்களான அன்சாரிகளும் முஹாஜிரீன்களும் நபி (ஸல்) அவர்களைச் சூழ இருந்தனர். இதனை பின்வரும் செய்யுள் விளக்கியுள்ளது:

> *"……நூலணிந்த நெறியுடைய வசுகாபி மார்கள்மிக*
> *நுண்மை நேர்மைப்*
> *பாலணிந்த முகாசிரீன் களுமருங்கிற் புகழோடு*
> *பரிவிற் சூழ"*[2]

மேலும் கஃபு இப்னு மாலிக் (றழி), ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (றழி) போன்றோர் நபி (ஸல்) அவர்கள் மீது கவிதை பாடுவோராகவும் காணப்பட்டனர். இதனை பின்வரும் செய்யுள விளக்கியுள்ளது:

> *"……திறங்காட்டு மலங்காரக் கவிதையினர் மாலிக்கருள்*
> *சிறந்த கஃபு*
> *முறங்காட்டுந் தாபித்தருள் கச்சானும் பிரபந்த*
> *முரையா நிற்ப"*[3]

இவ்வாறாக பெருமானார் (ஸல்) அவர்களைச் சூழ பல ஸஹாபாத்தோழர்கள் காணப்பட நபி (ஸல்) அவர்களும்

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : *09*, ப. *42*

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : *21*, ப. *46*

[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : *23*, ப. *47*

மக்களுடன் பெரிதும் ஆதரவு காட்டக் கூடியவர்களாகவும் இருந்துள்ளார்கள். அத்தோடு நீதியுடன் தனது ஆட்சியையும் மேற்கொண்டு சென்றார்கள்.

இவ்வாறாக நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் சிறப்பாக ஆட்சி செலுத்தியமை தொடர்பாக முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு என்ற நூலில் (பக் 223-225) குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப பகுதிகள் பின்வருமாறு:

> ‘‘முஸ்லிம்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரா செய்தார்கள். இந்த ஹிஜ்ராவிற்குக் காரணம் மக்காவில் அவர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களிலிருந்து தப்பித்துத் தங்களை விடுவித்துக் கொள்வது மட்டுமல்ல’’ மாறாக, பாதுகாப்பான ஓர் ஊரில் புதியதொரு சமுதாயத்தை நிறுவுவதும் ஹிஜ்ராவின் நோக்கமாக இருந்தது. ஆகவே, ஹிஜ்ரா செய்ய ஆற்றல் பெற்ற ஒவ்வொரு முஸ்லிமும் ஹிஜ்ரா செய்து அந்தப் புதிய சமுதாயத்தைக் கட்டமைப்பதில் பங்கு கொள்ள வேண்டும். அந்த ஊரை பாதுகாப்பதற்கும் அதன் தகுதியை உயர்த்துவதற்கும் முழு அளவில் முயற்சி செய்ய வேண்டும் என்பது கட்டாயமாக இருந்தது.
>
> அந்த சமூகத்தை நிறுவுவதிலும் அதை அமைப்பதிலும் நபி (ஸல்) அவர்களே முன்னோடியாகவும், தலைவராகவும், வழிகாட்டியாகவும் இருந்தார்கள். அனைத்து பொறுப்புகளுக்குரிய அதிகாரங்கள் முழுவதும் நபி (ஸல்) அவர்களிடமே இருந்தன. இதில் மற்ற எவருக்கும் எவ்வித மனக்கசப்பும் இருக்கவில்லை.’’[1]

## நபி (ஸல்) அவர்கள் உரோம் மன்னனுக்கு கடிதம் எழுதியமை

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு இறுதியில் பல அரசர்களுக்கு கடிதம் எழுதி இஸ்லாத்தின்

---

[1]உமர் ஷரீ∴ப் காஸிமி. அ, (2006), அர்ரஹீக் அல்மக்தூம் (தமிழாக்கம்), ப. 223

பக்கம் வருமாறு அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். அவ்வாறு கடிதம் எழுத முற்பட்ட போது ''முத்திரை இல்லாத கடிதங்களை அவ்வரசர்கள் படிக்க மாட்டார்கள்'' என்று நபி (ஸல்) அவர்களிடம் கூறப்பட்டது. ஆகவே நபி (ஸல்) அவர்கள் வெள்ளியினாலான மோதிரம் ஒன்றைத் தயார் செய்தார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் இப்பணிக்காக நன்கு அனுபவம் வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைத் தூதுவர்களாக அவ்வரசர்களிடம் அனுப்பினார்கள். இதனை பின்வரும் செய்யுளினூடாகக் காணலாம்:

*''கலையணி மொழியி னாலுங் கதிரணி வாளி னாலு*
*நிலையணி புதுமை யாலு நெஞ்சணிந் தறிவு வாய்மைத்*
*தலையணிந் தரசர் தாழ்ந்து தகைகொள வியற்றும் வள்ளல்*
*சிலையணி பொற்றோள் வேந்தர் சிலர்க்குயர் நிருபம் விட்டார்.''*[1]

அந்த வகையில் உரோம் மன்னன் ஹிறக்கீலுக்கும் கடிதம் எழுதி திஹ்யா இப்னு கலீபா அல்கல்பி என்ற தோழரிடம் கொடுத்து, அவரிடம் ''நீங்கள் இதை புஸ்ராவின் கவர்னரிடம் கொடுங்கள். கவர்னர் அக்கடிதத்தை மன்னர் கைஸரிடம் கொடுக்கட்டும்.'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இவ்விடயங்களை பின்வரும் செய்யுள் தெளிவுபடுத்துகின்றன:

*''பேரொளி விளங்கு மேன்மை முத்திரை பிறங்க வாய்ந்த*
*சீரெழி னிருபந் தன்னைத் திறமன வூக்கந் துன்னும்*
*போரெழில் கலீபா தோன்றற் புனிதவான் தகிய்யத் தண்ண*
லாரெழில் கரத்தி னல்கி முகம்மத ரனுப்பி னாரால்''[2]

இவ்வாறு திஹ்யா இப்னு கலீபா அவர்கள் பெற்று வந்த கடிதத்தை ஹிறக்கீல் மன்னனின் அமைச்சரிடம் கொடுக்க, அமைச்சர் அதனை மன்னனிடம் போய்க் கொடுத்தார். பின் மன்னன் அமைச்சரிடம் மக்கா நகரிலிருந்து

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கிறக்கீலுக்கு நிருபம்விடுத்த படலம் : 02, ப. 51

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கிறக்கீலுக்கு நிருபம் விடுத்த படலம் : 04, ப. 52

எவரேனும் இங்கு வந்துள்ளனரா? என விசாரித்து, பின் ஹர்பு என்பவரின் புதல்வரான அபூ சுப்யானையும் அவனது வணிகக் கூட்டத்தினரையும் வரவழைத்தான். பின் ஹிறக்கீல் தன் அவைக்கு வந்த குறைஷிக்குல வணிகர்களை அன்புடன் வரவேற்று, அவர்களுள் நபி (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமான உறவுடைய அபூ சுப்யான் என்பவரிடம் நபி (ஸல்) அவர்கள் தொடர்பாக சில கேள்விகளைக் கேட்டான். இதனை பின்வரும் செய்யுள் தெளிவுபடுத்துகின்றது:

*"……பயிலொளி முகம்ம தென்னுஞ்*
*சுந்தரர்க் குரிமை மிக்க தொல்குல னுளன்கொ லென்றான்"*[1]

முஹம்மது (ஸல்) அவர்களின் புதிய மார்க்கம் பற்றியும் அவர்களின் சாதனைகள் பற்றியும் அறிந்து கொள்வதற்காக இரு பகுதியினருக்கும் மொழிபெயர்ப்பாளனாக அரசனின் மொழியையும் அறபு மொழியையும் கற்ற ஒருவன் இடையில் நிறுத்தப்பட்டார். அரசன் கேட்கும் வினாக்களுக்கு முன்னிலையிலுள்ளோர் தவறுகள் விட்டால் பின்னால் இருப்போர் அதன் உண்மையினைத் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் மன்னன் பணித்தான். அதனை பின்வரும் செய்யுள் தெளிவுபடுத்துகிறது:

*"திருவளர் முகம்ம தாக்கச் செய்கைமற் றுணர்வான் வேண்டி*
*யிருவகைப் பாடை கற்ற வொருவனை யிடையி னாட்டி*
*மருவுமுன் னிலையர் சொல்லின் மாற்றமுண் டாகிற் றேர்ந்து*
*பரிவுறப் பின்ன ருள்ளீர் பகர்கென வரசன் சொன்னான்"*[2]

அதற்கு அபூ சுப்யான் தனக்கு பின்னிலையாய் இருப்போரைக் கொண்டு எனது வாக்கின் உண்மைத் தன்மையை அறிய முற்பட வேண்டாமென்றும், தான் உண்மையையே உரைப்பேன் என்றும் கூறினான். பின் ஹிறக்கீல் ஒவ்வொரு கேள்வியாக கேட்டான்:

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கிறக்கீலுக்கு நிருபம் விடுத்த படலம் : 25, ப. 59

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கிறக்கீலுக்கு நிருபம்விடுத்த படலம் : 27, ப. 60

முதலாவதாக, தன்னை இறைவனின் தூதர் எனப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ள நபியவர்களின் குலம் எப்படிப்பட்டது எனக் கேட்க, அதற்கு அபூ சுப்யான் அவர்கள் நல்லொழுக்கமுடையோர் என விடை பகர்ந்தான். அப்பொழுது அரசன் முற்காலத்தில் தோன்றிய நபிமார்களையெல்லாம் இறைவன் அவ்வாறே நல்லொழுக்கமுள்ள உயர் குடிப்பிறப்பாளராகவே அமைத்துள்ளான் என்றான்.

அடுத்த கேள்வியாக, நபி என்று தன்னைக் கூறிக் கொள்ளும் இந்த முஹம்மதானவர் பிறந்த குலத்திலே அரசர்கள் எப்போதேனும் வாழ்ந்துள்ளார்களா? என்று அரசன் கேட்டான். அதற்கு அபூ சுப்யான் மறுத்து "இல்லை" என விடை கூறினான். அரசன் அதைக் கேட்டு அக்குலத்தில் அரசர்கள் தோன்றியிருந்தால் தானும் அதனை பெற வேண்டுமென மனதில் எண்ணி இவ்வாறு வேதமொன்றை தோற்றுவித்திருப்பார் என்று கூறலாம் என்றான் அரசன்.

அடுத்து, நபி (ஸல்) அவர்கள் இதற்கு முன் பொய்யுரைத்தவராக இருந்துள்ளாரா? என அரசன் வினவினான். அதற்கு அபூ சுப்யான் "அவர் சிறுவராயிருந்த காலத்திலிருந்தே பொய் கூறுவரல்லர்" என பதிலுரைத்தான். அதனைக் கேட்ட மன்னன் நபிமார்கள் பொய்யுரைக்க மாட்டார்கள் எனக் கூறினான்.

மேலும் அரசன், முஹம்மதை ஏற்றுக் கொள்வோர் மேலான மக்களா? அன்றி எளிய மக்களா? என்று வினவினான். அதற்கு அபூ சுப்யான், "பூமியிலுள்ள மிகவும் ஏழைகளே" எனக் கூறினான். அதற்கு ஹிறக்கீல், வேதத்தைப் போதிக்கும் நபிமார்களைத் தொடக்கத்தில் நம்பிக்கைக் கொள்வோர் எளியவர்களாகிய அவர்களே என்று கூறினான்.

அடுத்து, முஹம்மதுடைய கொள்கைகளை நம்பி மார்க்கத்தை ஏற்போரின் தொகை கூடிக்கொண்டு செல்கின்றதா? அன்றி குறைவடைந்து செல்கின்றதா? எனக் கேட்டான். அதற்கு அபூ சுப்யான் "அக்கூட்டம் மிகுந்து

கொண்டே வருகின்றது'' என்று கூறினான். அதனைக் கேட்ட மன்னன், அருள் தங்கிய நபிமார்களுக்கு ஈமான் கொள்வோர் பெருகிக்கொண்டே வருவர் என்று முந்தைய வேதங்களில் கூறப்பட்டுள்ளன என்று கூறினான்.

அடுத்த கேள்வியாக அரசன், அபூ சுப்யானை நோக்கி முஹம்மதைத் தொடர்ந்தவர்கள், அவர் கூறும் மார்க்கத்திலிருந்து மனம் மாறுபட்டு குபிர் நிலையைக் கைக்கொள்வார்களா? என்று கேட்டான். அதற்கு அபூ சுப்யான், ''அவர்கள் மாறுகின்றவர்கள் அல்லர்'' என பதிலுரைத்தான். அது கேட்ட அரசன் இறைவனின் அருள் கொண்ட பண்புடையவர்கள் ஒரு போதும் மனம் மாறுபாடு அடையமாட்டார்கள் எனக் கூறினான்.

அடுத்ததாக, முஹம்மதோடு கோபம் பூண்டு பகைத்து நீங்கள் கொடுவினைகள் புரிந்தீர்களா? என்று கேட்டான். அதற்கு அபூ சுப்யான், நாங்கள் அவருக்குச் செய்த தீமைகளொன்றும் அவரை நிலைகுலையச் செய்யவில்லை என்று விடை கூறினான். மன்னன் அதுகேட்டு, நபிமார்களுக்குச் செய்யப்படும் தீமைகள் எவையும் அவர்களை ஒன்றும் செய்யாது எனக் கூறினான்.

மேலும் ஹிறக்கீல் அபூ சுப்யானை நோக்கி, முஹம்மதோடு செய்த உங்கள் போர்களில் வெற்றியடைந்தவர்கள் யாவர்? என வினவினான். அதற்கு அபூ சுப்யான், ''இரு சாராருக்கும் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்துள்ளன'' என்றான். அதற்கு அரசன், நபிமார்கள் தங்களை சோதனை செய்யும் அல்லாஹ்வின் அருளினால் இறுதியில் வெற்றியினையே பெற்றுக் கொள்வார்கள் என்று வேதங்களில் கூறப்பட்டுள்ளவற்றை நான் அறிவேன் என்று கூறினான்.

அடுத்து அரசன், அபூ சுப்யானை நோக்கி, போர் செய்யும் காலங்களில் முஹம்மத் வெற்றி பெற வேண்டுமென்ற நோக்கில் வஞ்சகப் போர் செய்துள்ளாரா? என்று கேட்டான். அதற்கு அபூ சுப்யான், ''அவர் அவ்வாறு வஞ்சகம் செய்பவரல்ல'' எனக் கூறினான். அதற்கு மன்னன்,

பண்பு வாய்ந்தவர்களான நபிமார்கள் வஞ்சகப் போர் செய்வது நன்மையை ஏற்படுத்தக் கூடிய செயலல்ல என்பதால் அவ்வாறு செய்ய மாட்டார்கள் என்றான்.

மேலும் மன்னனின் அடுத்த கேள்வி, முஹம்மது பிறந்த குலத்தில் மேன்மைமிக்க நபிமார்கள் வாழ்ந்ததுண்டா? என்றவாறு அமைந்தது. அதற்கு அபூ சுப்யான், ''இல்லை'' என்றான். அதற்கு அரசன், அவ்வாறு முன்னோர் நபிமார்களாக இருந்திருப்பார்களாயின் அவர்களைப் பின்பற்றி, ஆசையினால் தாமும் நபியென்று சாதிக்கின்றார் என்று கூறலாம் என்றான்.

இறுதியாக அரசன், முஹம்மது நபி அவரைப் பின்பற்றுவோருக்கு பணித்துள்ள கட்டளைகள் எவை? என வினவினார். அதற்கு அபூ சுப்யான், இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றவர்களுக்கு தொழுகையை நிறைவேற்றுதல், பிறருக்கு தர்மம் செய்தல், பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் உபகாரம் செய்தல், கற்பொழுக்கத்தை பேணுதல், நோன்பு நோற்றல், ஹஜ் செய்தல், பகைவர்களுடன் போரிடுதல் முதலான நற்செயல்களைச் செய்யுமாறு பணித்துள்ளார் என்று பதிலளித்தான்.

இவ்வாறு கூறியவற்றைக் கேட்டு ஹிறக்கீல் மிக மகிழ்ச்சியடைந்தான். பின் அபூ சுப்யானை நோக்கி, நீர் முஹம்மது தொடர்பில் கூறியவை உண்மையாயின் வேதவாக்கியங்களில் கூறியுள்ளபடி அவர் தான் நபியாவார் என்று கூறினான். மேலும் அவரை சென்றடையும் வழி எனக்குத் தெரிந்திருப்பின் அவரைப் போய் சந்திப்பேன் என்றும் எனது இரு கண்களிலுமிருந்து வழிகின்ற கண்ணீரால் அவரது பாதங்களை கழுவுவேன் என்றும் கூறினான்.

இவ்வாறாக இச்சம்பவம் புதூகுஷ்ஷாமில் கிறக்கீலுக்கு நிருபம் விடுத்த படலத்தில் 29 - 47 வரையிலான செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது. அவற்றின் ஆரம்ப செய்யுள் பின்வருமாறு:

*''தூதெனு முகம்ம தானோர் தோன்றிய குலத்தின் றன்மை*

*யாதெடுத்தியம்பு கென்றா னிதயமு நாவு மொன்றா*
*யோதுநன் னடைய ரென்ன கறுபுசே யுரைப்ப மன்ன*
*னாதிமுன் னபிமார் தம்மை யத்தகை வகுத்தா னென்றான்''*[1]

இவ்வாறு தொடர்ந்து கூறப்பட்டுள்ளது. மேலும் இதே சம்பவம் முஹம்மது நபி அவர்களின் வாழ்க்கை வரலாறு எனும் நூலில் 435-437 வரையான பகுதிகளில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தின் ஆரம்ப பகுதி பின்வருமாறு:

> ''அது, அபூ ஸுஃப்யான் மற்றும் குறைஷி காபிர்களுடன் நபி (ஸல்) அவர்கள் ஹுதைபிய்யாவில் ஒப்பந்தம் செய்திருந்த காலம். அக்காலத்தில் அபூ ஸுஃப்யானும் குறைஷி காபிர்களும், வணிகர்களாக ஷாம் (சிரியா) சென்றிருந்தார்கள். அபூ ஸுஃப்யான் தனது சக தோழர்களுடன் இருக்கும் போது அவரிடம் ஹெர்குலிஸ் (ஹிர்கல்) மன்னன், ஒரு தூதுவனை அனுப்பி ரோம் நகரப் பெருந்தலைவர்கள் கூடியிருக்கும் மஸ்ஜிதுல் அக்ஸாவில் தனது அவைக்கு வரும்படி அழைப்பு விடுத்தார்…..''[2]

நபி (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்த கடிதத்தை சபையில் வாசிக்குமாறு ஹிறக்கீல், அமைச்சரைப் பணித்தான். பின் அமைச்சர் கடிதத்தைப் பெற்று வாசித்தான். கடிதத்தின் ஆரம்பத்தில் ''பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்'' என எழுதப்பட்டிருந்தது. அடுத்து, அல்லாஹ்வின் உண்மைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களிடமிருந்து உரோமப் பேரரசனுக்கு எழுதப்பட்ட கடிதம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து, நேர்வழியைப் பின்பற்றுவோர் மீது சாந்தி உண்டாவதாக என்றும், இஸ்லாத்தைத் தழுவி சிறப்புறுமாறும் அரசனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இஸ்லாத்தை ஏற்றுக்

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கிறக்கீலுக்கு நிருபம்விடுத்த படலம் *: 29*, ப. *61*
[2]உமர் ஷரீ.்.ப் காஸிமி. அ, *(2006)*, அர்ரஹீக் அல்மக்தூம் (தமிழாக்கம்), ப. *435*

கொண்டால் உனக்கு ஏற்படும் துன்பங்கள் யாவற்றையும் அல்லாஹ் போக்கி விடுவான். மேலும் அவன் உனக்கு இரு மடங்கு கூலியைப் பெற்றுத் தருவான். அவ்வாறு இல்லாமல் நீ புறக்கணித்து விட்டால் உமது கூட்டத்தினர் அனைவரினது பாவங்களும் உன்னையே வந்து சேரும் எனவும் எழுதப்பட்டிருந்தது. அத்தோடு இறுதியில் ஓர் அல்குர்ஆன் வசனமும் குறிப்பிடப்பட்டிருந்தது:

> *''(நபியே பின்னும் அவர்களிடம்) நீர் கூறுவீராக: ''வேதத்தையுடையவர்களே! எங்களுக்கும், இன்னும் உங்களுக்குமிடையே, நாம் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றையும் வணங்கக்கூடாது நாம் அவனுக்கு யாதொன்றையும் இணையாக்கவும் கூடாது நம்மில் சிலர், சிலரை அல்லாஹ்வையன்றி தெய்வங்களாக எடுத்துக் கொள்ளவும் கூடாது என்ற சமமானதொரு வார்த்தையின் பால் வாருங்கள் (இதை ஏற்காது) அவர்கள் புறக்கணித்தால் (அவர்களிடம்,) ''நிச்சயமாக நாங்கள் (அவன் ஒருவனுக்கே முற்றிலும் கீழ்படிந்த) முஸ்லிம்கள் என நீங்கள் சாட்சியம் கூறுவீர்களாக!'' என்று நீங்கள் கூறி (விட்டு) விடுங்கள்.''*[1]

இந்நிகழ்வு புதூகுஷ்ஷாமில் கிறக்கீலுக்கு நிருபம் விடுத்த படலத்தில் *48 – 55* வரையிலான செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது:

> *''உளத்தி னாக்கமுற் றினையன வுரைத்தெழி லோங்கும்*
> *வளத்தி னாயக ரெமையொரு பொருளென மதித்தே*
> *தழைத்த சீரொடு மனுப்பிய பத்திரந் தனையிக்*
> *களத்தி னோதுக வென்றனன் றூமிகா வலவன்''*[2]

இவ்வாறாக தொடர்ந்து கூறப்பட்டுள்ளது. மேலும் இந்நிகழ்வு முஹம்மது நபி அவர்களின் வாழ்க்கை வரலாறு

---

[1]அல்குர்ஆன் : ஆலு இம்ரான் : 64

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கிறக்கீலுக்கு நிருபம்விடுத்த படலம் : 48, ப. 68

எனும் நூலில் *434 – 435* வரையான பக்கங்களில் இடம்பெற்றுள்ளது. அச்சம்பவம் பின்வருமாறு:

> “ரோம் நாட்டு மன்னருக்குக் கடிதம்: நபியவர்கள் ரோமின் மன்னர் (ஹெர்குலஸ்) ‘ஹிர்கலுக்கு’ எழுதிய கடிதத்தின் வாசகத்தை இமாம் புஹாரி (ரஹ்) ஒரு நீண்ட ஹதீஸுக்கு இடையில் குறிப்பிடுகிறார்கள். அது, “அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்,…அல்லாஹ்வின் அடிமையும், அவனது தூதருமான முஹம்மது, ரோமின் மன்னர் ஹிர்கலுக்கு எழுதுவது: நேர்வழியை பின்பற்றியவருக்கு ஈடேற்றம் உண்டாகட்டும்! இஸ்லாமை ஏற்றுக்கொள் ஈடேற்றம் அடைவாய் இஸ்லாமை ஏற்றுக்கொள் அல்லாஹ் உனக்கு கூலியை இருமுறை வழங்குவான் நீ புறக்கணித்து விட்டால் உமது கூட்டத்தினர் அனைவரின் குற்றமும் உன்னையே சாரும்.”[1]

இவ்வாறு கடிதத்தை படித்து முடித்த பின் அங்கு அவையிலிருந்தோர் இஸ்லாத்தினதும் பெருமானாரினதும் சிறப்புக்களை ஏற்காது பெரும் கூச்சலிட்டனர். பின் வணிகக் கூட்டத்தினர் அங்கிருந்து வெளியேறினர். அவ்வாறு வெளியேறும் போது அபூ சுப்யான் கூறியதாவது: “ஹிறக்கீல் மன்னன் பயப்படும் படியாக அபுல் கபுசாவின் தந்திரம் வலுப்பெற்று விட்டது” என்று இகழ்ந்து கூறினான். இவ்விடயம் புதூகுஷ்ஷாமில் கிறக்கீலுக்கு நிருபம் விடுத்த படலத்தில் *56 – 58* வரையிலான செய்யுள்களில் குறிப்பிடப்பட்டுள்ளது:

> *“இருந்த நன்மறைப் பொருண்முத லியாவையு மிதயம்*
> *பொருந்து மன்னவன் கேட்டனன் புதுமையுற் றுள்ளங்*
> *தெரிந்தி டாதுரை விளங்கிடா வோசையிற் றிகைப்பி*

[1] உமர் ஷரீ∴ப் காஸிமி. அ, *(2006)*, அர்ரஹீக் அல்மக்தூம் (தமிழாக்கம்), பக். *434, 435*

*னொருங்கு ரப்பினர் பேரவை யிடத்துள ரெவரும்''*[1]

இது தொடர்பாக முஹம்மத் நபி அவர்களின் வாழ்க்கை வரலாறு எனும் நூலில் 437 – 438 வரையான பக்கங்களிலும் விளக்கப்பட்டுள்ளது. அதாவது,

> ''அபூ ஸுஃப்யான் கூறுகிறார்: ''எங்களை வெளியேற்றும்படி கூற நாங்கள் வெளியேற்றப்பட்டோம். நாங்கள் வெளியேறும் போது நான் என் தோழர்களிடம் கூறினேன்: ரோமர்களின் மன்னன் கூட அவரைக் கண்டு அஞ்சும் அளவுக்கு அபூ கபிஷாவின் பேரனுடைய காரியம் உறுதியாகி விட்டது'' என்று அபூஸுஃப்யான் கூறினார்.''[2]

என்பதாக முஹம்மத் நபி அவர்களின் வாழ்க்கை வரலாறு என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட போர்கள்

நபி (ஸல்) அவர்கள் மதீனாவை வந்தடைந்த பின், பல நாட்டு மன்னர்களுக்கும் இஸ்லாத்தின்பால் அழைப்பு விடுத்து கடிதம் எழுதினார்கள். அக்கடிதத்தை பார்த்து இஸ்லாத்தின்பால் வராதவர்களுக்கு எதிராக முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் போர் தொடுத்தார்கள். அப்போர்கள் பற்றி புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

## முஅத்தா போர்

> ''நபி (ஸல்) அவர்கள் புஸ்ரா மன்னருக்கு கடிதம் ஒன்றை எழுதி அல் ஹாரிஸ் இப்னு உமைர் அல் அஸ்தி (றழி) அவர்களிடம் கொடுத்தனுப்பினார்கள். ஆனால் போகும் வழியில் பல்கா மாநிலத்தின் கவர்னராக இருந்த ஷுரஹ்பீல் இப்னு அம்ர் அல்

---

[1] அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கிறக்கீலுக்கு நிருபம்விடுத்த படலம் : 56, ப. 70

[2] உமர் ஷரீ:.ப் காஸிமி. அ, (2006), அர்ரஹீக் அல்மக்தூம் (தமிழாக்கம்), பக். 437,438

கஸ்ஸானி என்பவன் அவரைக் கொலை செய்து விட்டான். தூதர்களைக் கொலை செய்வது அரசியல் குற்றங்களில் மிகக் கடுமையானதாகும். மேலும் பகிரங்கமாக போருக்கு அழைப்பு விடுப்பதை விட தூதரைக் கொலை செய்வது மிகக் கொடிய ஒன்றாகக் கருதப்பட்டது. தனது தூதர் கொல்லப்பட்ட செய்தியை அறிந்தவுடன் நபி (ஸல்) அவர்கள் கவலைக்குள்ளானார்கள். அதன் பின் மூவாயிரம் வீரர்கள் கொண்ட பெரும் படையொன்றைத் தயார் செய்து ரோமர்களிடம் சண்டையிட அனுப்பி வைத்தார்கள். இதுவே முஅத்தா போர் இடம்பெற காரணமாகியது."[1]

பெருமானார் (ஸல்) அவர்களின் படை வீரர்கள் போரினை மேற்கொள்வதற்காக ஷாம் நோக்கிப் புறப்பட்டார்கள். பின் அங்கு பல்கா பிரதேசத்தில் மஆன் எனப்படும் பகுதியை வந்தடைந்தார்கள். இதனை அறிந்த ஹிறக்கீல் மன்னனின் ஒற்றர்கள் ஹிறக்கீலிடம் வந்து முஹம்மது (ஸல்) அவர்களின் படையினர் மஆன் என்னுமிடத்தில் அரணமைத்துத் தங்கியுள்ளதாக தெரிவித்தார்கள். இதனை செவியுற்ற மன்னன் மிகுந்த கோபமடைந்து இரண்டு இலட்சம் படையினருடன் போருக்குச் செல்லத் தயாரானான். படைகளுடன் புறப்பட்ட ஹிறக்கீல், மஆப் எனும் தளத்தில் வந்திறங்கி அங்கு அரண் அமைத்து தங்கினான்.

இதனை செவியுற்ற ஸஹாபாத் தோழர்கள், இரண்டு இலட்சம் எண்ணிக்கை கொண்ட பெரும் படைக் கூட்டத்துடன் மூவாயிரம் பேரைக் கொண்ட நாம் சிறு படையினராக சமமாக நின்று போராடி வெற்றி பெற வேண்டும், இல்லையேல் அது நம் அறிவுக்கு களங்கமாக அமையும் என்றவாறாக தமக்குள் பேசிக் கொண்டனர்.

அந்த வகையில் இப்பெரும் படையினை எதிர்த்துப் போராடுவதற்கு ஸஹாபாத் தோழர்கள் பெருமானாரினது உத்தரவைப் பெறுவோம் என்ற நிலைப்பாட்டைக்

---

[1]உமர் ஷரீ:ப் காஸிமி. அ, (2006), அர்ரஹீக் அல்மக்தூம் (தமிழாக்கம்), ப. 475

கொண்டிருக்கையில் ஸஹாபாத் தோழரான அப்துல்லாஹ் இப்னு றவாஹா (றழி) ஓர் சிறந்த உபதேசத்தை தோழர்களுக்கு வழங்கி போருக்கு உற்சாகமூட்டினார்கள். அவ்வுபதேசம் பின்வருமாறு:

> "எனது கூட்டத்தினரே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் இப்போது வெறுக்கும், வீர மரணத்தைத் தேடித்தானே மதீனாவிலிருந்து புறப்பட்டீர்கள். நாம் எதிரிகளிடம் போரிடுவது நமது ஆயுதங்களைக் கொண்டா அல்லது ஆற்றலைக் கொண்டா? அல்லது எண்ணிக்கையைக் கொண்டா? இவற்றில் எதுவுமில்லை. பின்னர் ஏன் எண்ணிக்கையை வைத்து யோசிக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு எந்த மார்க்கத்தின் மூலம் கண்ணியம் வழங்கியிருக்கின்றானோ அந்த மார்க்கத்திற்காகவே நாம் அவர்களிடம் போர் புரிகின்றோம். எனவே, தயக்கம் வேண்டாம் புறப்படுங்கள்! இரண்டு பாக்கியங்களில் ஒன்று நிச்சயம் உண்டு. ஒன்று வெற்றி அல்லது வீரமரணம்."[1]

இவ்வுபதேசம் புதூகுஷ்ஷாமில் கிறக்கீலுடன் போர்புரி படலத்தில் 63 – 73 வரையிலான செய்யுள்களில் குறிப்பிடப்பட்டுள்ளது:

> *"போக்குவந் திருவணி முடங்கல் போற்றுரை*
> *யாக்குவ மிதற்கிடை யடைய லாரடர்*
> *நீக்குவ நாமெனி னெருங்கில் வன்பறக்*
> *காக்குவ நாமெனிற் சதிர்கொள் வேல்வலீர்"*[2]

என்றவாறாக இவ்வுபதேசம் தொடர்கிறது. இவற்றைக் கேட்ட ஸஹாபாத் தோழர்கள் போருக்கு ஆயத்தமாகினர். முஅத்தா என்ற இடத்தில் இரு படைகளும் சண்டையிட்டன. முதலில் ஸைது (றழி) அவர்கள் கொடியை

---

[1]உமர் ஷரீ.ஃ.ப் காஸிமி. அ, (2006), அர்ரஹீக் அல்மக்தூம் (தமிழாக்கம்), ப. 477
[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்),உவைஸ், (1991), புதூகுஷ்ஷாம் :முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கிறக்கீலுடன் போர்புரிப் படலம் : 63, ப. 96

ஏந்தி கடுமையாக யுத்தம் புரிந்தார்கள். இறுதியில் எதிரிகளின் ஈட்டிகளினால் தாக்குற்று ஷஹீதானார்கள். அடுத்ததாக இஸ்லாமியப் படையின் கொடியை ஜஹ்பர் (றழி) அவர்கள் எடுத்துக் கொண்டு வீரத்துடன் போரிட்டார்கள். போர் உச்ச கட்டத்தை அடைந்தவுடன் ஜஹ்பர் (றழி) அவர்கள் தனது குதிரையிலிருந்து இறங்கி, அதை வெட்டி விட்டு, படைக்குள் புகுந்து எதிரிகளை வீழ்த்தினார்கள். இவ்வாறு போரிடுகையில் ஜஹ்பர் (றழி) அவர்களது வலக்கை வெட்டப்பட்டு விடுகிறது. பின் இடக்கையால் கொடியைப் பிடித்தார். அத்தோடு இடக்கையும் வெட்டப்பட்டு விடுகிறது. பின் புஜத்தால் கொடியைப் பிடித்து போரிடுகையில் எதிரி ஒருவனால் கொல்லப்பட்டு அவ்விடத்திலேயே ஷஹீதானார்கள். அடுத்ததாக அப்துல்லாஹ் (றழி) அவர்களும் வீரத்துடன் போராடி ஷஹீதானார்கள்.

இவ்வாறு மூன்று படைத்தளபதிகளும் ஷஹீதான பின், படைக்கு யாரை தலைவராக்குவது எனும் நிலைப்பாட்டில் இருக்கையில் காலித் இப்னு வலீத் (றழி) அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார்கள். பின் காலித் (றழி) அவர்கள் தந்திரமான உபாயமொன்றைக் கையாண்டு மும்முரமாக படைக்களத்தில் போராடினார்கள். முஸ்லிம்கள் ஏதோ சதி செய்ய நாடுகின்றனர் என்று எண்ணிய ரோம் வீரர்கள் முஸ்லிம்களை பின்தொடர்வதை விட்டு விட்டு அவர்களும் பின்வாங்கினர். பின் முஸ்லிம்கள் எவ்வித ஆபத்துமின்றி மதீனாவை வந்தடைந்தனர்.

முஅத்தா போர்க்களச் செய்திகளை வஹியின் மூலமாக நபி (ஸல்) அவர்கள் அறிந்து கொண்டார்கள். அதாவது அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: போரின் போது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

> ‘‘முதலில் கொடியை ஸைத் ஏந்தினார். அவர் கொல்லப்பட்டார் இரண்டாவதாக ஜஹ்பர் ஏந்தினார். அவரும் கொல்லப்பட்டார் மூன்றாவதாக அப்துல்லாஹ் இப்னு றவாஹா ஏந்தினார் அவரும் கொல்லப்பட்டார் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் போது நபியவர்களின்

கண்களிலிருந்து நீர் வழிந்தோடியது. இதற்குப் பின் கொடியை அல்லாஹ்வின் வாள்களில் ஒரு வாள் ஏந்தியது. அல்லாஹ் அவர் மூலமாக முஸ்லிம்களுக்கு வெற்றியளித்தான்.''[1]

புதூகுஷ்ஷாமில் இது தொடர்பாக கிறக்கீலுடன் போர்புரி படலத்தில் 177 ஆவது செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*''நாலோங்கு சிந்தை யுடையார்முக நோக்கியமர்*
*பாலோங் கியறகை யுரைத்தேபின் படர்விசய*
*மேலோங் கினசைபுல் லாவாலென வீரநயத்*
*தாலோங்கு காலி தினையேத்து முகம்மதுவே''*[2]

முஅத்தா போர்க்களத்தில் தோழர்களின் வீரதீர செயல்களைக் கேட்டுத் தோழர்களெல்லாரும் மகிழ்ச்சி அடைந்தனராயினும், தளபதிகள் மூவரின் மரணச் செய்தி பெரும் துயராகவே அமைந்தது. எனவே நபி (ஸல்) அவர்கள் முஅத்தா போர்க்களத்தில் ஷஹீதானோரின் வீடுகளுக்கு ஆறுதல் கூறுவதற்காகப் புறப்பட்டார்கள். அந்த வகையில் அபூதாலிப் (றழி) அவர்களின் மகனான ஜஹ்பர் (றழி) அவர்களின் இல்லம் சென்றார்கள். அங்கு அஸ்மா (றழி) அவர்களிடம் அவர்களது கணவர் ஜஹ்பர் (றழி) அவர்கள் ஷஹீதானதைக் கூறியதும் பெரிதும் கவலைக்குள்ளானார்கள். அடுத்து நபி (ஸல்) அவர்கள் ஸைது (றழி), அப்துல்லாஹ் (றழி) அவர்களினதும் இன்னும் போர்களத்தில் ஷஹீதான ஏனைய ஐவரினதும் வீடுகளுக்குச் சென்று அவர்களின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்கள்.

புதூகுஷ்ஷாமில் முஅத்தா போர் குறித்த வரலாற்று நிகழ்வுகள் கிறக்கீலுடன் போர்புரி படலத்தில் 1 – 200 வரையிலான செய்யுள்களில் இடம்பெற்றுள்ளன. அதன் ஆரம்ப செய்யுள் பின்வருமாறு:

*''தண்கடி யுயிர்க்குமுல கந்தனி புரக்கு*

[1]அல்ஹதீஸ் : ஸஹீஹ் முஸ்லிம் : 4262
[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கிறக்கீலுடன் போர்புரிப் படலம் : 177, ப. 132

*மொண்கன நிழற்றவுயி ரோம்புநெறி வள்ளல்*
*வெண்கதிர் நிறத்துடல றாமியரின் வேந்த*
*னெண்கடிய பான்மையுள மெண்ணினர் குறித்தே"*[1]

இதற்கு ஆதாரமாக இப்போர் குறித்த நிகழ்வுகள் அர்ரஹீக் அல்மக்தூம் என்ற நூலில் 475 – 481 வரையிலான பகுதிகள் விளக்குகின்றன. அதன் ஆரம்ப பகுதி பின்வருமாறு:

> "யுத்தத்திற்கான காரணம்: நபி (ஸல்) அவர்கள் புஸ்ராவின் மன்னருக்குக் கடிதம் ஒன்றை எழுதி அல்ஹாரிஸ் இப்னு உமைர் அல்அஸ்தி (றழி) அவர்களிடம் கொடுத்தனுப்பினார்கள். ஆனால் போகும் வழியில் பல்கா மாநிலத்தின் கவர்னராக இருந்த ஷுரஹ்பீல் இப்னு அம்ரு அல்கஸ்ஸானி என்பவன் அவரைக் கைது செய்து கொன்று விட்டான்.[2]

தூதர்களைக் கொலை செய்வது அரசியல் குற்றங்களில் மிகக் கடுமையானதாகும். பகிரங்கமாகப் போருக்கு அழைப்புவிடுப்பதை விட தூதரைக் கொலை செய்வது மிக்க கொடிய ஒன்றாகக் கருதப்பட்டது. தனது தூதர் கொல்லப்பட்ட செய்தியை அறிந்தவுடன் நபி (ஸல்) அவர்கள் பெரும் கவலைக்குள்ளானார்கள். மூவாயிரம் வீரர்கள் கொண்ட பெரும் படை ஒன்றைத் தயார் செய்து அவர்களிடம் சண்டையிட அனுப்பி வைத்தார்கள்."[3]

## தபூக் போர்

அரேபியாவிலுள்ள பெரும்பான்மை மக்கள் இஸ்லாத்தின்பால் இணைந்து விட்டனர். இஸ்லாமிய சமயமும் முஸ்லிம் அரசும் துரித வேகத்தில் பெருகி வலுவடைந்து வருவதைக் கண்ட அரபு நாட்டைச் சுற்றியுள்ள

---

[1] அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கிறக்கீலுடன் போர்புரிப் படலம் : 01, ப. 77
2

[3] உமர் ஷரீ∴ப் காஸிமி. அ, (2006), அர்ரஹீக் அல்மக்தூம் (தமிழாக்கம்), ப. 475

ஏனைய அரசுகள் அச்சமும் பீதியும் அடைந்தனர். குறிப்பாக ரோமானியப் பேரரசைச் சேர்ந்த சிரியாவுடன் அறபிகள் பெருமளவில் வியாபாரத் தொடர்புகள் கொண்டிருந்ததால் இஸ்லாத்தின் ஆதிக்கத்தைப் பற்றி அதிகமான தகவல்கள் அவ்வரசுக்கு அவ்வப்போது தொடர்ந்து கிடைத்து வந்தன. ஆகவே, இஸ்லாத்தை மேலும் வளரவிட்டால் பேராபத்தாக வந்து முடியும் எனத் தீர்மானித்த ரோமானியச் சக்கரவர்த்தி அதைத் தடுத்து நிறுத்தவும் மதீனாவைத் தாக்கவும் எண்ணி படையெடுப்பொன்றுக்கு ஆயத்தமாகுமாறு உத்தரவிட்டார்.

சிரியாவின் திமிஷ்க் கவர்னர் முன்திர் பின் அல் ஹாரிஸ் கஸ்ஸானி, அதன் எல்லைகளிலுள்ள அரபுக் கூட்டத்தாரையெல்லாம் படை திரட்டுமாறு செய்தியனுப்பினான். இவ்வாறு ரோமர்களையும் ரோமர்களின் ஆதிக்கத்திலிருந்த கஸ்ஸான் கிளையைச் சேர்ந்த அறபியர்களையும் சேர்த்துக் கொண்டு ஓர் போருக்காக தயாரானான்.

எதிரிகள் வந்து மதீனாவைத் தாக்க இடமளித்துவிடக் கூடாதெனக் கருதிய நபி (ஸல்) அவர்கள், ரோமானியரை முன் சென்று தாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்தார்கள். முஸ்லிம்களுக்கு ஆதரவான கூட்டத்தினரையெல்லாம் படை திரட்டி மதீனா வருமாறு செய்தியனுப்பினார்கள். அப்போது அரேபியாவில் கடும் பஞ்சமும் கோடையும் நிலவின. எனவே படையில் சேர்ந்து செல்ல பலரும் தயங்கினர். இவ்வேளையில் அல்லாஹ் அல்குர்ஆனின் ஓர் அத்தியாயமான பராஆவின் சில பகுதிகளை இறக்கிவைத்தான். அவை பின்வருமாறு:

> “(தபூக் யுத்தத்திற்குச் செல்லாது) பின் தங்கி விட்டவர்கள், அல்லாஹ்வின் தூதருக்கு மாறாக(த் தங்கள் வீடுகளில்) அவர்கள் இருந்துக் கொண்டதைப் பற்றி மகிழ்ச்சியடைகின்றனர். அன்றியும் அல்லாஹ்வுடைய பாதையில், தங்கள் பொருட்களாலும் தங்கள் உயிர்களாலும் யுத்தம் செய்வதையும் வெறுக்கின்றனர்ள(மற்றவர்களிடம்) “இந்த வெப்பத்தில் நீங்கள்(யுத்தத்திற்குச்) செல்லாதீர்கள்” என்றும் கூறுகின்றனர். (அதற்கு

நபியே! அவர்களிடம்) "நரகத்தின் நெருப்பு வெப்பத்தால் (இதைவிட) மிகக் கடுமையானதாகும்" என்று நீர் கூறுவீராக! (இதனை) அவர்கள் விளங்குபவர்களாக இருந்தால் (பின்தங்கி இருக்கமாட்டார்கள்)."[1]

புதூகுஷ்ஷாமில் இவ்வத்தியாயம் தொடர்பில் விளக்கப்பட்டுள்ள செய்யுள் பின்வருமாறு:

*"படரந்தெழு வெம்மை தாங்கார் நிழலணி பயன்கொண் டோரு*
*முடம்பெழு சோம்பி னோரு முழன்றதா மதததி னோரு*
*மடர்ந்தெழு பிணிகொண் டோரு மாக்கையிற் றளர்வி னோருந்*
*தொடர்ந்தெழுந் திலரா லுற்ற பறாஅத்து சூறத் தன்றே"[2]*

இவ்வத்தியாயத்தினூடாக துணிவுடன் எதிரிகளை எதிர்க்க வேண்டுமென்றும் அல்லாஹ்வின் பாதையில் போர்புரிவதால் ஏற்படும் நன்மைகளை விளக்கியும் அல்லாஹ் அவர்களை போருக்கு ஆயத்தமாக்கினான். நபி (ஸல்) அவர்களும் தர்மம் செய்வதன் சிறப்புக்களையும் அல்லாஹ்வின் பாதையில் தங்களின் உயர்வான பொருட்களைச் செலவு செய்வதன் சிறப்புக்களையம் கூறி தங்களின் தோழர்களுக்கு ஆர்வமூட்டினார்கள்.

அதன் பின் முஸ்லிம்கள் அனைவரும் தங்களால் முடிந்தளவு அல்லாஹ்வின் பாதையில் பொருட்களைச் செலவு செய்வதிலும் இயலாதவர்களுக்கு கொடுத்து உதவுவதிலும் ஒருவரை ஒருவர் போட்டி போட்டுக் கொண்டனர். நபி (ஸல்) அவர்களின் உற்ற தோழர் உஸ்மான் (றழி) அவர்கள் ஷாம் நாட்டு வியாபாரத்திற்கு அனுப்புவதற்காக ஒரு குழுவை தயார் செய்து வைத்திருந்தார்கள். அதில் இருநூறு ஒட்டகைகள், அதற்குரிய முழு சாதனங்களுடன் இருந்தன. மேலும் இருநூறு ஊக்கியா வெள்ளிகளும் இருந்தன. அந்தப் பயணத்தை நிறுத்தி விட்டு அவை அனைத்தையும்

---

[1]அல்குர்ஆன் : அல் பறாஆ : 81
[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : தபூக்கிற் றிறை கொண்ட படலம் : 53, ப. 158

அல்லாஹ்வின் பாதையில் தர்மமாக வழங்கினார்கள். பின்பு ஓரிரு நாட்கள் கழித்து முழு சாதனங்களுடன் உள்ள நூறு ஒட்டகைகளை தர்மமாக வழங்கி விட்டு ஆயிரம் தங்க காசுகளை நபி (ஸல்) அவர்கள் மடியில் பரப்பினார்கள். அதை நபி (ஸல்) அவர்கள் புரட்டியவர்களாக "இன்றைய தினத்திற்கு பின் உஸ்மான் எது செய்தாலும் அது அவருக்கு இடையூறளிக்காது" எனக் கூறினார்கள்.[1]

இவ்வாறு முன்னேற்பாடுகளுடன் இஸ்லாமியப் படை மதீனாவிலிருந்து புறப்பட்டது. அவ்வாறு புறப்படுகையில் நபி (ஸல்) அவர்கள் தங்களது குடும்பத்திற்கு அலீ இப்னு அபூதாலிப் (றழி) அவர்களை பிரதிநிதியாக நியமித்தார்கள். படை புறப்பட்ட பின் இதைப் பற்றி நயவஞ்சகர்கள் குத்தலாக பேசவே அலீ (றழி) மதீனாவிலிருந்து புறப்பட்டு நபி (ஸல்) அவர்களிடம் சென்றடைந்தார்கள். "மூஸா (அலை) அவர்களுக்கு ஹாரூன் (அலை) இருந்ததைப் போன்று நீ எனக்கு இருக்க விருப்பமில்லையா? ஆனால் எனக்குப் பின் எந்தவொரு நபியும் இல்லை" என்று கூறி, அலீ (றழி) அவர்களை மதீனாவிற்கு திரும்புமாறு அனுப்பி விட்டார்கள்.

தபூக்கை நோக்கிச் செல்லும் வழியில் 'ஹிஜ்ர்' எனும் ஊர் வந்தது. அப்போது நபி (ஸல்) அவர்கள் தன் தோழர்களிடம் " 'வாதில் குரா' என்ற பள்ளத்தாக்கில் மலைகளைக் குடைந்து வாழ்ந்த ஸமூது கூட்டத்தாரின் வீடுகள் இங்கு தான் இருந்தன என்றும், இவர்கள் தங்களுக்குத் தாங்களே அநியாயம் செய்து கொண்டவர்கள் என்றும் எனவே இவ்விடங்களைக் கடந்து செல்லும் போது அழுதவர்களாகச் செல்லுங்கள் என்றும் அவர்களுக்கு ஏற்பட்ட வேதனை உங்களுக்கும் ஏற்படலாம் என பயந்து கொள்ளுங்கள்" என்றும் கூறி தங்களது தலையை மறைத்துக் கொண்டு அந்தப் பள்ளத்தாக்கை விரைவாகக் கடந்தார்கள்.[2]

---

[1]உமர் ஷரீ.்.ப் காஸிமி. அ, *(2006)*, அர்ரஹீக் அல்மக்தூம் (தமிழாக்கம்), ப. *527*
[2]அல்ஹதீஸ் : ஸஹீஹுல் புஹாரி : *4419*

இவ்வாறு இஸ்லாமியப் படை அப்பாழ் நிலத்தைக் கடந்து தபூக் வந்தடைந்து அங்கு முகாமிட்டு தங்கினார்கள். நபி (ஸல்) அவர்கள் படையுடன் வந்திருப்பதை அறிந்த ரோமர்கள் திடுக்கமடைந்தார்கள். எனவே தபூக்கிற்கு அருகிலிருந்த அய்லா பகுதியின் தலைவர் யுஹன்னா இப்னு ரூ.:.பா தானாக முன்வந்து ஒப்பந்தம் செய்து கொடுத்ததுடன் ஜிஸ்யாவையும் நிறைவேற்றினர். மேலும் 'ஜர்பா' பகுதியினரும் 'அத்ருஹ்' பகுதியினரும் ஒப்பந்தம் செய்து ஜிஸ்யாவையும் வழங்கினர். அந்த வகையில் நபி (ஸல்) அவர்கள் அய்லா தலைவருடன் செய்த சமாதான ஒப்பந்தமாவது:

"அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்...... இது அல்லாஹ்வின் புறத்திலிருந்தும் அல்லாஹ்வின் தூதர் முஹம்மதின் புறத்திலிருந்தும் யஹன்னா இப்னு ரூ.:.பாவிற்கும் அய்லாவாசிகளுக்கும் வழங்கும் பாதுகாப்பு ஒப்பந்தமாகும். கடலில் செல்லும் இவர்களது கப்பல்களுக்கும் பூமியில் செல்லும் இவர்களது பயணக் கூட்டங்களுக்கும் அல்லாஹ்வுடைய பாதுகாப்பும் முஹம்மதுடைய பாதுகாப்பும் உண்டு. மேலும் ஷாம் நாட்டிலும் இவர்களது கடல் பகுதியை சுற்றி வாழும் மக்களுக்கும் இந்தப் பாதுகாப்பு உண்டு. ஆனால் இவர்களில் யாராவது குழப்பம், கலகம் செய்தால் அவரது உயிர், பொருள் பாதுகாக்கப்படாது. அவரை அடக்குபவருக்கு அவரது பொருள் சொந்தமாகிவிடும். இவர்கள் தண்ணீருக்காக செல்லும் போது யாரும் தடுக்கக் கூடாது. கடலிலோ தரையிலோ பயணிக்கும் போது யாரும் குறுக்கிடக் கூடாது.

அடுத்து நபி (ஸல்) அவர்கள் காலித் (றழி) அவர்களிடம் தூமதுல் ஜந்தலின் தலைவர் உகைதிர் என்பவனைப் பிடித்து வருமாறு ஏவினார்கள். மேலும் "நீ அவரை சந்திக்கும் போது அவர் ஒரு மாட்டை வேட்டையாடிக் கொண்டிருப்பார்" என்றும் நபி (ஸல்) அவர்கள் காலித் (றழி) யிடம் கூறி அனுப்பினார்கள். காலித் (றழி) உகைதிரின் கோட்டைக்கு அருகில் சென்று

தாமதித்தார். அப்போது ஒரு மாடு பக்கத்திலிருந்த காட்டிலிருந்து வெளியேறி உகைதிரின் கோட்டைக் கதவை கொம்புகளால் உராய்ந்து கொண்டிருந்தது. உகைதிர் அதை வேட்டையாடிப் பிடிப்பதற்காக கோட்டைக்கு வெளியே வந்தார். அச்சமயம் காலித் (றழி) அவர்கள் உகைதிரை பிடித்து வந்து நபியவர்களிடம் ஒப்படைத்தார். உகைதிர் தன் உயிரைப் பாதுகாப்பதற்காக ஒப்பந்தம் ஒன்றை எழுதித் தருமாறு நபியவர்களிடம் வேண்ட அவர்களும் அவ்வாறே செய்தார்கள். அத்தோடு உகைதிர் ஜிஸ்யா வரியைச் செலுத்தவும் ஒத்துக் கொண்டான்.

இவ்வரலாற்று நிகழ்வுகள் புதூகுஷ்ஷாமில் தபூக்கிற் றிறை கொண்ட படலத்தில் *1 – 123* வரையான செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது. அச் செய்யுளின் ஆரம்ப வரிகள் பின்வருமாறு:

*"தன்முறை யெவரும் பண்பான் தகுதியின் மேலோன் வாய்மை*
*நன்முறை கொண்டு நீத நடக்கையி னமரர் கோமான்*
*பன்முறை யிறங்கா நிற்பப் பாவலர் வாழி கூற*
*வென்முறை நயினார் செங்கோல் விளங்கிய நாளில் மாதோ"*[1]

இதற்கு ஆதாரமாக தபூக் போர் வரலாறு பற்றி அர்ரஹீக் அல்மக்தூம் என்ற நூலின் *523 – 534* வரையான பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளன. அப்பகுதியின் ஒரு பகுதி பின்வருமாறு:

"இப்போரினால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட நன்மையையும் இதற்குப் பின் தன் கட்டுப்பாட்டுக்குள் இருந்த அறபுக் கோத்திரங்கள், தன் கட்டுப்பாட்டை விட்டு விலகி, முஸ்லிம்களுடன் சேர்ந்து கொள்வதையும் கைஸர் மன்னனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இதைத் தனது எல்லையை நெருங்கி வரும் ஆபத்தாக உணர்ந்தான். அறபியர்களுக்கு அருகிலிருக்கும் தனது ஷாம் நாட்டுக் கோட்டைகளை ஆட்டம் காண வைக்கும் ஒரு செயலாகக் கருதினான். முஸ்லிம்களின் இந்த எழுச்சி அழிக்க முடியாத

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : தபூக்கிற் றிறை கொண்ட படலம் : *01*, ப. *142*

அளவுக்கு வலிமைப் பெறுவதற்கு முன்னதாகவே அடக்கி அழித்துவிட வேண்டும். ரோம் நாட்டைச் சுற்றியிருக்கும் அறபு பகுதிகளில் முஸ்லிம்கள் கிளர்ச்சியை உண்டாக்குவதற்கு முன்னதாகவே அவர்களை ஒன்றுமில்லாமல் செய்துவிட வேண்டும் என அவன் எண்ணினான்...”[1]

## உஸாமா (றழி) தலைமையில் ஷாமுக்கு படை அனுப்பப்பட்டமை

ஹிறக்கீலுடன் போரிட்டு முஅத்தா களத்தில் வீரமரணம் எய்திய முதலாம் தளபதியும் பெருமானாரின் வளர்ப்பு மகனான ஸைது (றழி) அவர்களின் புதல்வருமே உஸாமா (றழி) ஆவார். பதினெட்டே வயது நிரம்பிய இவ்விளைஞர் பெருமானாரின் அன்புக்கு உரியவராயிருந்தார். அந்த வகையில் நபி (ஸல்) அவர்கள், உஸாமா (றழி) அவர்களின் தலைமையில் ஷாம் நோக்கி படையொன்று அனுப்பியமை தொடர்பில் புதூகுஷ்ஷாமில் உஸாமா தலைமை பூண்ட படலத்தில் கூறப்பட்டுள்ளது.

நபி (ஸல்) அவர்களும் தோழர்களும் தபூக் போரை நிறைவு செய்து விட்டு, திறைப் பொருட்களையும் பெற்றுக் கொண்டு மதீனாவை வந்தடைந்தனர். பின்பு மக்கமா நகர் சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றி விட்டு மீண்டும் மதீனாவுக்கு வந்து போர்கள் எதுவும் இன்றி இரண்டு மாத காலம் நலமாக வாழ்ந்திருந்தார்கள்.

அதன் பிற்பாடு ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு, முஸ்லிம்களின் மீது தாக்குதல் நடத்தத் தயாராகி வந்த ரோமப்படைகளை, ‘முஅத்தா’ என்ற இடத்தில் வைத்து எதிர்ப்பதற்காக உஸாமா (றழி) அவர்களின் தலைமையில் நபி (ஸல்) அவர்கள் ஒரு படையைத் தயார் செய்தார்கள். இவ்வாறு நபி(ஸல்) அவர்கள் படையைத் தயார் செய்த பின் சில ஸஹாபாதோழர்கள் உஸாமா (றழி) அவர்கள் சிறு வயதினராய் இருந்தமையால் அவரை தளபதியாகப் பின்

[1]உமர் ஷரீ∴ப் காஸிமி. அ, (2006), அர்ரஹீக் அல்மக்தூம் (தமிழாக்கம்), ப. 523

தொடர்ந்து செல்ல தாமதம் காட்டினர். இச்சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள் பெரிதும் சுகவீனமுற்றிருந்தார்கள். அப்பொழுது பெருமானார் அவர்கள், தோழர்கள் படையெழுந்து செல்லாமை குறித்து அறிந்து கொண்டார்கள். அதன் பின் பெருமானார் (ஸல்) அவர்கள் தொழுது விட்டு மிம்பரில் ஏறி தோழர்களை நோக்கி உரையாற்றினார்கள். இந்நிகழ்வை அப்துல்லாஹ் இப்னு உமர் (றழி) அறிவித்தார்கள்:

"உஸாமா (றழி) அவர்களின் தலைமையைக் குறித்து நீங்கள் இப்போது குறை கூறுகிறீர்கள் என்றால், (இது ஒன்றும் புதிதன்று) இதற்கு முன்பு (முஅத்தா போரின் போது) இவருடைய தந்தையின் தலைமையையும் தான் நீங்கள் குறை கூறிக் கொண்டிருந்தீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர் ஆட்சியதிகாரத்திற்குத் தகுதியானவராகத் தான் இருந்தார். மேலும் அவர் மக்களிலேயே எனக்கு மிகவும் பிரியமானவராகவும் இருந்தார். மேலும் அவருக்குப் பின் (அவரின் புதல்வரான) இவர் மக்களிலேயே எனக்கு மிகவும் பிரியமானவராவார்."[1]

மேலும் நபி (ஸல்) அவர்கள் இன்னோரன்ன பல உபதேசங்களைக் கூறி தோழர்களை உற்சாகமூட்டினார்கள். இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் உரையாற்றிய பின் தோழர்கள் பெருமானாரின் கட்டளைக்கு அடிபணிந்து போருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

இச்சம்பவம் தொடர்பில் புதூகுஷ்ஷாமில், உஸாமா தலைமைப்பூண்ட படலத்தில் *1 – 15* வரையான செய்யுள்களிலும், *32 – 70* வரையான செய்யுள்களிலும் கூறப்பட்டுள்ளது. அதன் முதல் செய்யுளானது பின்வருமாறு:

> *"வண்ணிலா வழிந்த வாகை வயிரக்குன் றனைய பொற்றோ*
> *ளண்ணாலா முசாமா பூண்ட தலைமைய துளங்கொள் ளாது*
> *விண்ணிலார் புகழின் மூதூர் வீரர்கள் படையெ ழாது*

---

[1] அல்ஹதீஸ் : ஸஹீஹ் புஹாரி : 4469

*கண்ணிய போக்கும் வள்ள லுணர்ந்தனர் கருதி யன்றே"*[1]

இச்சம்பவம் இஸ்லாமிய வரலாற்று நூலான கலீபாக்கள் வரலாறு என்ற நூலில் 77 – 80 வரையான பக்கங்களில் கூறப்பட்டுள்ளது.

## நபி (ஸல்) அவர்கள் அபூபக்கர் (றழி) அவர்களை இமாமாக நிறுத்தியமை

நபி (ஸல்) அவர்கள் கடுமையாக சுகவீனமுற்றிருந்த போது, அவர்களால் மக்களுக்கு தொழுவிக்க முடியாத நிலையில் இருந்தார்கள். அந்தளவுக்கு நபி (ஸல்) அவர்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அச்சந்தர்ப்பத்தில் அபூபக்கர் (றழி) அவர்களையே இமாமத் செய்யுமாறு பணித்தார்கள். இவ்வரலாற்று நிகழ்வை புதூகுஷ்ஷாமில் அபூபக்கரை முன்னிலை நிறுத்த படலம் கூறுகிறது.

அதாவது நபி (ஸல்) அவர்கள், உஸாமா (றழி) அவர்களின் தலைமைக்குக் கட்டுப்பட்டு போருக்குச் செல்லுமாறு தோழர்களுக்கு அறிவுரையாற்றிய பின் பள்ளியிலிருந்து வீட்டை நோக்கி சென்றார்கள். அதன்பின் நபி (ஸல்) அவர்கள் காய்ச்சலினால் பெரிதும் வருத்தமுற்றிருந்தார்கள். அவ்வேளை அப்துர்ரஹ்மான் பின் அபூபக்கர் (றழி) அவர்கள் தமது கையிலே மிஸ்வாக் குச்சி ஒன்றினை வைத்திருந்தார்கள். அதை பெருமானார் (ஸல்) அவர்கள் பெற விரும்புவதாக உணர்ந்து ஆயிஷா (றழி) அவர்கள் தன் சகோதரனிடமிருந்து பெற்று பெருமானாரிடம் கொடுத்தார்கள்.

இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் நோயுற்றிருக்கையில், அவ்வேளை இஷா தொழுகைக்கான நேரம் வந்து விட்டது. இதன் போது நடந்தவைகளை ஆயிஷா (றழி) அவர்களே கூறுகிறார்கள்: அன்றைய தினம் இஷா நேரத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு சுகயீனம் மேலும் அதிகமானது. நபி (ஸல்) அவர்களால் பள்ளிக்கு

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : உஸாமா தலைமை பூண்ட படலம் : 32, ப. 225

வரமுடியவில்லை. அவ்வேளை பெருமானார் (ஸல்) அவர்கள், மக்கள் தொழுதார்களா? எனக் கேட்டார்கள். ‘‘இல்லை இறைத்தூதரே! தங்களைத் தான் எதிர்பார்த்திருக்கிறார்கள்’’ என்றோம். எனக்காக ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வையுங்கள் எனக்கூற, நாங்கள் தண்ணீர் வைத்தோம். பின் நபி (ஸல்) அவர்கள் குளித்து விட்டுச் செல்வதற்கு முனைந்தார்கள். ஆனால் அவர்களுக்கு மயக்கம் ஏற்பட்டது. சிறிது நேரத்திற்கு பிறகு மயக்கம் தெளிந்து ‘‘மக்கள் தொழுதார்களா?’’ என்றார்கள். நாங்கள் முதலில் கூறியது போல் இம்முறையும் பதில் கூறினோம். மீண்டும் தண்ணீர் வரவழைத்து முன்னர் போலக் குளித்தார்கள். இது தொடர்பான ஹதீஸ்கள் ஸஹீஹுல் புஹாரியில் இடம்பெற்றுள்ளன. அதில் ஒரு ஹதீஸ் பின்வருமாறு:

> ‘‘அன்றைய தினம் இஷா நேரத்தில் மேலும் நோயின் வேகம் அதிகமானது. நபி (ஸல்) அவர்களால் பள்ளிக்கு வரமுடியவில்லை. இந்நிலையைப் பற்றி ஆயிஷா (றழி) கூறுவதைக் கேட்போம். ‘‘மக்கள் தொழுதார்களா?’’ என நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ‘‘இல்லை இறைத்தூதரே! தங்களை எதிர்பார்க்கிறார்கள்’’ என்றோம். எனக்காக ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வையுங்கள் எனக் கூற, நாங்கள் தண்ணீர் வைத்தோம். நபி (ஸல்) அவர்கள் குளித்து விட்டு செல்வதற்கு முனைந்தார்கள். ஆனால் அவர்களை மயக்கம் ஆட்கொண்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு மயக்கம் தெளிந்து ‘‘மக்கள் தொழுதார்களா?’’ என்றார்கள். நாங்கள் முதலில் கூறியது போல் இம்முறையும் பதில் கூறினோம். மீண்டும் தண்ணீர் வரவழைத்து முன்னர் போல குளித்தார்கள். பிறகு, நபி (ஸல்) அபூபக்கரை தொழ வைக்கும்படி கூறினார்கள். (ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

இதன் பின் நபி (ஸல்) அவர்களால் மக்களுக்கு தம்மால் தொழுவிக்க முடியாமையால், தோழரான அபூபக்கர் (றழி) அவர்களை தொழுவிக்குமாறு, அப்துல்லாஹ் இப்னு

மஸ்ஊத் (றழி) அவர்களிடம் கூறி அனுப்பினார்கள். அவ்வேளை ஆயிஷா (றழி) அவர்கள், நபிகளாரிடம் எனது தந்தையாகிய அபூபக்கர் (றழி) அவர்கள் இளகிய நெஞ்சம் கொண்டவர். இவ்வேளை நீங்கள் சுகயீனமுற்றிருப்பதால் கவலையில் இருப்பார். எனவே உமர் (றழி) அவர்களே இப்பதவிக்குப் பொருத்தமானவர் என்று கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், அபூபக்கரையே இமாமத் செய்யுமாறு மீண்டும் பணித்தார்கள். அதன் பின் ஆயி'ா (றழி) அவர்கள், ஹப்ஸா (றழி) அவர்களிடம், தாங்கள் சென்று உமர் (றழி) அவர்களை இமாமத் செய்யுமாறு கூறுங்கள் எனப் பணித்தார்கள். அதன் பின் ஹப்ஸா (றழி) அவர்கள் நபிகளாரிடம் சென்று அவ்வாறே கூற, அதற்கு நபி (ஸல்) அவர்கள் "நீங்கள் யூஸுப் (அலை) அவர்களை மயக்க முயற்சி செய்த பெண்ணினத்தைச் சேர்ந்தவர்களா? எனக் கேட்டு கடிந்துக் கொண்டார்கள். பின் பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் இப்னு மஸ்ஊத் (றழி) அவர்களை விளித்து, அபூபக்கர் (றழி) அவர்களை இமாமத் செய்யுமாறு போய்க் கூறச் சொன்னார்கள். பின்பும் ஆயிஷா (றழி) அவர்கள் ஹப்ஸா (றழி) அவர்களிடம் இதற்கு முன் கூறியது போல் மீண்டும் கூறுங்கள் எனச் சொல்ல, அதற்கு ஹப்ஸா (றழி) அவர்கள் தான் இதற்கு பிறகு எதுவும் நபிகளாரிடம் கூற மாட்டேன் என மறுத்து விட்டார்கள்.

பின் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் பள்ளியினுள் சென்று அபூபக்கர் (றழி) அவர்களிடம் சென்று நபி (ஸல்) அவர்கள் சொன்ன விடயத்தைக் கூற, அது கேட்டு அபூபக்கர் (றழி) அவர்கள், உமர் (றழி) அவர்களிடம் தாங்கள் இமாமத் செய்யுங்கள் எனக் கூறினார்கள். அதற்கு உமர் (றழி) அவர்கள் இந்நிலைக்குத் தகுதியானவர் நீரே எனப் பெருமானார் கூறி விட்டார்கள். எனவே நீங்களே தொழுகையை முன்னின்று நடத்துங்கள் எனக் கூறினார்கள். அதன் பின்பு அபூபக்கர் (றழி) அவர்களே இமாமாக நின்று தொழுகையை சிறப்பாக நடாத்தி முடித்தார்கள்.

இவ்வுண்மை வரலாற்றுப் பகுதிகளை முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு என்ற நூலில் 567 – 569 வரையான பக்கங்களில் காணலாம்.

இவ்வாறாக அபூபக்கர் (றழி) அவர்கள் இமாமாக முன்னிலைப்படுத்தியமை தொடர்பில் புதூகுஷ்ஷாமில் அபூபக்கரை முன்னிலை நிறுத்த படலத்தில் *68 – 89* வரையிலான செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது:

*"நெறிபூண்ட திருவணக்க நிலைபூண்பா னனைவோரு*
*மறிபூண்ட பள்ளியிடத் தடைந்திருந்தார் மகுமூதின்*
*குறிபூண்ட கடைநோக்கிக் கொழுங்கருணைப் பிணைமானின்*
*மறிபூண்ட தகைபூண்ட மதிபூணின் மனத்தினார்"*[1]

## நபி (ஸல்) அவர்களது இறுதிகாலகட்டம்

இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக உழைத்துக் கொண்டிருந்த நபி (ஸல்) அவர்கள் தமது வாழ்நாளின் இறுதிப்பகுதியை அடைந்தார்கள். அவ்வேளை நபி (ஸல்) அவர்கள் மக்களை நோக்கி பல்வேறு உபதேசங்களைப் புரிந்தார்கள். இறுதியில் நபி (ஸல்) அவர்கள் மரணித்ததும் ஸஹாபாத்தோழர்கள் மற்றும் மக்கள் அனைவரும் கவலையடைந்தனர். மேலே குறிப்பிடப்பட்டவைத் தொடர்பில் பின்வருமாறு நோக்கலாம்:

## நபி (ஸல்) அவர்கள் இறுதியாக புரிந்த உபதேசங்கள்

நபி (ஸல்) அவர்கள் தமது மரணத்திற்கு ஐந்து நாட்களுக்கு முன்பு அவர்களது உடல் நெருப்பாய் கொதித்தது. அவ்வப்போது மயக்கமும் ஏற்பட்டது. அப்போது "பல கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து ஏழு துருத்திகள் என் மீது ஊற்றுங்கள். நான் மக்களிடம் சென்று ஒப்பந்தம் வாங்கப் போகிறேன்" என்று கூறினார்கள். தோழர்கள் நபி (ஸல்) அவர்களை ஒரு பெரிய பாத்திரத்தில் அமர வைத்து நீர் ஊற்றினார்கள். நபி (ஸல்) அவர்கள் "போதும்! போதும்!" என்று கூறினார்கள். அப்போது தான் நபி (ஸல்) அவர்களின் சூடு தணியக் கண்டார்கள். தலையில் தடிப்பான துணியைக் கட்டிக் கொண்டு

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் *:* முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) *:* அபூபக்கரை முன்னிலை நிறுத்த படலம் *: 68*, ப. *256*

போர்வையைப் போர்த்தியவர்களாக மிம்பரில் வந்து அமர்ந்தார்கள். அதுதான் நபி (ஸல்) அவர்களின் இறுதி உரையாகும். முதலில் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து விட்டு, ‘‘மக்களே! என்னிடம் வாருங்கள்’’ என்று கூறிய போது மக்கள் நபி (ஸல்) அவர்களை நோக்கி விரைந்து வந்தனர்.

பின் நபி (ஸல்) அவர்கள் தனது உரையை ஆரம்பித்தார்கள். உலகிலுள்ள எல்லாப் படைப்பினங்களும் அதன் தவணை வந்தவுடன் அழிந்தே தீரும். மரணம் வருமென்று அஞ்சி பல்வேறு பாதுகாப்புக்களை மேற்கொண்டாலும் அதனைத் தடுத்து விட முடியாது. ஆகவே மௌத்தை அனுபவித்தே தீர வேண்டும்.

மேலும் இவ்வுலக வாழ்வானது நிரந்தரமற்றது. மாறாக மறுமையே நிரந்தரமானது. அனைத்துக்கும் மரணம் இருப்பது போன்று அல்லாஹ்வுடைய தூதருக்கும் அது உண்டு. முந்தைய நபிமார்கள் மௌத்தை அனுபவித்தது போலவே உங்களுக்குரிய தூதரும் மௌத்தை அனுபவிப்பார்.

நீங்கள் உண்மையான ஏகத்துவத்திலிருந்து நீங்கி இணைவைத்தலைக் கைக்கொள்வீர்களோ என நான் அஞ்சுகிறேன். மேலும் மாயமான இவ்வுலக இன்பங்களுக்கு அடிமையாகி விடுவீர்களோ என நான் பயப்படுகிறேன். நீங்கள் இவ்வுலக இச்சைகளை ஏற்பீர்களாயின் கொடுமையான நரக தண்டனையையே அனுபவிப்பீர்கள். ஆகவே மக்களே நல்லமல்களைப் புரிந்து சுவனத்தைப் பெற்றுக் கொள்வதில் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

மேலும் முஹாஜிரீன்களே! உங்களுக்கு ஆதரவளித்த அன்சாரிகள் விடயத்தில் உதவியாக நடந்து கொள்ளுங்கள். உங்களில் ஒருவர் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஆளுகின்ற உங்கள் பணியை அன்சாரிகள் விரும்புவார்கள். ஆகவே அவர்களது சொற்களையும் கேட்டு நடவுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் ஓர் நீண்ட உபதேசத்தை மக்களுக்கு ஆற்றினார்கள்.

இவ்வுரை புதூகுஷ்ஷாமில் அபூபக்கரை முன்னிலை நிறுத்த படலத்தில் 18 – 44 வரையான செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது:

*“வானு லாப்பெரும் புகழணி வல்லவ னருளாற்*
*றானு லாவிய நுமர்நபிக் கவதிநாள் சார்ந்தென்*
*றான நீவிரி னகத்தெழு துயரினா லழுது*
*மான நீவினீ ரென்றியா மறிந்தன மதித்தே”[1]*

இதற்கான ஆதாரங்களை ஸஹீஹுல் புஹாரியிலும் மேலும் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு என்ற நூலில் 567 – 568 வரையான பக்கங்களிலும் காணலாம்.

**நபி (ஸல்) அவர்கள் மரணித்த வேளையில் ஸஹாபாத்தோழர்களினதும் பெண்மணிகளினதும் அவல நிலை**

நபி (ஸல்) அவர்களுக்கு காய்ச்சல் மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கையில், அவர்கள் தமது வாழ்நாளின் இறுதிப்பகுதியை அடையப்போவதை உணர்ந்து கொண்டார்கள். மேலும் ஸஹாபாத் தோழர்களும் அதனை அறிந்து கொண்டார்கள். பின்பு தனது அன்பு மனைவி ஆயிஷா (றழி) அவர்களின் மடியில் தலையை சாய்த்தவர்களாக அல்லாஹ்வின் சந்நிதானத்தை அடைந்தார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

அதன் பின்பு ஸஹாபாத் தோழர்களும் பெண்மணிகளும் மக்களும் பெரும் கவலைக்குள்ளானார்கள். அது தொடர்பாக புதூகுஷ்ஷாமில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அவற்றை நபி நாயகம் உபாத்துப் படலத்தில் 44 – 77 வரையான செய்யுள்களில் காணலாம். இவ்வரலாற்றின் உண்மைத்தன்மையை முஹம்மத் நபி

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : அபூபக்கரை முன்னிலை நிறுத்த படலம் : 18, ப. 241

(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு எனும் நூல் பறைசாட்டுகிறது. அவ்விடயம் பின்வருமாறு:

> "இறுதி நேரம் நெருங்கவே ஆயிஷா (றழி), நபி (ஸல்) அவர்களைத் தனது நெஞ்சோடு அணைத்துக் கொண்டார்கள். மேலும் கடைசி வார்த்தையை மட்டும் மூன்று முறை கூறி, உயர்த்திய அவர்களுடைய கை சாய்ந்தது. உயர்ந்தோனிடம் சென்றார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்."[1]

## ஆயிஷா (றழி) மற்றும் பாத்திமா (றழி) ஆகியோரது நிலை

அந்த வகையில் நபி (ஸல்) அவர்களின் மனைவியான ஆயிஷா (றழி) அவர்களினதும், மகளான பாத்திமா (றழி) அவர்களினதும் துயர நிலையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் பெருமானாரின் மிக நெருக்கத்துக்குரியோராவர். மேலும் அவர்கள் தமது உடலில் அசைவுகள் எதுவும் இன்றி நிலைகுலைந்து நின்றார்கள். முகத்தில் எவ்வித செழிப்புமின்றி கலக்கமுற்றார்கள். மேலும் நபி (ஸல்) அவர்களின் ஏனைய மனைவியரும் இவ்வாறே கலக்கமுற்றார்கள். மதீனா வாழ் மக்கள் அனைவருமே பெரிதும் துயருற்று வருந்தினார்கள். பின்வரும் செய்யுள் இதனை விளக்குகிறது:

> *"விழியினை முகிழ்த்தா ரல்லர் வினையுடற் கொண்டா ரல்லர்*
> *மொழியினை யுரைத்தா ரல்லர் முகமதி செழித்தா ரல்ல*
> *ரிழிவுய ரறிந்தா ரல்ல ரிருதயத் துணர்வி லாது*
> *கழிமர மனைய லொத்தா ராயிசா கதீசா செல்வி"*[2]

## உமர் (றழி) அவர்களின் நிலை

நபி (ஸல்) அவர்களின் வபாத்தினால் உமர் (றழி) அவர்கள் பெரிதும் கவலை கொண்டார்கள் என

[1]உமர் ஷரீ∴ப் காஸிமி. அ, (2006), அர்ரஹீக் அல்மக்தூம் (தமிழாக்கம்), பக். 571, 572

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : நபி நாயகம் உபாத்துப் படலம் : 44, ப. 283

புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளது. அதனை விவரிக்கும் போது, உமர் (றழி) அவர்களுக்கு என்ன நிகழ்ந்தது? என்ன செய்வது? என்பதே தெரியவில்லை. துயரம் அதிகரித்து அவர்களது உணர்வுகளே மாறிப்போனது. அதன் காரணமாக உமர் (றழி) அவர்கள் உருவிய வாளைக் கையில் ஏந்தியவர்களாக, பெருமானாருக்கு மயக்க நிலையே ஏற்பட்டுள்ளது. எனவே எவரேனும் நபிகளார் இறந்து விட்டார் எனக் கூறினால் இவ்வாளேலேயே வெட்டி விடுவேன் எனக் கூறியவராக அங்குமிங்கும் அலைந்து திரிந்தார்கள். இவ்வுண்மைச் சம்பவம் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு என்ற நூலில் 572ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

> “உமர் (றழி) அவர்கள் எழுந்து நின்று “சில நயவஞ்சகர்கள் நபி (ஸல்) அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று நினைக்கின்றனர். நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் மரணிக்கவில்லை. மூஸா இப்னு இம்ரான் (அலை) அல்லாஹ்வைச் சந்திக்கச் சென்று நாற்பது நாட்கள் தனது சமூகத்தாரை விட்டு மறைந்து இருந்த போது மக்கள் மூஸா மரணித்து விட்டார் என எண்ணினார்கள். ஆனால் மூஸா (அலை) திரும்பி வந்தார்கள். அவ்வாறே நபியவர்களும் தன் இறைவனைச் சந்திக்கச் சென்றுள்ளார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நபி (ஸல்) அவர்கள் நிச்சயம் திரும்ப வருவார்கள். தான் மரணித்து விட்டதாகக் கூறியவர்களின் கைகளையும் கால்களையும் வெட்டுவார்கள்?” எனக் கூறினார்கள்.”

இதனை புதூகுஷ்ஷாமில், நபி நாயகம் உபாத்துப் படலத்தில் 50 ஆவது செய்யுள் விளக்கியுள்ளது:

> *“வல்லவ னயினார் தம்மை யியக்கிய மயக்க மன்றி*
> *யில்லைவே றெவர்க ளேனு மின்னுயிர் துறந்தா ரென்றாற்*
> *கொல்லுவன் வாளா லென்ன வுமறுளங் கொண்ட தன்மைச்*

*சொல்லொடுந் திரிந்தார் நாட்டு முணர்வுதோன் றிடாது மாதோ"*[1]

## உஸ்மான் (றழி) அவர்களின் நிலை

நபி (ஸல்) அவர்களின் வபாத்தை அறிந்த மென்மைக் குணம் கொண்ட உஸ்மான் (றழி) அவர்கள் பெரிதும் கலக்கமுற்றார்கள். மேலும் நிலை தடுமாறியவர்களாக தமது வீட்டுக்கும் நபி (ஸல்) அவர்களின் வீட்டுக்குமாக மாறி மாறி உலாவிக் கொண்டே இருந்தார்கள். இது நபி நாயகம் உபாத்துப் படலத்தில் 51 ஆவது செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*"வாய்வழுங் காது நெஞ்ச மதியொரு நிலைப டாது*
*நாயகர் மனைக்குந் தம்மில் லிடையினி னடத்தல் மீள*
*யாயின ரொருவன் றன்கை யங்கையாற் பிடித்து வென்றி*
*மேயநல் லறிவின் வாகை விளங்கிய வுதுமா னன்றே"*[2]

## அலி (றழி) அவர்களின் நிலை

வீரமிக்க அலி (றழி) அவர்கள் பெருமானாரின் இழப்பினால் துயர மிகுதியில் பேச்சின்றி முகம் வாடி தமது வீட்டிலேயே முடங்கிக் கிடந்தார்கள் என பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*"கடங்கவுள் வேழம் அன்ன வொன்னலர் கருத்து ணாட்டு*
*மடங்கலங் கொடியின் வீர வாளலி யெழுதும் வண்ணத்*
*தடங்கொள்சித் திரத்தி னாக்கச் செய்வினை தனக்கி லாது*
*முடங்கின ரொத்தார் தம்மி லுயிர்ப்பொடு முகமுஞ் சாம்பி"*[3]

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : நபி நாயகம் உபாத்துப் படலம் : 50, ப. 284
[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : நபி நாயகம் உபாத்துப் படலம் : 51, ப. 285
[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : நபி நாயகம் உபாத்துப் படலம் : 52, ப. 285

### அப்பாஸ் (றழி), அலி (றழி) அவர்களினது நிலை

நபி (ஸல்) அவர்கள் மரணித்த வேளையில் அப்பாஸ் (றழி) மற்றும் அலி (றழி) ஆகியோர் இருவரும் மனத்தெளிவுடன் அல்குர்ஆனின் வசனங்களையும் பெருமானாரின் ஹதீஸ்களையும் தோழர்களுக்குக் கூறி அவர்களின் சஞ்சலத்தையும் கலக்கத்தையும் நீக்கிக் கொண்டிருந்தார்கள்.

மேலும் அபூபக்கர் (றழி) அவர்கள் தன் உற்ற தோழரின் பிரிவை எண்ணி பெரிதும் துயருற்றார்கள். மேலும் அவர்கள் மக்கள் பெரிதும் துயருருவதைக் கண்டு, அவர்களின் துயரை நீக்கும் விதமாக ஓர் உரையினை நிகழ்த்தினார்கள்:

“மக்களே! வல்லவன் அல்லாஹ்வே புகழுக்குரியவன். அத்தகைய அல்லாஹ்வின் திருத்தூதரே பெருமானார் (ஸல்) அவர்களாவார்கள். அல்லாஹ்வின் பிரதிநிதிகளில் சிறந்தவராய் அவர்கள் விளங்கினார்கள். அல்லாஹ் இருளில் இருந்த எமக்கு ஒளிவிளக்காய் நபிகளாரை அனுப்பி வைத்தான். முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இறப்புக்குரியவர். அவரை நாம் வணங்கவில்லை. மாறாக அல்லாஹ்வையே வணங்கி வருகிறோம். அவன் என்றும் நிலையானவன். அவன் இறப்பவனல்ல.

மேலும் தொடர்ந்து கூறினார்கள், பெருமானாரின் தோழர்களே! உள்ளத்தை நிலைகுலைய வைத்து விடாதீர்கள். எம்மைப் படைத்த அல்லாஹ்வையே எப்பொழுதும் வணங்குங்கள். அவன் எத்தகைய தேவையும் அற்றவனாகவும் நிலையானவனாகவும் இருக்கிறான். மேலும் ஓர் அல்குர்ஆன் வசனத்தையும் ஓதிக் காட்டினார்கள்:

> “இன்னும் முஹம்மத் ஒரு தூதரேயன்றி, (இறக்காமல் இருக்கக்கூடியவர்) இல்லை. அவருக்கு முன்னரும், (இவ்வாறே) தூதர்கள் பலர் திட்டமாகச்

சென்றிருக்கின்றனர். அவர் இறந்துவிட்டால் அல்லது கொல்லப்பட்டுவிட்டால் நீங்கள் உங்கள் குதிங்கால்களின் மேல் (புறங்காட்டித்) திரும்பி(ச் சென்று) விடுவீர்களா? (அவ்வாறு) எவரேனும் தனது இரு குதிக்கால்களின் மீது (புறங்காட்டித்)திரும்பி (ச் சென்று) விட்டால், அதனால் அவர் அல்லாஹ்வுக்கு எந்த இடையூறும் செய்யவேமாட்டார். மேலும், நன்றிசெலுத்துவொருக்கு அல்லாஹ் (நற்)கூலியைத் தருவான்."[1]

இவ்வாறு பல அறிவுரைகளையும் அல்குர்ஆன் வசனங்களையும் அபூபக்கர் (றழி) அவர்கள் ஓதிக்காட்டி விட்டு மிம்பரிலிருந்து இறங்கினார்கள். பின் தோழர்கள் அபூபக்கர் (றழி) அவர்களின் கருத்துக்களை ஏற்று தெளிவு பெற்றார்கள். மேலும் உமர் (றழி) அவர்களும் இவ்வுரையினூடாக நிலைமையை உணர்ந்து தெளிவு பெற்றார்கள். இந்நிகழ்வை பின்வரும் செய்யுள் விளக்குகிறது:

*"மயக்கமு மறிவு மாறு மாற்றமு முரிய பேர்கட்*
*டியக்கமுங் கலக்கஞ் செல்லுந் திருமொழி யுரைத்துக் காட்டி*
*நயக்கருத் தருளி நின்றார் நனைமலர்த் தொடையப் பாசும்*
*வயக்களி றனைய வீர வாளபூ பக்க ரும்மே"*[2]

இவ்வாறாக பெருமானாரின் இழப்பினால் ஸஹாபாத்தோழர்களினதும் பெண்மணிகளினதும் நிலைமைகள் புதூகுஷ்ஷாமில் நபி நாயகம் உபாத்துப் படலத்தில் 50 – 70 வரையிலான செய்யுள்களில் கூறப்பட்டுள்ளன. மேலும் இதற்கு ஆதாரமாக முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு என்ற நூலில் 572, 573 ஆம் பக்கங்களிலும் நாயகத்தின் கலீபாக்கள் வரலாறு என்ற நூலில் 64 – 68 வரையான பக்கங்களிலும் கூறப்பட்டுள்ளது. அவ்விடயங்களில் ஒரு பகுதி பின்வருமாறு:

---

[1] அல்குர்ஆன் : ஆலு இம்ரான் : 144

[2] அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : நபி நாயகம் உபாத்துப் படலம் : 53, ப. 285

"………அபூபக்கர் (றழி) அவர்கள் மஸ்ஜிதுன் நபவிக்கு வந்தார்கள். அங்கு உமர் (றழி) அவர்கள் மக்களிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அபூபக்கர் (றழி) "உமரே! அமருங்கள் என்று உரைத்ததும் உமர் (றழி) அவர்கள் அமர மறுத்து விட்டார்கள். அபூபக்கர் (றழி) மிம்பரில் ஏறி சப்தமிட்டு தஷஹ்ஹுத் முழங்கினார். மக்கள் உமர் (றழி) அவர்களை விட்டு நீங்கி அபூபக்கர் (றழி) அவர்களை நோக்கி விரைந்தனர். அப்போது அபூபக்கர் (றழி) "உங்களில் யார் முஹம்மதை வணங்கிக் கொண்டிருந்தாரோ! நிச்சயம் முஹம்மது மரணித்து விட்டார் என்பதைத் தெரிந்து கொள்ளட்டும்! உங்களில் யார் அல்லாஹ்வை வணங்கினாரோ! நிச்சயமாக அல்லாஹ் என்றென்றும் உயிருடன் இருப்பவன் மரணிக்க மாட்டான்."[1]

## நபி (ஸல்) அவர்களது பண்புகள் மற்றும் குணாம்சங்கள்

நபி (ஸல்) அவர்கள் அழகிய பண்புகளையும் சிறந்த குணங்களையும் கொண்டவர்களாக இருந்துள்ளார்கள். மக்களுடைய உள்ளங்களின் ஆழத்தில் அவர்களது கண்ணியம் வேறூன்றி இருந்தது. நபியவர்களைப் பாதுகாக்க மக்கள் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டார்கள். இதற்குக் காரணம் நபியவர்களின் நற்குணங்களேயாகும். அந்த வகையில் நபிகளாரின் பண்புகளும் நற்குணங்களும் புதூகுஷ்ஷாமில் விளக்கப்பட்டுள்ளமையை காணமுடிகிறது. அவை பின்வருமாறு :

நபி (ஸல்) அவர்களின் நபித்துவ முத்திரையானது பிடரியின் கீழ் அமைந்திருந்தது. இதனை பின்வரும் செய்யுள் விளக்குகிறது:

*"…….பேரு டுத்த முத்திரையிற் றிரளொளிவே பிடரியின் கீழ்*
*பிறங்கி வீசப்……"*[2]

---

[1]உமர் ஷரீஃப் காஸிமி. அ, (2006), அர்ரஹீக் அல்மக்தூம் (தமிழாக்கம்), ப. 573
[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : 06, ப. 41

இதற்கு ஆதாரமாக ஸஹீஹ் முஸ்லிமிலுள்ள ஹதீஸை நோக்கலாம் :

> "ஜாபிர் பின் சமுரா (றழி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது முதுகில் (நபித்துவ) முத்திரை இருந்ததை நான் பார்த்தேன். அது புறா முட்டை போன்று இருந்தது."[1]

நபி (ஸல்) அவர்கள் பேரழகு பொருந்தியவராகவும் காணப்பட்டார்கள். கீழ்வரும் செய்யுள் இதனை விளக்கியுள்ளது:

*"……வண்கதிரின் மலர்முகமுஞ் சிரத்திலங்குஞ் சருவந்த*
*மவுலி மாதோ"*[2]

இதற்கு ஆதாரமாக உள்ள ஹதீஸை நோக்குகையில், பராஉ பின் ஆஸிப் (றழி) அவர்கள் கூறியதாவது:

> "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மக்களிலேயே மிக அழகான முகம் உடையவர்களாகவும் அழகான உருவ அமைப்புக் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் ஒரேயடியாக உயரமானவராகவும் இருக்கவில்லை. குட்டையானவராகவும் இருக்கவில்லை."[3]

நபி (ஸல்) அவர்கள் வஞ்சகம், பெருமை போன்ற தீய குணங்களைத் தடுப்பவராகவும் காணப்பட்டார்கள். பின்வரும் செய்யுள் இதனை விளக்குகிறது:

*" ……வுலகின் மீதே*
*யழுக்காறு நிந்தைமத வஞ்சமுதற் றீவினைக*

---

[1]அல்ஹதீஸ் : ஸஹீஹ் முஸ்லிம் : 4682

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : 03, ப. 40

[3]*அல்ஹதீஸ் : ஸஹீஹ் முஸ்லிம் : 4665*

*ளனைத்தும் போக்கும்*
*விழுப்பாறு புனைநீத வறவாழி வையகத்து*
*விளங்க மாதோ''*[1]

இதற்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸ் அமைகிறது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

> ''எனது நிலையும் என் சமுதாயத்தாரின் நிலையும் ஒரு மனிதரின் நிலையை ஒத்திருக்கிறது. அவர் தீ மூட்டினார். விட்டில் பூச்சிகளும் இதர பூச்சிகளும் அந்தத் தீயில் விழலாயின. (நரக நெருப்பில் விழுவதிலிருந்து உங்களைத் தடுக்க) உங்கள் இடுப்புக்களை நான் பிடித்துக் கொண்டிருக்கிறேன். (ஆனால்) நீங்களோ (என்னையும் மீறி) நரகத்தில் நுழைந்துக் கொண்டிருக்கிறீர்கள். இதை அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.''[2]

நபி (ஸல்) அவர்கள் நல்ல வார்த்தைகளைக் கொண்டு உரையாடக் கூடியவராவார். இதனை கீழ்வரும் செய்யுள் விளக்கியுள்ளது:

*''யவையார மொழியோடு முயர்தோறுஞ் செம்மணிசீ*
*ரலர்ந்துப் பூப்ப''*[3]

இதற்கு ஆதாரமாக அமைவது:

> ''சிமாக் பின் ஹர்ப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது: நான் ஜாபிர் பின் சமுரா (றழி) அவர்களிடம் ''நீங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது அவையில் அமர்ந்திருக்கிறீர்களா?'' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ''ஆம் அதிகமாகவே (அமர்ந்திருக்கிறேன்). அவர்கள் சுப்ஹுத் தொழுகையை முடித்த பின்

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : 12, ப. 44

[2]அல்ஹதீஸ் : ஸஹீஹ் முஸ்லிம் : 4589

[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1957), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : 08, ப. 42

சூரியன் உதயமாவதற்கு முன் தாம் தொழுத இடத்திலிருந்து எழுந்திருக்க மாட்டார்கள். சூரியன் உதயமான பின்பே (அங்கிருந்து) எழுவார்கள். அப்போது மக்கள் அறியாமைக் காலத்தில் நடந்த விஷயங்கள் பற்றி பேசி சிரித்துக் கொண்டிருப்பார்கள். (அதைக் கேட்டு) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் புன்னகைத்துக் கொண்டிருப்பார்கள்.'' என்று கூறினார்கள்.''[1]

மேலும் பல ஆதாரங்களாக நபி (ஸல்) அவர்களது குணாம்சங்கள் மற்றும் பண்புகள் தொடர்பில் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு என்ற நூலில் 584 – 593 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத வகையில் அழகிய பண்புகளையும், சிறந்த குணங்களையும் கொண்டவர்களாக நபி (ஸல்) அவர்கள் திகழ்கிறார்கள்….''[2]

## 2. அபூபக்கர் (றழி) அவர்கள் தொடர்பானவை

நபி (ஸல்) அவர்களின் வபாத்திற்குப் பிறகு இஸ்லாமிய ஆட்சியை தொடர்ந்து வழிநடாத்துவதற்குச் சிறந்த தலைவராக அபூபக்கர் (றழி) அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அதேவேளை அபூபக்கர் (றழி) அவர்கள் ஆட்சியை ஏற்ற போதும் போர்களுக்குச் செல்லும் போதும் பல உபதேசங்கள் செய்துள்ளார்கள். மேலும் அபூபக்கர் (றழி) அவர்கள், இஸ்லாத்தின் பரவலுக்காக ஷாம் நாட்டில் பல்வேறு போராட்டங்களையும் மேற்கொண்டுள்ளார்கள். இவ்வாறான நிகழ்வுகள் பின்வருமாறு புதூகுஷ்ஷாமில் விளக்கப்பட்டுள்ளது.

---

[1] அல்ஹதீஸ் : ஸஹீஹ் முஸ்லிம் : 4641

[2] உமர் ஷரீ்.ப் காஸிமி. அ, (2006), அர்ரஹீக் அல்மக்தூம் (தமிழாக்கம்), ப. 584

## அபூபக்கர் (றழி) அவர்கள் அரசு செலுத்தியமை

பெருமானார் (ஸல்) அவர்களது வபாத்துக்குப் பின்னர், பெருமானாருக்கு அடிபணிந்து திறை செலுத்தி வந்தோர் இனிப்பயமில்லை என்று எண்ணி தமது இச்சைப்படி செயல்புரியத் தொடங்கினார்கள். இவ்வாறு மக்கள் நெறி பிறழ்ந்து செல்லக் கூடாது என்றும் நிலைமையைச் சீர் செய்யும் நோக்கிலும் நபித்தோழர்கள் ஒன்று கூடி ஓர் தலைவரை தெரிவு செய்ய முற்பட்டனர். அந்த வகையில் முஹாஜிரீன்கள், அன்சாரிகள் மற்றும் ஏனைய தோழர்களும் ஸகீபா பனீ ஸாஇதாவில் கூட்டம் கூடினர். இக்கலந்தாலோசனையில் இறுதியாக அபூபக்கர் (றழி) அவர்கள் கலீபாவாக தெரிவு செய்யப்பட்டார்கள். இது தொடர்பாக புதூகுஷ்ஷாமில் அபூபக்கர் அரசுரிமைப் படலத்தில் முழுமையாகக் கூறப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப செய்யுள் பின்வருமாறு:

*''தெரிமொழி யுணர்ந்தவர் செல்வ மேன்மையிற்*
*புரிமொழி மூவரும் புகழ்ந்து கூறினர்*

*வருமொழிக் கேதுவின் வள்ள லாண்டகை*
*யுருமொழி வலியபூ பக்க ரென்றரோ''[1]*

மேலும், இதற்கு ஆதாரமாக, அபூபக்கர் (றழி) அவர்கள் கலீபாவாக பதவியேற்றமை தொடர்பில் நாயகத்தின் கலீபாக்கள் வரலாறு என்ற நூலில் 67 – 82 வரையான பக்கங்களில் கூறப்பட்டுள்ளது.

> "……தனிமையில் அவர்களை அழைத்து ஹழ்ரத் உமர் (றழி) அவர்கள் மெதுவாகக் கூறினார்கள், ஸக்கீ∴பா அல் - பனீ ஸாஇதாவில் அன்ஸார்கள் ஒன்றுகூடி, தங்களில் ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுக்க முனைந்திருக்கிறார்கள் என்று. உடனடியாக அங்கிருந்து வெளியேறி ஹழ்ரத் உமர் (றழி) அவர்களோடு நடந்த ஹழ்ரத் அபூபக்கர் (றழி)

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : அபூபக்கர் அரசுரிமைப் படலம் : 16, ப. 06

> அவர்கள், வழியில் சந்திக்கக் கிடைத்த ஹழ்ரத் அபூ உபைதா (றழி) அவர்களையும் இணைத்துக் கொண்டவர்களாக ஸக்கீ.்.பா அல் - பனீ ஸாஇதாவை அடைந்தபோது, அங்கே கிலா.்.பத்தைப் பற்றி காரசாரமாக விவாதித்த வண்ணமிருந்தனர் அன்ஸார்கள்."[1]

இவ்வாறு அபூபக்கர் (றழி) அவர்கள் கலீபாவாக நியமனம் பெற்ற பின்பு, நபி (ஸல்) அவர்களின் மறைவின் பின் ஈமானிலிருந்து மாறியோருக்கு எதிராக பல போர்களை மேற்கொண்டு இஸ்லாத்தை வளம் பெறச் செய்தார்கள்.

## அபூபக்கர் (றழி) அவர்கள் நிகழ்த்திய உபதேசங்கள்

அபூபக்கர் (றழி) அவர்கள் தமது வாழ்நாளில் நிகழ்த்திய உபதேசங்கள் தொடர்பாகவும் புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளன. அந்த வகையில் ஷாம் தேசத்துக்கான படையை அனுப்பத் தயாராகும் வேளையில், அபூபக்கர் (றழி) அவர்கள் தோழர்கள் மத்தியில் பின்வருமாறு உரையாற்றினார்கள்:

அபூபக்கர் (றழி) அவர்கள் முதலில் அல்லாஹ்வைப் புகழ்ந்து விட்டு, நபி (ஸல்) அவர்கள் மீது மேலான ஸலவாத்தையும் கூறி விட்டு, மக்களை நோக்கி விழித்து பின்வருமாறு கூறுகிறார்கள்: இஸ்லாத்தின் மேன்மை குணங்களைப் பெற்று, நபி (ஸல்) அவர்களின் அன்புக்குரியோராய் விளங்குகின்றவர்களும் அத்தோடு எனக்கு கீழ்படிந்து நடக்கும் மக்களே! எங்கள் நபி (ஸல்) அவர்கள் ஏனைய நபிமார்களிலிருந்து சிறப்புறுவது போல், நபி (ஸல்) அவர்களது உம்மத்தினரும் ஏனைய எல்லா உம்மத்தினரையும் விட சிறப்பு வாய்ந்தோர்களாவர். இவ்வும்மத்திலுள்ளவர்கள் ஒரு நன்மையை எண்ணி, அதனை செய்தாலும் செய்யாவிட்டாலும் அதற்கு இறைவனிடத்தில் நற்கூலியுண்டு. அதேவேளை ஒரு தீமையை எண்ணி அதனைச் செய்தாலேயன்றி, செய்யாது

[1]முஹம்மது தம்பி, எம்.எஸ்., (1990), நாயகத்தின் கலீபாக்கள் வரலாறு, ப. 74

விட்டால் அது பாவமாக மாட்டாது. மேலும் இவ்வுலகில் ஓர் எள் அளவு நன்மை செய்தாலும் அதன் நன்மை இம்மையிலும் மறுமையிலும் பத்து மடங்காக அதிகரித்துக் கொடுக்கப்படும். உலகத்திலே இத்தகைய மேன்மை அளிக்கப்பட்டவர் யாருமில்லை.

இஸ்லாத்தின்பால் உறுதியான நம்பிக்கைக் கொண்டவர்களுக்கு முன்னால் அதிக எண்ணிக்கை கொண்ட நிராகரிப்பாளர்களாக இருப்பினும் ஈமான் கொண்டோரை எதிர்த்து நிற்க ஆற்றல் பெற மாட்டார்கள். மேலும் ஓர் அல்குர்ஆன் வசனத்தையும் ஓதிக் காட்டினார்கள்:

> "இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை நான் பரிபூரணமாக்கி விட்டேன். என்னுடைய அருட்கொடையை உங்கள் மீது முழுமையாக்கியும் விட்டேன்."[1]

இத்தகைய தனிச்சிறப்புக்கு உரித்தான உம்மத்தினராக இருக்கிறீர்கள். மேலும் அபூபக்கர் (றழி) அவர்கள் தனது உரையைத் தொடர்ந்தார்கள்: தலைசிறந்த உம்மத்தினராய் விளங்கும் மக்களே! பெருமானார் (ஸல்) அவர்கள் உள்ளத்தில் காணப்பட்டிருந்த ஒரு விடயத்தை உங்களுக்கு எடுத்துக் கூறுகிறேன். அவ்விடயம் உங்களது மேலான உடல், பொருள், ஆவி என்பவற்றைக் கொடுத்தும் பெறக்கூடியதே. மேலும் எந்த வர்த்தகத்திலும் மேலான இலாபத்தைத் தரக்கூடியது. அத்தகைய இலாபம் தரக்கூடிய செய்தியைக் கூறுகிறேன் என்றார்கள். அதாவது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஓர் இறைஉதிப்பு தோன்றிய விடயமே அது, அதாவது இஸ்லாமானது உலகெங்கிலும் பரவி விளங்கும். எனவே உலகு பூராக நீங்கள் கைக்கொள்வது உறுதியாகும். எனவே நபி (ஸல்) அவர்கள் தொடக்கி வைத்த ஷாம், றூம் தேசங்களுக்கிடையிலான போரை நான் தொடர்ந்து மேற்கொள்ள எண்ணியுள்ளேன் என்று அபூபக்கர் (றழி) அவர்கள் கூறி மேலும் தொடர்ந்தார்கள். எமக்கு உதவியாக அல்லாஹ்வும் றஸூல் (ஸல்) அவர்களும் எமக்கு வழிகாட்டியாக வந்த அல்குர்ஆனும் உள்ளன. மேலும்

---

[1] அல்குர்ஆன் : அல்மாயிதா : 03

போர்புரியக் கூடிய உடல் வலிமை கொண்ட ஸஹாபாத் தோழர்களாகிய நீங்களும் இருக்கிறீர்கள். எனவே எமது வலிமை இவ்வுலகில் அனைத்தையும் விட மேலானதாகவே காணப்படுகிறது. வஞ்சகம் கொண்ட ஹிறக்கீலை தோல்வியடையச் செய்யுமாறும் அல்குர்ஆனின் போதனைகளை உள்ளத்தில் ஏற்று இறைவனுக்கு அடிபணிந்து போர் புரிவோமாயின் மேலான வெற்றியை பெறுவோம் எனக் கூறி அபூபக்கர் (றழி) அவர்கள் தமது உரையை நிறைவு செய்தார்கள்.

இவ்வுரையானது சித்தீக்கிய்யாக் காண்டத்தில் படையெழுச்சிப் படலத்தில் *2 – 14* வரையிலான செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப செய்யுள் பின்வருமாறு:

*"வென்றியெண் டிகையிற் றுன்னும் விறலசு காபி மார்கள்*
*நன்றியின் முதியோர் போற்ற நன்னபி முகம்ம தென்னு*
*மன்றன்மெய் யுடையார் பாத மலரது சிறப்பு வாய்ந்த*
*பொன்றிகழ் மின்ப ரேறி யினையன புகழ்வ தானார்"*[1]

அபூபக்கர் (றழி) அவர்களின் அழைப்பை ஏற்று போருக்காக வந்த ஸஹாபாத் தோழர்களை நோக்கி படைக்கு புறப்படு முன் ஓர் உரையை நிறைவேற்றினார்கள். அவ்வுரையானது பின்வருமாறு:

மக்களே! எவ்வளவு வெற்றிகள் கிடைத்தாலும் ஆணவம் கொள்ளாதீர்கள். மேலும் அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தை மறந்து இறுமாப்புக் கொள்ளாதீர்கள். பெருமையடித்தல், செருக்குக் கொள்ளுதல் போன்ற அகப் பெருமைகளில் ஈடுபடாதீர்கள். அத்தோடு பிறர் பொருள் மீது ஆசைக் கொள்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். எந்நிலையைக் கொண்ட மனிதராயிருப்பினும் நீதியையே நிலைநாட்டுங்கள். ஏனெனில் அநீதியானது பாவ நிலையையே தோற்றுவிக்கும். எனவே அதிலிருந்து விலகி நடந்து கொள்ளுங்கள். மேலும் உலகில் பிறந்த உயிர்கள்

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1989)*, புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : படையெழுச்சிப் படலம் : *02*, ப. *21*

சோம்பலின்றி ஊக்கத்துடன் செயற்படுவது அவசியமாகும் என்றும் வலியுறுத்தினார்கள். மேலும் படையிலிருந்து புறமுதுகிட்டோடுவதை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள். ஏனெனில் புறமுதுகிட்டோடுபவன் அல்லாஹ்வின் கோபத்திற்கு உரியவனாகிறான்.

மேலும், நோயாளர், முதியவர், பெண்கள் விடயத்தில் அழிவுகளை ஏற்படுத்தாதீர்கள். அத்தோடு பகைவர்களின் இல்லங்களை நெருப்பினால் எரிக்காதீர்கள். மேலும் போரில் கிடைத்த பொருட்களை பங்கிட முன்பு அவற்றை அறுத்து உண்டு விடாதீர்கள் என அபூபக்கர் (றழி) அவர்கள கூறிவிட்டு மேலும் தொடர்ந்தார்கள். ஒப்பந்தங்கள் விடயத்தில் நம்பிக்கை மோசடி செய்து விடாதீர்கள். அத்தோடு காடுகளில் தவத்தில் ஈடுபட்டிருக்கும் முனிவர்களைக் கண்டால் அவர்களைத் துன்புறுத்தாதீர்கள். மேலும் பொய்த்துறவிகள், இணைவைக்கும் முஷ்ரிக்குகள் ஆகியோரது அருகிலும் செல்லாதீர்கள். ஏனெனில் அவர்கள் எமது எதிரிகளாவார்கள். அதன்றி திறைக் கொடுப்போரிடமும் கோபம் கொள்ளாதீர்கள். மேலும் சமாதானமாகி திறை கொடுக்க முன்வருவோருடன் போருக்குச் செல்லாதீர்கள். மேலும் அதேபோல் போர்க்களமாக இருந்தாலும் அழகிய வழிமுறைகளையே கையாளுங்கள்.

அபூபக்கர் (றழி) அவர்கள் மேற்கூறியவாறு பல நல்லுபதேசங்களைக் கூறிவிட்டு படையினரை வழியனுப்பி வைத்தார்கள். இவ்வுபதேசம் சித்தீக்கிய்யாக் காண்டத்தில் படையெழுச்சிப் படலத்தில் 76 – 93 வரையிலான செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப செய்யுள் பின்வருமாறு:

*“விறற்படைக் கொற்றமும் வியப்பும் பூண்டவித்*
*திறற்படை யாவர்மேற் சிறந்த தன்மையால்*
*மறப்பவத் தகத்திரு மாப்புக் கொள்ளலீ*
*ரறப்பெருந் துறைவிளை யாடற் கேதுளீர்”*[1]

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : படையெழுச்சிப் படலம் : 76, ப. 49

இவ்விடயத்துக்கு ஆதாரமாக அபூபக்கர் (றழி) அவர்களது உரைகள், கலீபாக்கள் வரலாறு என்ற நூலில் 74 – 80 வரையான பக்கங்களில் கூறப்பட்டுள்ள விடயம் காணப்படுகிறது. மேலும் இஸ்லாமிய வீடியோக்களில் ஒன்றான நான்கு கலீபாக்கள் ஆட்சியும் வரலாறும் (சுருக்கம்) தொடர் -1 அபூபக்கர் சித்தீக் (றழி) என்ற வீடியோவிலும் இதற்கான ஆதாரம் காணப்படுகிறது.

**அபூபக்கர்(றழி) அவர்கள் மேற்கொண்ட படையெடுப்புக்கள்**

**தடைப்பட்டிருந்த உஸாமா (றழி) அவர்களின் தலைமையிலான படை அனுப்பப்பட்டமை**

அபூபக்கர் (றழி) அவர்கள் ஷாம் நாட்டின் தபூக் நகர் நோக்கி படையொன்றை அனுப்பியமை தொடர்பில் புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளது. அதாவது நபி (ஸல்) அவர்கள் ஷாம் தேச எல்லையிலுள்ள தபூக்கிலே திறைபெற்ற வரலாறு அதற்கு முன் கூறப்பட்டது. அந்த வகையில் முஅத்தாவில் கொல்லப்பட்டவர்களின் பழிதீர்ப்பதற்காகவும் எல்லைப்புறக் காவல் நடவடிக்கைக்காகவும் உஸாமா (றழி) அவர்களின் தலைமையில் அனுப்பி வைக்கப்பட்ட படை அண்ணலாரின் மறைவினால் தொடர்ந்து செல்லாது திரும்பி வந்தது. பின் அபூபக்கர் (றழி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் உள் நாட்டுப் பூசல்களைத் தீர்ப்பதற்காக உஸாமா (றழி), காலித் (றழி), அம்ர் இப்னுல் ஆஸ் (றழி), இக்ரிமா (றழி) முதலான தலைவர்களின் கீழ் பல திசைகளுக்கும் படைகளை அனுப்பி நாட்டில் அமைதியை நிலவச் செய்தார்கள். மேலும் உறுதியாகவும் ஆட்சியை ஸ்தாபித்தார்கள்.

இந்நிகழ்வு சித்தீக்கிய்யாக் காண்டத்தில் படையெழுச்சிப் படலத்தின் விளக்கவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப செய்யுள் பின்வருமாறு:

*“முரண்டரு மடைய லாரு முனையற நெறிப்பட் டாரு*
*மிரண்டரு வினையி னாரு மனவிரு மாப்பி னாரும்*
*புரண்டழப் பிறங்கும் வைவேற் புகழொடு வாகை தாங்கி*

*யரண்டரு நீதி வள்ள லபூபக்க ருஞற்றுங் காலம்"*[1]

இதற்கு ஆதாரமாக, கலீபாக்கள் வரலாறு என்ற இஸ்லாமிய வரலாற்று நூலில் 77 – 80 வரையிலான பக்கங்களில் கூறப்பட்டுள்ள விடயங்கள் காணப்படுகின்றன.

## யஸீத் (றழி) அவர்களின் தலைமையில் படை அனுப்பப்பட்டமை

அபூபக்கர் (றழி) அவர்களைச் சூழ அனைத்து ஸஹாபாக்களும் இருக்கையில் கல்வியில் மேம்பட்ட ஒருவரை அழைத்து மக்கா, எமன், ஹிஜாஸ் போன்ற பகுதிகளின் தலைவர்களுக்கு கடிதம் எழுதுமாறு பணித்து, கடித வாசகத்தை அபூபக்கர் (றழி) அவர்களே கூறினார்கள்: முதலில் அல்லாஹ்வைப் புகழ்ந்து, அவன் தூதர் (ஸல்) அவர்களின் மீது ஸலவாத் கூறி, பின் துஆக்களைக் கூறி எழுதுமாறு பணித்தார்கள். தொடர்ந்து எழுதுகையில், பெருமானார் (ஸல்) அவர்கள் ஷாம் நாட்டின் மீது தொடக்கி வைத்த போரை நான் தொடர்ந்து நடாத்த எண்ணியுள்ளேன். அதனை ஏனைய தோழர்களும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அதேபோல் இஸ்லாத்தை ஏற்றுள்ள நீங்கள் புகழையும் பயனையும் பெறும் பொருட்டே இக்கடிதத்தை எழுதுகிறேன். மு.ஃமின்களாகிய உங்கள் உள்ளங்களில் மானம், நீதி, மார்க்கப்பற்று, நல்லெண்ணம் உடையோராயின், இம்மை, மறுமைப் பயன்களைப் பெற்றுத் தரக்கூடிய பீஸபீல் யுத்தத்திற்கு வந்து சேருங்கள் என்றவாறாக எழுதி கடிதத்தை நிறைவு செய்தார்கள். பின் அதனை அனஸ் பின் மாலிக் (றழி) அவர்களிடம் கொடுத்தனுப்பினார்கள்.

பின் அனஸ் (றழி) அவர்கள் அக்கடிதத்தைக் கொண்டு போய் மக்கா, ஹிமாஸ், எமன் நாட்டுத் தலைவர்களிடம் போய்க் கொடுக்க அவர்கள் அதனை ஏற்று

[1] அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : படையெழுச்சிப் படலம் : 01, ப. 20

சில நாட்களிலே மதீனாவை வந்தடைந்தார்கள். பல நாட்டுத் தலைவர்களும் வந்தடைந்ததை அறிந்த மதீனா மக்கள் பெரிதும் மகிழ்ந்தனர். அவர்களுள் முதலில் துல்கிலாகு எனும் தலைவரின் கூட்டத்தினரான ஹிம்யரி என்போர் திரண்டு வந்திருந்தார்கள். அவர்கள் அபூபக்கர் (றழி) அவர்களைச் சந்தித்து ஸலாம் கூறி மகிழ்ந்தார்கள். அதனைத் தொடர்ந்து முறாதி, தாயி, இசுது, அபசி, கனானத்து போன்ற கிளையினரும் அதன் தலைவர்களும் மதீனாவை வந்தடைந்தார்கள். இசுது கிளையிலிருந்து வந்த அபூஹுரைரா (றழி) அவர்களின் வருகையினால் அபூபக்கர் (றழி) அவர்கள் பெரிதும் ஆனந்தம் கொண்டார்கள். இவர்களது வருகையையிட்டு மதீனா வாழ் மக்கள் அனைவரும் பெரிதும் மகிழ்ந்தனர். அவ்வாறு வந்த ஸஹாபாத் தோழர்கள் அனைவரும் மதீனாவிலேயே அதிக காலம் தங்கினர். இவ்வாறு பல நாட்கள் தங்கியிருந்ததால் அவர்களிடம் இருந்த உணவுகள் மற்றும் மேய்ச்சல் உணவுகள் குறைவடைந்தன.

பின் முறாதி கிளையின் தலைவர் கைஸ் என்பவர் அபூபக்கர் (றழி) அவர்களிடம் வந்து நிலைமையை எடுத்துக் கூறினார்கள். கைஸ் (றழி) அவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட அபூபக்கர் (றழி) அவர்கள் அனைவரையும் ஒன்றுகூட்டி ஒரு உயர் மேடையில் ஏறி உரையாற்றினார்கள். அதன் பின் அபூபக்கர் (றழி) அவர்கள் அப்படையினருக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள். பின் கூடியிருந்தோரில் யஸீத் பின் அபூசுப்யான் (றழி) என்பவரை படைத் தளபதியாக நியமித்தார்கள். அத்தோடு றபீஅத் இப்னு ஆமிர் (றழி) என்பவரை யஸீத் (றழி) அவர்களுக்கு உதவியான அமைச்சராக நியமித்தார்கள். பின் யஸீத் (றழி) அவர்கள் தங்கள் படையுடன் போருக்கு புறப்பட்டார்கள். இவ்வாறு புறப்பட்டுச் செல்கையில் அபூபக்கர் (றழி) அவர்கள் படைகள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் தொடர்பில் படையினருக்கு எடுத்துக் கூறி படையினரை அனுப்பி வைத்தார்கள். இவ்வாறு அனுப்பப்பட்ட படையானது ஷாம் நாட்டின் எல்லையான தபூக் நகரை வந்தடைந்தது. பின்வரும் செய்யுள் இப்படை தபூக் சென்றடைந்தமையை விளக்குகிறது:

*"……மின்றவழ் வேற்கை வீரர் விரைந்தனர் புகுந்தார் வாசந்*
*துன்றிய பொழில்சேர் சாமூர் தொடர்தரு மெல்லை முன்னர்*
*நின்றணி நகர மிக்க நிதிநிறை தபூக்கு மாதோ"*[1]

இச்செய்தியை ஹிறக்கீல் தனது ஒற்றற்களினூடாக அறிந்துக் கொண்டான். அதனால் ஹிறக்கீல் பெரும் ஆவேசமடைந்தான். பின் தனக்கு ஆதரவான குழுவினரையும் ஒன்றுகூட்டி அவர்களுடன் தனது ஆலோசனையை மேற்கொண்டான். இதில் பல கருத்துக்களை ஹிறக்கீல் தன் படையினருக்கு எடுத்துக்கூறி உற்சாகமூட்டினான். பல போர்களில் வென்ற நாம் இவ்வறபியினரையும் வெல்வோம் என்றும் கூறினான். பெரும் வஞ்சகம் கொண்ட ஹிறக்கீல் போருக்காக நான்கு படைத் தளபதிகளை நியமித்து ஓர் பெரும் படையை தபூக் நோக்கி அனுப்பினான்.

இவ்வாறு இரு படையினரும் வந்து சேர்ந்ததும், யஸீத் (றழி) அவர்கள் முன்வந்து அல்லாஹ்வின் உதவி குறித்த பல செய்திகளை ஹிறக்கீலின் படையினருக்கு எடுத்துக் கூறினார்கள். பின் இரு படையினருக்குமிடையில் போர் நிகழ்ந்தது. போரிலே றபீஅத்து (றழி) அவர்கள் கொடும் சினம் கொண்ட நாத்தலீக்கு என்பவருடன் போரிட்டு அவனைக் கொன்றார்கள். போரின் இறுதியில் பகைவர்கள் இரண்டாயிரத்து இருநூறு பேர் இறந்தனர். முஸ்லிம்களில் நூற்று இருபது பேர் ஷஹீதானார்கள். இவ்வாறிருக்க, நாத்தலீக்கு என்பவனின் இறப்பினால் அவனின் உடன்பிறப்பான சறுசறு என்பவன் பெரிதும் துயருற்றான். தன் தலைவன் கொல்லப்பட்டது தனக்கு இழிநிலையை உண்டாக்கி விட்டதாக எண்ணி வருத்தமுற்றான். இப்பழியை தீர்த்துக் கொள்ள சறுசறு தன் படையினருக்கு உற்சாகமூட்டி போருக்கு அழைத்தான். அதற்காக யஸீத் (றழி) யிடம் ஒரு தூதுவரை அனுப்புமாறு வேண்ட அதற்கு றபீஅத்து (றழி) தானே தூதுவராக செல்வதாகக் கூறி முன்வந்தார்கள்.

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : படையெழுச்சிப் படலம் : 106, ப. 60

பின் சறுசறு என்பவன் றபீஅத்து (றழி) அவர்களுடன் பேச ஆயத்தமானான். அதாவது நீங்கள் எம்முடன் போரிட வந்ததன் நோக்கம் என்ன என முதலில் வினவினான். இதற்கு விடையாக றபீஅத்து (றழி) அவர்கள் ஒன்று இஸ்லாத்தைத் தழுவ வேண்டும், இல்லையெனில் திறை செலுத்த வேண்டும், அதற்கும் இணங்காவிட்டாலே நாம் போர் புரிவோம் என்று தமது நிபந்தனைகளை எடுத்துக் கூறினார்கள். அதற்கு சறுசறு நீங்கள் இங்கு போரிட்டு விட்டு கிஸ்ராவின் நாட்டின் மீதும் படையெடுத்து போர்புரியுங்கள் என்று இறுமாப்புடன் கூறினான். அதற்கு றபீஅத்து (றழி) அவர்கள் நாம் எமக்கு அண்மையிலுள்ள ஷாம் நாட்டை வென்று அதன் பின் பாரசீகத்தின் மீது படையெடுப்போம் என்று கூறினார்கள். இவ்வாறாக சறுசறுவின் கேள்விகளுக்கு றபீஅத்து (றழி) அவர்கள் சிறப்பாக தமது பதிலினை எடுத்துரைத்தார்கள். இறுதியில் சறுசறு தாம் போருக்கே தயாராயுள்ளோம் என்பதாகக் கூறினான். பின் சறுசறு ஒரு பாதிரியை அணுகி, அவரிடம் இஸ்லாத்தைப் பற்றி முன்னைய வேதங்களில் கூறப்பட்டுள்ளவற்றை அறிந்து கூறுமாறு கேட்டுக் கொண்டான். அதன் பின் அப்பாதிரி நபி (ஸல்) அவர்கள் தொடர்பாகவும் இஸ்லாம் தொடர்பாகவும் பல கேள்விகளையும் றபீஅத்து (றழி) அவர்களிடம் கேட்டான். அதற்கு றபீஅத்து (றழி) அவர்கள் தகுந்த பதில்களை அளித்தார்கள். அதன் பின் றபீஅத்து (றழி) அவர்கள், யஸீத் (றழி) அவர்களை வந்தடைந்ததும் ஒரு பெரும் படையானது பகைவர் புறத்திலிருந்து போரிடுவதற்காக வந்தது. பின் இரு படையினருக்குமிடையில் போர் நிகழ்ந்தது.

இவ்வாறு யஸீத் (றழி) அவர்களின் படை ஷாம் நோக்கி அனுப்பப்பட்டமை தொடர்பில் புதூகுஷ்ஷாமில் படையெழுச்சிப் படலத்தில் கூறப்பட்டுள்ளது. அதன் பின் போர் நடைபெற்றமை தொடர்பில் தபூக்குக் கொண்ட படலத்தில் கூறப்பட்டுள்ளது.

*''ஊறு மன்பினி லுடையவன் றனைப்புகழ்ந் துலக*
*மீறு மன்பினி னுண்மையங் கேதன வேந்தர்*
*தேறு மன்பின பாசுபி யானருள் செல்வர்*

*கூறு மன்பினெ சீதினை நோக்கினர் குறித்தே"*[1]

இச்சம்பவம் இஸ்லாமிய வரலாற்று நூலான கலீபாக்கள் வரலாறு என்ற நூலில் 104 – 111 வரையிலான பக்கங்களில் கூறப்பட்டுள்ளது.

## ஷுரஹ்பீல் இப்னு ஹஸனா (றழி) அவர்களின் தலைமையிலான படை அனுப்பப்பட்டமை

அபூபக்கர் (றழி) அவர்கள், யஸீத் (றழி) அவர்களின் படைக்கு உதவிப் படையாக ஓர் படையை அனுப்பினார்கள். அதுவே ஷுரஹ்பீல் இப்னு ஹஸனா (றழி) அவர்களின் தலைமையிலான படையாகும். இப்படையானது அந்தாக்கியா எனும் நகரத்தின் அரசனான ஹிறக்கீல் ஆட்சி புரிந்து கொண்டிருக்கையில் அனுப்பப்பட்டது. யஸீத் (றழி) அவர்கள் ஹிறக்கீலின் படையுடன் போரிட்டுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலே ஷுரஹ்பீல் (றழி) அவர்களின் படையினரும் வந்து சேர்ந்தனர். பின் இரு படைகளுக்குமிடையில் காரசாரமாக போர் நிகழ்ந்தது. இதில் பகைவர்கள் எண்ணாயிரம் பேர் இறந்தனர். பின் தபூக் நகரை யஸீத் (றழி) அவர்களும் றபீஅத்து (றழி) அவர்களும் கைப்பற்றிக் கொண்டார்கள். அதன் பிறகு அபூபக்கர் (றழி) அவர்களுக்கு வெற்றிச் செய்தி கிடைத்ததும் மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள். இது தொடர்பாக சித்தீக்கிய்யாக் காண்டத்தில் படையெழுச்சிப் படலத்தில் இறுதிச் செய்யுளிலும் தபூக்குக் கொண்ட படலத்திலும் கூறப்பட்டுள்ளது:

*"வெற்றியி னிவர்கள் தம்மை விடுத்தபூ பக்கர் மீட்டு*
*மற்றைநா ளசனா தோன்றல் வல்லுநர் சறுக பீலைக்*
*கொற்றவெண் கொடியுங் கோரக் குழுவோரா யிரமுஞ் சேர்த்துப்*
*பொற்றடப் புயம்பூ ரிப்பத் துணைகொளப் போக்கி னாரால்"*[2]

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : படையெழுச்சிப் படலம் : 65, ப. 45

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : படையெழுச்சிப் படலம் : 107, ப. 60

இஸ்லாமிய வரலாற்று நூல்கள் பலவற்றில் இப்போர்கள் குறித்து கூறப்பட்டுள்ளன. அந்த வகையில் இப்போர்கள் குறித்து நாயகத்தின் கலீபாக்கள் வரலாறு என்ற நூலில் 110 ஆம் பக்கத்திலிருந்து தொடர்ந்து கூறப்பட்டுள்ளது.

**பலஸ்தீன் நோக்கி அனுப்பப்பட்ட படைகள்**

அபூபக்கர் (றழி) அவர்கள் போரினால் கிடைக்கும் இம்மை, மறுமை நன்மைகளை எழுதி பல நாட்டுத்தலைவர்களுக்கும் கடிதம் அனுப்பினார்கள். அதனை ஏற்று மக்காவிலிருந்து இக்ரிமா இப்னு அபூசகல் (றழி) அவர்கள் பதினான்கு தலைவர்களுடன் மதீனாவை வந்தடைந்தார்கள். அதேபோல் மேலும் மக்காவிலிருந்து சகுலு (றழி) அவர்கள் நாற்பது தலைவர்களுடனும் கறுபு (றழி) அவர்கள் ஐந்நூறு குதிரை வீரர்களுடனும் புனித யுத்தத்திற்கு கலந்து கொள்ள மதீனா நகர் நோக்கி புறப்பட்டு வந்தார்கள். மேலும் தாயிபு நகரத்திலிருந்து அசுலு இப்னு மஸ்லமா (றழி) அவர்களின் கூட்டத்தினரான ஹவாஸினும் பனீக்கிலாபும் மதீனாவை வந்தடைந்தார்கள். இதனால் அபூபக்கர் (றழி) அவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்கள். அதன்பின் முஹாஜிரீன்கள், அன்சாரிகள் உட்பட ஏனைய எல்லா ஸஹாபாக்களும் போருக்குப் புறப்பட ஆயத்தமானார்கள். இதன் போது அபூபக்கர் (றழி) அவர்கள் போருக்குச் செல்ல வேண்டிய முறையான உத்தரவுகளை எடுத்துக் கூறினார்கள். மேலும் படையின் சேனாதிபதியாக காலித் (றழி) அவர்களை நியமித்து உகாபு எனும் கொடியை கொடுத்தார்கள். அத்தோடு படைக்கு அமீராக அபூஉபைதா (றழி) அவர்களை நியமித்து போருக்கான பல அறிவுரைகளைக் கூறினார்கள். பல படையினரும் புடைசூழ அபூஉபைதா (றழி) அவர்களை ஷாம் நோக்கி அனுப்பி வைத்தார்கள். நாற்பத்தேழாயிரம் பேர் கொண்ட பெரும் படையுடன் காலித் (றழி) அவர்கள் காதிசிய்யா நோக்கி புறப்பட்டுச் சென்றார்கள்.

இது தொடர்பாக புதூகுஷ்ஷாமில் பலஸ்தீன் கொண்ட படலத்தில் *1 – 17* வரையிலான செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது. அதன் ஆரம்பச் செய்யுள் பின்வருமாறு:

*“கனத்தி னீழல் வருமிறசூல்*
*கருணை மல்கு மக்கநகர்*
*சனத்தார் புறத்தார் கிசாசியமன்*
*சாகில் கிமான்தா யிபுவரிசை*
*யினத்தார் கலறுல் மவுத்தெனுமூ*
*ருற்றார் மற்றா ரெல்லார்க்கும்*
*மனத்திற் களிப்பான் வென்றிமுறை*
*மகிபர் வரைந்து விடுத்தனால்”*[1]

## அம்ர் இப்னு ஆஸ் (றழி) அவர்களின் தலைமையிலான படை

அபூபக்கர் (றழி) அவர்கள் அம்ர் இப்னு ஆஸ் (றழி) அவர்களின் தலைமையில் அயிலிய்யா மற்றும் ஏனைய நகரங்களின் மீது படையெடுத்துச் செல்லுமாறு கட்டளையிட்டார்கள். மேலும் அம்ர் இப்னு ஆஸ் (றழி) அவர்களுடன் ஆரிது இப்னு ஹிஷாம் (றழி), இக்ரிமா இப்னு அபூஜஹ்ல் (றழி), சகுலு இப்னு உமர் (றழி) போன்றோரையும் உடன் செல்லுமாறு பணித்தார்கள். இதில் ஒன்பதாயிரம் படை வீரர்கள் கலந்து கொண்டார்கள். இவ்வாறு ஷாம் நாட்டை நோக்கி படை வந்திருப்பதை மதீனாவில் வணிகத்திற்காக சென்றிருந்த ஷாம் நாட்டவர்கள் ஹிறக்கீலிடம் வந்து கூறினார்கள். அதனைக் கேட்டதும் அரசன் மிக்க கோபம் அடைந்தான். அதன்பின் ஹிறக்கீல் தன் கூட்டத்தினரிடம் செய்தியை அறிவித்தான். மேலும் முன்னைய வேதங்களில் கூறப்பட்டுள்ளவாறு முன்னறிவிப்புச் செய்யப்பட்ட நாள் வந்து விட்டது என்றும் ஹிறக்கீல் கூறினான். மேலும் பல அறிவுரைகளை ஹிறக்கீல் தன் மக்களிடம் எடுத்துக் கூறினான்.

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : பலஸ்தீன் கொண்ட படலம் : 01, ப. 115

பின் ஹிறக்கீல் மதீனாவிற்குச் சென்று வந்த வணிகர்களிடம் அபூபக்கர் (றழி) அவர்களைப் பற்றி விசாரித்தான். அதற்கு அவ்வணிகர்கள், அவர் வள்ளலாகவும் இரக்கத்தன்மை கொண்டவராகவும் காணப்பட்டார்கள். மேலும் பூரண மதியம் போன்ற அவர்களின் முகம் சாந்தமானதாக அமைந்திருந்தது. மேலும் அபூபக்கர் (றழி) அவர்கள் யாவரையும் ஒன்றாக பார்த்து நீதி நெறி கெடாது ஆட்சி புரியும் தன்மைக் கொண்டவராகவும் காணப்பட்டார். அத்தோடு எவ்வித ஆடம்பரமும் இன்றி எளிய வாழ்க்கை வாழக்கூடியவராகவும் இருக்கிறார் என பலவாறாக அபூபக்கர் (றழி) அவர்கள் தொடர்பாகக் கூறினார்கள். அதனைக் கேட்ட ஹிறக்கீல், முன்னைய வேதங்களில் குறிப்பிட்டுள்ளவாறே அவர் காணப்படுகிறார் என தான் அறிந்ததைக் கூறுகிறார். இதனால் ஹிறக்கீல் சமாதானத்தை ஏற்போம் என தன் கூட்டத்தினரிடம் கூற அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

பின் படைகள் போருக்கே தயாராகின. உரோமப்படையில் றயீசு என்பவன் தலைமை தாங்கி படையுடன் அந்தாக்கியாவைத் தாண்டி அஜூனாதீன் எனும் நகரத்தை வந்தடைந்தான். மேலும் றயீஸ் என்பவன் பதினாறாயிரம் குதிரை வீரர்களைக் காவற்படையாக முன்னே அனுப்பிவிட்டு ஏனையோருடன் இவன் படைவீடமைத்துத் தங்கினான்.

அதேவேளை அம்ர் (றழி) அவர்கள் அயிலிய்யா எனும் நகருக்குப் போய் பின்னர் பலஸ்தீன் நகரத்தை அடைந்தார்கள். அப்போது ஒற்றர்களின் தலைவரான அதீ என்பவர் வந்து உரோமப் படையினர் ஓரிலட்சம் பேர் வந்திருப்பதை அம்ர் (றழி) அவர்களிடம் அறிவித்தார்கள். இதனைக் கேட்ட அம்ர் (றழி) அவர்கள் மனம் சோர்வடைந்தவர்களாக, அல்லாஹ்வின் நாட்டமின்றி எதுவும் நடப்பதில்லை என தம் மனதில் நம்பிக்கை கொண்டு, தன் தோழர்களை அழைத்து பின்வருமாறு கூறினார்கள்: அதாவது நபி (ஸல்) அவர்களது கட்டளைகளை ஏற்று பின்பற்றுவதில் நாமே மேலோங்கியோராக இருக்கிறோம். அந்த வகையில் நம்மை எதிர்த்து வந்துள்ள படையானது அதிகரித்தே

காணப்படுகிறது. எனவே நாம் துன்பமடையாமல் எம்மைக் காத்துக் கொள்ள சிறந்த ஆலோசனைகளை எடுத்துக் கூறுங்கள் எனத் தோழர்களிடம் கேட்டார்கள். அதன்பின் முஹாஜிரீன்கள் மற்றும் அன்சாரிகள் உறுதிப்பாட்டுடன் கூறினார்கள். ''காபிர்களின் பெரும் படையானது வலிமையுடன் எதிர்க்க வந்த போதெல்லாம், நாம் எண்ணிக்கையில் சிறு தொகையினராய் இருந்து நபி (ஸல்) அவர்களின் கருணையால் அவர்களோடு போரிட்டு பல பெரிய வெற்றிகளை பெற்றுள்ளோம். அது போல் இப்போதும் செயற்படுவோம். பகைவர்களுக்கு பயப்படாது முன்னேறிச் செல்வோருக்கு இறைவன் எப்போதும் வெற்றியையே அளிப்பான். மேலும் பொறுமையுடன் செயற்படுவோம்'' என்றவாறாக பல கருத்துக்களை தோழர்கள், அபூபக்கர் (றழி) அவர்களிடம் கூறினார்கள். இதனைக் கேட்டு அம்ர் (றழி) அவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்கள். இதன்பின் அப்துல்லாஹ் (றழி) அவர்கள் வீர வார்த்தைகளைக் கொண்டு தோழர்களை உற்சாகமூட்டி போரிட முதலாவதாக படைக்கு முன் சென்றார்கள்.

இவ்வாறு அப்துல்லாஹ் (றழி) அவர்கள் ஆயிரம் போர் வீரர்களோடு செல்லும் வழியில் றபீசு எனும் உரோமப் படைத் தலைவன் அனுப்பிவிட்ட பத்தாயிரம் வீரர்கள் தம்மை எதிர்த்து வருவதைக் கண்டார்கள். அதன்போது அப்துல்லாஹ் (றழி) அவர்கள் தன் தோழர்களிடம், பகைவர்கள் திரண்டிருப்பதைக் கண்டு பயப்படாதீர்கள். உள்ளத்தில் திடத்துடன் பொறுமையை மேற்கொள்ளுங்கள். அல்லாஹ் நிச்சயம் எமக்கு உதவி புரிவான். நாம் இலகுவாக வெற்றியடைவோம் என்று கூறினார்கள். மேலும் அப்துல்லாஹ் (றழி) அவர்கள் ''இன்னும் சுவர்க்கம் என்பது வாட்படைகளின் நிழலின் கீழேயே உள்ளது என்பதை அறிவீர்களாக'' என்று நபிகளார் கூறிய வார்த்தையை மனதிற் கொள்ளுங்கள் என்றும் கூறினார்கள்.

பின் படைவீரர்கள் பகைவர்களுடன் போரிட முன் சென்றார்கள். இதன்போது இக்ரிமா (றழி), சகுலு (றழி), ல.்.லாக்கு (றழி) போன்றோர் வீரத்துடன் போரிட்டார்கள். இவ்வாறு போரிட்டு இறுதியில் முஸ்லிம்கள் வெற்றியை அடைந்தார்கள். இதன்போது நூற்றாறு பேர்

சிறைபிடிக்கப்பட்டார்கள். மேலும் முஸ்லிம்களில் ஆறு பேர் இதன்போது ஷஹீதானார்கள். சிறைபிடிக்கப்பட்டோர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாமையால் மறுபடியும் போருக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு அம்ர் (றழி) அவர்கள் உத்தரவிட்டார்கள். இதன்போது லஃலாக்கு (றழி), கிலாபு (றழி), இக்ரிமா (றழி), ஆரிது (றழி), மகாது (றழி), அபூதர்தா (றழி), அப்துல்லாஹ் (றழி), அசூலு (றழி), காலிது (றழி) என இவ்வாறு பல ஸஹாபாக்கள் தத்தம் படைகளுடன் புறப்பட்டார்கள். அதேவேளை எதிரிப்படைகளும் அச்சமயம் வந்து சேர்ந்தன. அதன்பின் அம்ர் இப்னு ஆஸ் (றழி) அவர்கள் தன் படைக்கு பின்வருமாறு உரையாற்றினார்கள்: “இறைவனால் இடப்பட்ட சோதனைகளை நாம் மனம் இணங்கி ஏற்று பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு கடைப்பிடித்தால் செல்வமும் சிறப்பும் பகைவரை வெல்வதற்கான இறைவனுதவியும் கிடைக்கும் என்று கூறினார்கள். மேலும் வேதவாக்கியங்களை ஓதிக்கொண்டு புறப்படுங்கள் எனக்கூற தோழர்களும் அதற்கிணங்கி செயற்பட்டனர்.

இதனைக் கண்ட உரோமப்படையினர் மிக்க பயம் கொண்டனர். மேலும் காலித் இப்னு ஸஈத் (றழி) அவர்கள் மிக்க வீரத்துடன் போரிட்டு இறுதியில் ஷஹீதானார்கள். அதன்பின்பும் போர் உக்கிரமமாக நடைபெற்றது. இதன்போது மலக்குமார்களின் உதவியும் முஸ்லிம்களுக்கு கிடைத்தது. இறுதியில் போர் முடிவுற்று, உரோமப்படையில் பதினையாயிரம் பேர் இறந்தனர். முஸ்லிம்களில் நூற்றுமுப்பது வீரர்கள் ஷஹீதானார்கள். இறுதியில் இவ்வாறு நடைபெற்ற அஜ்னாதீன் போரில் வெற்றி பெற்று பலஸ்தீன் நகர் வெற்றி கொள்ளப்பட்டது. இது தொடர்பாக புதூகுஷ்ஷாமில் பலஸ்தீன் கொண்ட படலத்தில் *18 – 188* வரையிலான செய்யுள்கள் விவரிக்கின்றன. பின்வரும் செய்யுளிலிருந்து இவ்விடயம் ஆரம்பமாகிறது:

*“உண்மைக் கொடியி னெறிவள்ள*
*லுவப்பி னாசு தருபுதல்வர்*
*வண்மைக் கரத்தி னமுறென்னு*
*மகிபர் விளித்துக் கேதனமொன்*
*றண்மை யினிதி னருளியயி*
*லிய்யா பலஸ்தீ னணிநகர்மேற்*

*றிண்மைப் புயத்தா ரொடுபோதிர்*
*கொற்றஞ் சேர்மின் குழீஇயென்றார்"*[1]

## காலித் இப்னு வலீத் (றழி) அவர்களின் தலைமையிலான படை

அபூபக்கர் (றழி) அவர்கள், அம்ர் (றழி) அவர்கள் அனுப்பிய கடிதத்தை வாசித்து விட்டு தூதுவரான அபூ ஆமிரிடம், அமீருல் அக்பராய் நியமித்து அனுப்பப்பட்ட அபூ உபைதா (றழி) அவர்கள் செய்யும் போர்களைப் பற்றி வினவினார்கள். அதற்கு அபூ ஆமிர் (றழி) அவர்கள், உரோமிகள் நூறாயிரம் பேர் அஜ்னாதீனுக்கு வந்ததையறிந்தும் அபூ உபைதா (றழி) அவர்கள் உதவ வரவில்லை. அஜ்னாதீனை நாம் கைப்பற்றிய பின்னரும் அவர் ஷாம் தேசத்திற்கு வரவில்லை எனக் கூறினார்கள். இதனைக் கேட்ட அபூபக்கர் (றழி) அவர்கள் எளிய குணங்கள் கொண்ட அபூ உபைதா (றழி) அவர்கள் போர்க்குணம் கொண்ட வீரர்களுக்குத் தலைமைத் தாங்க பொருத்தமானவரல்ல என்று கூறினார்கள். மேலும் அபூபக்கர் (றழி) அவர்கள், ஒரு போர்த் தலைவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாகவும் அவையிலே விளக்கினார்கள். எனவே அபூபக்கர் (றழி) அவர்கள் இதற்கு பொருத்தமான தலைவராக காலித் இப்னு வலீதை நியமிப்பதில் தோழர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். அதற்கு தோழர்ப் பெருமக்களும் காலித் இப்னு வலீத் (றழி) அவர்களை தலைவராய் நியமிப்பதற்கு உடன்பட்டார்கள்.

பின் அபூபக்கர் (றழி) அவர்கள், காலித் இப்னு வலீத் (றழி) அவர்களுக்கு ஓர் கடிதம் எழுதினார்கள்: "அபூ உபைதா (றழி) அவர்களோடு ஏனைய எல்லாப் படைத்தலைவர், படையணிகள் யாவற்றுக்கும் நீங்களே தலைமை பூண்டு, பகைவரை வெல்லும் படியான எல்லாத் திறன்களையும் மேற்கொள்ளுங்கள் என்றும், இறைவனின்

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1989)*, புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : பலஸ்தீன் கொண்ட படலம் *: 18, ப. 125*

திருமறையையும் ரஸூலுல்லாஹ்வின் ஹதீஸ்களையும் பின்பற்றி நடப்பீராக. யுத்த நுட்பங்களால் எமது முன்னோர்கள் முயற்சித்து வெற்றி பெற்றது போல் நீங்களும் முயற்சித்து வெற்றி கொள்வீராக'' என எழுதி உமர் இப்னு மகுரசு (றழி) என்பவரிடம் கொடுத்து அனுப்பினார்கள்.

இக்கடிதம் காதிசிய்யா நகரத்தை வெற்றி பெற்ற தினத்தன்று காலித் (றழி) அவர்களிடம் கிடைக்கப்பெற்றது. அபூபக்கர் (றழி) அவர்களது கட்டளையை ஏற்று, காதிசிய்யாவிலிருந்து அபூ உபைதா (றழி) அவர்கள் இருக்கும் இடத்தை அடைவதற்காகச் சென்றார்கள். அவ்வாறு செல்கையில் இடையில் அபூ ஆமிர் (றழி) அவர்களை சிறையிலிருந்து மீட்டுவிட்டு அரிக்கா எனும் ஊரை அடைந்தார்கள். அங்குள்ளவர்கள் காலித் (றழி) அவர்களை ஒழித்துக் கொண்டு போர் செய்ய முன்வரவில்லை. இதனால் முஸ்லிம்கள் அந்நகரத்தைச் சுற்றியுள்ள ஊர்களிலே புகுந்து கொள்ளையிட்டார்கள். இதனைப் பார்த்து ஒரு பாதிரி முன்னறிவிப்புச் செய்யப்பட்ட ஒரு வீரராக காலித் (றழி) அவர்களைப் பற்றி மக்களுக்கு அறிவித்தார். இதனால் உரோமர்கள் போர் செய்யாது சமாதான ஒப்பந்தமொன்றை எழுதிக்கொள்வோம் என்ற நிலைப்பாட்டுக்கு வந்தனர். அவ்வொப்பந்தத்தில் இரண்டு விதிகள் எழுதப்பட்டன. அதில் முதலாவது விதியாக, அந்நகரத்தவர் தமது சொந்த மார்க்கத்திலேயே தொடர்ந்தும் இருக்கலாம். அவ்வாறானவர்கள் ஆண்டுதோறும் திறைப்பணம் செலுத்த வேண்டும் என்பதாகும். அடுத்து, இஸ்லாத்தை ஏற்போர் திறை செலுத்தவேண்டியதில்லை என்பதாகும்.

அதன்பின் காலித் (றழி) அவர்கள் அரிக்கா நகரை விட்டும் சைமனாபுரம் எனும் நகரை நோக்கிச் சென்றார்கள். சைமனாபுரத்து மக்கள் காலித் (றழி) அவர்களின் மிகுந்த புகழை அறிந்தமையால் அரிக்கா நகரத்தவரைப் போன்றே பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து திறைப்பணத்தை செலுத்த முன்வந்தார்கள். இவ்வாறு காலித் (றழி) அவர்கள் திறைபெற்று நகரைக் கைக்கொள்ளும் செயல் எல்லா இடங்களிலும் இடம்பெற்றது.

அதன்பின் காலித் (றழி) அவர்கள் சைமனாப்புரத்திலிருந்து ததம்மர் எனும் நகரத்தை வந்தடைந்தார்கள். அந்நகரத்து அரசனான கறுக்கறு என்பவன் தன் மக்களை அழைத்து, நாம் முஸ்லிம்களுடன் போர் செய்ய முடியாது எனவும், நாம் பயமின்றி வாழ்வதற்கு சமாதானமாவதே சிறந்த வழி எனக்கூற மக்களும் அதனை ஏற்றுக்கொண்டனர். பின் அந்நகரத்தவர்களும் திறைசெலுத்த முன்வந்தனர். பின் காலித் (றழி) அவர்கள் நுகுமான் (றழி) அவர்களை அந்நகரத்துக்கு தலைவராய் நியமித்து விட்டு படைகள் புடைசூழ சவுசான் எனும் நகரை நோக்கிச் சென்றார்கள். பின் அங்கும் சவுசான் நகரத்தவர்கள் திறை செலுத்த முன்வந்தனர். பின் அங்கு மஆத் இப்னு ஜபல் (றழி) அவர்களை அதிபராய் நியமித்தார்கள்.

இவ்வாறாக பல நகரங்களை காலித் (றழி) அவர்கள் வெற்றி கொண்டார்கள். இதனூடாக காலித் (றழி) அவர்களின் புகழ் உலகெங்கும் பரவியது. இவ்வரலாற்று நிகழ்வு புதூகுஷ்ஷாமில் காலித் இப்னு வலீத் தலைமைப் பூண்ட படலம் முழுவதிலும் கூறப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப செய்யுளாவது:

> *"காலமுத லியகருவி பலதேர்ந்து*
> *வீரமுறை கருத வாகை*
> *மாலைபுனை யம்புயத்தி னம்றுதவு……"*[1]

இவ்வாறு அபூபக்கர் (றழி) அவர்கள் மேற்கொண்ட அனைத்து படையெடுப்புக்கள் தொடர்பாக கலீபாக்கள் வரலாறு என்ற நூலில் அபூபக்கர் (றழி) அவர்களது வரலாற்றுப் பகுதியில் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். அத்தோடு பலஸ்தீன் வெற்றி கொள்ளப்பட்ட வரலாற்று றறற. ஐளடயஅளுவழசல. ஊழஅ என்ற இணையத்தள முகவரியினூடான வீடியோக்களில் அறபு மொழியில் காணப்படுகின்றது.

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : காலித் இப்னு வலீத் தலைமை பூண்ட படலம் : 01, ப. 201

## அபூபக்கர் (றழி) அவர்களது குணாம்சங்கள் மற்றும் சிறப்புக்கள்

கலீபா அபூபக்கர் (றழி) அவர்கள் பல்வேறு சிறந்த குணங்களை தன்னகத்தே கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள். அத்தோடு நபி (ஸல்) அவர்களின் உற்ற தோழராய் இருந்து பல சிறப்புக்களை பெற்றுள்ளார்கள். அது தொடர்பாக புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ள விடயங்களாவன :

அபூபக்கர் (றழி) அவர்கள் அறிவு, வீரம், நட்பு மற்றும் அனுபவ முதிர்ச்சி மிக்கவராகவும் காணப்பட்டார்கள். இதனை பின்வரும் செய்யுள் விளக்குகிறது:

*''உட்பொரு ளறிவள ரோங்க லோங்கெழி*
*னட்பினர் வீரமு நாளுந் தேய்விலாக்*
*கட்புல னளவறுங் காட்சிக் காரணப்*
*பெட்பினர் எமரினும் பெருமை மிக்குளார்''*[1]

இதற்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸ் அமைந்துள்ளது:

> ''இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''(இறைவனைத் தவிர வேறு) ஒருவரை நான் உற்ற நண்பராக ஆக்கிக் கொள்ள விரும்பியிருந்தால் அபூபக்கர் (றழி) அவர்களையே ஆக்கிக் கொண்டிருப்பேன். ஆயினும் அவர் (மார்க்கத்தில்) என் சகோதரரும், (இன்ப – துன்பம் யாவற்றிலும்) என் தோழரும் ஆவார்.'' என இப்னு அப்பாஸ் (றழி) அறிவிக்கிறார்கள்.''[2]

அபூபக்கர் (றழி) அவர்கள் ஸவ்ர் குகையில் நபி (ஸல்) அவர்களுடன் இருக்கையில் புரிந்த தியாகச் செயல் புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளது:

''*வேதமா மணிதிகழ் வேந்தர் நந்நபி*

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : அபூபக்கர் அரசுரிமைப் படலம் : 17, ப. 06

[2]அல்ஹதீஸ் : ஸஹீஹ் புஹாரி : 3657

*மேதகு துயிலினான் வெகுண்ட வெங்கடு*
*காதுவெவ் வரவுறாக் கமலத் தாளடைத்*
*தாதரம் புரிமன வூக்கத் தாக்கத்தார்"*[1]

அதாவது, ஹிஜ்ரத்தின் போது நபி (ஸல்) அவர்கள் அபூபக்கர் (றழி) அவர்களின் மடியில் தலை வைத்துத் தூங்கி விட்டார்கள். சிறிது நேரத்தில் அபூபக்கர் (றழி) காலில் அரவமொன்று தீண்டிவிடவே வலியினால் வேதனையடைந்த அவர்கள் நபி (ஸல்) அவர்கள் எழுந்து விடக் கூடாது என்பதற்காக அவர்கள் அசைந்து விடாமல் காலை அப்படியே வைத்திருந்தார்கள். இவ்வாறான தியாகச் செயல்களைப் புரிந்து மேன்மைப் பெற்றவராகவே அபூபக்கர் (றழி) அவர்கள் காணப்பட்டார்கள். இச்சம்பவம் நாயகத்தின் கலீபாக்கள் வரலாறு என்ற நூலில் 35,36 ஆம் பக்கங்களில் கூறப்பட்டுள்ளது.

அபூபக்கர் (றழி) அவர்கள் மேலும் பல நற்பண்புகளைக் கொண்டவராகக் காணப்பட்டார்கள். புலனடக்கம், வீண் பேச்சுக்களைத் தவிர்த்தல், அத்தோடு பயன் கருதாது ஈகை வழங்கக்கூடியவர், அனைவரிடமும் பாரபட்சமின்றி நீதி செலுத்தக்கூடியவர். மேலும் பெருமானாருக்கு சேவை புரிவதில் உற்ற தோழராகவும் இருந்துள்ளார்கள். இப்பண்புகள் தொடர்பில் புதூகுஷ்ஷாமில் அபூபக்கர் அரசுரிமைப் படலத்தில் 19 – 22 வரையான செய்யுள்களில் கூறப்பட்டுள்ளன. அதன் ஆரம்ப செய்யுள் பின்வருமாறு:

*"தேக்குறு நெறிமனந் திகழ மல்கிய*
*நோக்கொடு பலபொறி நூறுந் தன்மையின்*
*காக்குறுந் தொழிலினால் வீண்சொற் காண்கிலா*
*வாக்குறு மேனிலை வாகை பூண்டுளார் "*[2]

மேலும் அபூபக்கர் (றழி) அவர்கள் உறுதியான ஈமான் கொண்டவராகவும் கல்வியிலும்

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : அபூபக்கர் அரசுரிமைப் படலம் : 18, ப. 07

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : அபூபக்கர் அரசுரிமைப் படலம் : 19, ப. 07

தலைமைத்துவத்திலும் உயர்ந்தவர்களாகவும் மேலும் இஸ்லாத்தை முதலில் ஏற்றமையால் சிறப்பும் பெறுகிறார்கள். மேலும் அல்லாஹ்வால் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்ட நபிமார்களுக்கு அடுத்த படியாக மனிதர்களிலே சிறப்புப் பெற்றவர்களாகவும் இவர்கள் திகழ்ந்தார்கள். அத்தோடு நபி (ஸல்) அவர்களுக்கு நெருக்கமான தோழராகவும் இருந்து சிறப்புப் பெற்றுள்ளார்கள். இதனை கீழ்வரும் செய்யுள் தெளிவுபடுத்தியுள்ளது:

*“பல்வகை வியப்புள தலைவர் பற்றுளார்*
*சொல்வகை முறையினர் சூழ்ந்த பேர்க்கெல்லாங்*
*கல்வியிற் றலைமையி லாதி காரண*
*நல்வகை யினுமவர் முன்னர் நாடினே”*[1]

அபூபக்கர் (றழி) அவர்கள் உண்மை, அன்பு போன்ற நற்குணங்களில் மேம்பட்டவர்களாகவும் காணப்பட்டார்கள். இதனை பின்வரும் செய்யுள் உணர்த்துகிறது:

*“நெகிழ்தரு மன்பு கூர்ந்து நிவந்தெழுங் கருணைச் செங்கண்*
*மகிழ்தர வுயர்த்த வுண்மை மன்னவ ரருக ரோடு……”*[2]

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் சென்று வந்த மி∴ராஜ் வரலாற்றினை அபூஜஹல் போன்றோர் உண்மை என ஏற்காது நின்ற போது அதனை உறுதியான ஈமானுடன் உறுதிப்படுத்தியவராக அபூபக்கர் (றழி) அவர்கள் திகழ்ந்தார்கள். அதனால், ‘சித்தீக்’ உண்மையாளர் என்ற பெயருக்குரியவராகிறார்கள். அதனை பின்வரும் செய்யுள் கூறுகிறது:

*“அறிவிற்சி றந்திலங்கு பொருளிற்ப டர்ந்தெழுந்த*
*வருளிற்பி றந்துவந்த நயினார்சென்*
*னெறியிற்க லந்துநின்று புகழ்தர்க்க மன்றுவிண்ட*
*நிலையற்றவன் பொருந்த வழியாக*

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : அபூபக்கர் அரசுரிமைப் படலம் : 23, ப. 09

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : படையெழுச்சிப் படலம் : 61, ப. 43

*வுறுதிக்கி யன்றுநண்பி னுரைசொற்று ளங்கனிந்த*
*வுயர்சித்தி கென்றணிந்த பெயரால் நீள் ……"*[1]

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதை மக்களுக்கு எடுத்துச் சொன்ன போது முதலில் அதனை உண்மைப்படுத்தியவராக அபூபக்கர் (றழி) அவர்களே காணப்பட்டார்கள். இவ்விடயம் கலீபாக்கள் வரலாறு என்ற நூலில் 166 ஆம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு அபூபக்கர் ரழி) அவர்களது நற்குணங்கள் மற்றும் சிறப்புக்களை பல ஆதாரபூர்வமான ஹதீஸ்கள், இஸ்லாமிய வரலாற்று நூல்கள் மற்றும் வீடியோக்களினூடாகவும் கண்டு கொள்ளலாம்.

### 3. உமர் (றழி) அவர்கள் தொடர்பானவை

அபூபக்கர் (றழி) அவர்களது வபாத்துக்குப் பிறகு, இஸ்லாமிய ஆட்சியின் தலைமைப் பொறுப்பை உமர் (றழி) அவர்கள் ஏற்கிறார்கள். அந்த வகையில் உமர் (றழி) அவர்களாலும் ஷாம் நாட்டின் பல பகுதிகள் வெற்றி கொள்ளப்பட்டன. இவ்வாறான அம்சங்கள் பின்வரும் அமைப்பில் விளக்கப்பட்டுள்ளன.

### உமர் (றழி) அவர்கள் ஆட்சி செலுத்தியமை

கலீபா அபூபக்கர் (றழி) அவர்களின் வபாத்திற்கு பின் உமர் (றழி) அவர்கள் கலீபாப் பதவியை ஏற்றமை தொடர்பில் புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளது.

அபூபக்கர் (றழி) அவர்களை இழந்த ஸஹாபாத்தோழர்கள் பெரும் கவலைக்குள்ளானார்கள். பின் மஸ்ஜிதுன் நபவியினுள் பெருமானாரின் கல்லறையை அடுத்து அன்னாரது உடலை நல்லடக்கம் செய்தார்கள். நபி (ஸல்) அவர்களது அரசை தொடர்ந்து நடாத்தக்கூடியவர் யாரென தோழர்கள் ஆலோசித்தனர். பின் ஆலோசனைக்கூட்டத்தில் ஹத்தாப் அவர்களின் மகனான

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கடவுள் வாழ்த்துப் படலம் : 12, ப. 06

உமர் (றழி) அவர்களே கலீபா பதவிக்கு உகந்தவர் என ஏகமனதாக தீர்மானித்தார்கள். அதன்பின் உமர் (றழி) அவர்களிடம் முதலாவதாக உஸ்மான் (றழி), அலி (றழி) ஆகியோர் உறுதிப்பிரமாணம் செய்தனர். அதனைப் பின் தொடர்ந்து அனைத்துத் தோழர்களும் உறுதிப்பிரமாணம் செய்தார்கள். இவ்விடயம் புதூகுஷ்ஷாமில் உமறுகத்தாப் (றழி) அரசியற் படலத்தில் *6 – 33* வரையிலான செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது:

*"நமருயி ரனையநந் நபிகளி னயினா*
*ரமருல கவர்புக ழுணிநெறி முறையே*
*தமரவ ரெவருமெய் தளிர்தர வரசி*
*னுமரெனு நரபதி யுயரிய லறைவாம்"*[1]

இது தொடர்பாக இஸ்லாமிய வரலாற்று நூலான கலீபாக்கள் வரலாறு எனும் நூலில் *222 – 225* வரையிலான பக்கங்களில் கூறப்பட்டுள்ளது.

## உமர் (றழி) அவர்களால் வெற்றி கொள்ளப்பட்ட ஷாம் நாட்டு நகரங்கள்

### அபுல்குதுஸ் நகர் வெற்றி கொள்ளப்பட்டமை

உமர் (றழி) அவர்கள் தமது ஆட்சிப் பொறுப்பை சிறப்பாக மேற்கொண்டு வந்தார்கள். அதன் போதே அபுல்குதுஸ் நகர் கைப்பற்றப்பட்டது. அந்தவகையில் ஜஹ்பர் (றழி) அவர்களின் மகனான அப்துல்லாஹ் (றழி) அவர்கள் தன் தந்தைக்கான பழியைத் தீர்க்கும் முகமாகவே அபுல்குதுஸை கைப்பற்றினார்கள். கலீபா உமர் (றழி) அவர்களும் அதற்குச் சம்மதித்தார்கள். அதன்பின் அப்துல்லாஹ் (றழி) அவர்கள் திமிஸ்கிலுள்ள அபூஉபைதா (றழி) அவர்களை சந்தித்து அவர்களின் படையுடன்

---

[1] ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : உமறுகத்தாப் (ரழி) அரசியற் படலம் : *01, ப. 03*

இணைந்துக் கொண்டார்கள். பின் அபூஉபைதா (றழி) அவர்கள் ஓர் ஆலோசனை சபையைக் கூட்டி எங்கே படையெடுப்பது என தோழர்களிடம் வினவ அதற்குத் தோழர்கள் அபுல்குதுஸ் மீது படையெடுப்போமென விடை பகர்ந்தனர்.

அதன்பின் அபூஉபைதா (றழி) அவர்கள் “அபுல்குதுஸ் நகருக்குப் போய் அங்குள்ள கோட்டையைக் கைக்கொண்டு கைப்பற்றி வருபவர்கள் யார்?” எனக் கேட்க, அப்துல்லாஹ் (றழி) அவர்கள் எழுந்து, “அமீருல் அக்பர் அவர்களே! அக்கோட்டையின் மீது போரிட நான் செல்கிறேன்” என்றார்கள். பின் அபூஉபைதா (றழி) அவர்கள் வலிமைமிக்க ஐந்நூறு வீரர்களைத் தேர்ந்தெடுத்து அப்துல்லாஹ் (றழி) அவர்களை தலைவராக நியமித்து வெற்றியுடன் திரும்புங்கள் எனக் கூறி அனுப்பினார்கள்.

ஹிஜ்ரி பதின்மூன்றாம் ஆண்டு இப்படை அபுல்குதுஸ் நகர் நோக்கிச் சென்றது. செல்லும் வழியிலே ஓர் மதபோதகர் அப்துல்லாஹ் (றழி) யின் படையைக் கண்டு, “நீங்கள் யார்?” எனக் கேட்க அதற்கு தோழர்கள் “நாங்கள் அறபிகள்” என்றார்கள். அதன்பின் அம்மதபோதகர் அப்துல்லாஹ் (றழி) யைப் பார்த்து, இவர் முஹம்மதின் மைந்தரா? இவரது முகத்தில் நுபுவ்வத்தின் ஒளி தெரிகிறதே! எனக் கேட்க தோழர்கள், “இல்லை இவர் முஹம்மத் (ஸல்) அவர்களின் பெரிய தந்தையின் மகன்” எனக் கூறினார். இவ்வாறு அம்மதபோதகருடனான பல உரையாடல்களைத் தொடர்ந்து படையானது அவ்விடத்தை விட்டும் நீங்கியது.

பின் படையினர் ஓர் தங்குமிடத்தை அடைந்தார்கள். அங்கு றூமிகளின் நிலைமையை அறிய ஓர் திம்மி சென்றார். பின் அங்கு மக்கள் தொகை அதிகமாக இருப்பதனை தெரிந்து கொண்ட ஸஹாபாத் தோழர்கள் பின்வாங்கிச் சென்றிட எண்ணினார்கள். பின் அப்துல்லாஹ் (றழி) அவர்கள் துணிச்சலுடன் எம்முடன் போரிட வருபவர்கள் வாருங்கள் என அழைக்க தோழர்கள் அனைவரும் அதனை ஏற்றுக்கொண்டார்கள்.

பின் அப்துல்லாஹ் (றழி) அவர்களின் படையினரும் றூமிகளும் சந்தித்து போர் உக்கிரமாக நடைபெற்றது. அதன் போது அப்துல்லாஹ் (றழி) அவர்கள் பகைவர்களால் தாக்கப்பட்டார்கள். இதனால் அப்துல்லாஹ் இப்னு அனஸ் (றழி) அவர்கள், அபூ உபைதா (றழி) அவர்களிடம் ஓர் உதவிப்படையை அனுப்புமாறு கேட்க, அவர்கள் காலித் (றழி) அவர்களின் தலைமையில் ஓர் படையை உதவிக்காக அனுப்பினார்கள். பிறகு போர்க்களத்திலே அப்துல்லாஹ் (றழி) அவர்கள் துணிவுடன் போரிடுவதைக் கண்டு காலித் (றழி) அவர்கள் மகிழ்ந்து பின் அவர்களும் பகைவர்களுடன் போரிட்டார்கள். அதேபோல் முசையிப் (றழி), அப்துல் கப்பார் (றழி), லிறார் இப்னு அஸ்வர் (றழி) போன்றோர் வீரதீரமாகப் போரிட்டார்கள்.

பின் லிறார் (றழி) அவர்களும் அப்துல்லாஹ் (றழி) அவர்களும் அங்குள்ள கோயிலினுள் புகுந்து கடுமையாக போர்புரிந்து அபுல்குதுஸ் நகரையே கைக்கொண்டார்கள். இறுதியாக தோழர்கள் அனைவரும் திமிஸ்கு நகரை வந்தடைந்தார்கள். இந்நிகழ்வுகள் பாறூக்கிய்யாப் காண்டத்தில் அபுல் குதுசு கொண்ட படலம் முழுவதிலும் கூறப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப செய்யுள் பின்வருமாறு:

*"திசை வளர் புகழின் வள்ளற் றிருநபி முகம்ம தென்ன*
*மிசைவள ராணை மாட்சி வேதத்தின் முறைமை நாட்டி*
*நசைவள ருயிர்களியாவு நண்ணிய லாக்கம் பூட்டி*
*யிசைவளர் நீதிகாட்டி யிறையும றியற்று நாளில்"*[1]

## கன்சரீன் நகர் வெற்றிகொள்ளப்பட்டமை

அபூ உபைதா (றழி) அவர்கள் தோழர்களை நோக்கி "நமது கலீபா அவர்கள் ஹிறக்கீல் மன்னனின் இராசதானியாகிய அந்தாக்கியா மீது படையெடுக்குமாறு அறிவித்திருக்கிறார்கள்." என்று கூறி விட்டு போருக்காக புறப்பட்டார்கள். இடையில் செல்லும் வழியிலே கலீபா உமர் (றழி) அவர்களின் கடிதம் கிடைக்கப் பெற்று, அதில்

---

[1] ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : அபுல்குதுசு கொண்ட படலம் : 01, ப. 50

குறிப்பிட்டுள்ளவாறு கிம்மசை நோக்கிச் சென்றார்கள். அங்கு சென்றடைந்த பின் ஏற்கனவே கிம்மசுக்கு அனுப்பப்பட்ட காலித் (றழி) அவர்களை சந்தித்தார்கள். அவர்களிடம் அபூஉபைதா (றழி) அவர்கள் உமர் (றழி) அவர்களின் கடிதச் செய்தியைக் கூறினார்கள்.

அன்றைய தினம் கிம்மஸ் நகரத் தலைவன் பகீதா என்பவன் இறந்து போனான். அதனால் அந்நகரத்தார் எல்லோரும் ஆலயத்திற்குச் சென்று அங்குள்ள பாதிரியைக் கண்டு "எங்கள் போதகரே! இப்போது அறபிகள் நமது நகரை முற்றுகையிட்டிருக்கிறார்கள். நமது அரசன் இறந்து போயுள்ளான், நாம் என்ன செய்வோம்" என்று கேட்டார்கள். அதற்கு போதகர், மக்களே! நம் அரசன் இறந்துள்ளதால் அறபிகளுடன் இப்போது போர் புரிய முடியாது. ஆகவே நீங்கள் அவர்களிடம் போய் "கலபு, கன்சரீன் எனும் இரு நகரங்களையும் கைப்பற்றிய பின் நாங்கள் எங்கள் நகரைக் கொடுத்து விடுகிறோம் என்று கூறி உடன்படிக்கையொன்று எழுதித் தரும்படி கேளுங்கள்." அதற்கு அவர்கள் இணங்கினால் பின் நாம் நமது சக்கரவர்த்திக்கு அறிவித்து படைப்பலத்தைப் பெற்று ஒப்பந்தத்தை முறித்து போரிடலாம் என்று கூறினான்.

இவ்வாறு கூறச்சொன்னதை றூமிகளுள் ஒருவனான சாதலீக் என்பவன் அபூஉபைதா (றழி) அவர்களிடம் போய்க் கூற அதற்கு அவர்களும் இணங்கி ஓர் ஒப்பந்தத்தையும் எழுதிக் கொடுத்தார்கள்.

பின் காலித் (றழி) அவர்கள் அபூ உபைதா (றழி) அவர்களின் கட்டளைக்கிணங்கி கலபு, முஅர்ராத்து, அவாசிம் போன்ற நகரத்தார் இஸ்லாத்தை ஏற்பதில் எந்நிலையில் உள்ளனர் என்பதை அறிந்து வரச் சென்றார்கள். அத்தோடு காலித் (றழி) அவர்கள் அவ்வூரார்களிடமிருந்து திறைப் பொருட்களையும் பெற்று வந்தார்கள். அதன்பின் அபூஉபைதா (றழி) அவர்களை நோக்கிய வண்ணம் மிசுகப் (றழி) அவர்களைப் பின்தொடர்ந்து பல றூமிகள் அழுது கொண்டு வருவதைக் கண்டு அபூஉபைதா (றழி) அவர்கள் காரணத்தை வினவினார்கள். அதற்கு அவர்கள் "தலைவரே! நீங்கள் எம்மிடமுள்ள பொருட்களைப் பெற வருவீர்கள்

என்பதை நாம் அறிந்திருக்கவில்லை. எனவே எங்களது பொருட்களையும் எங்களையும் இவர்கள் சிறைபிடித்து விட்டார்கள் என்று கூறினார்கள்.'' இதனைக் கேட்ட அபூஉபைதா (றழி) அவர்கள் அவ்வாறாயின் நீங்கள் எங்களுக்கு திறை செலுத்துவீர்களா? எனக் கேட்க, அதற்கு றூமிகளும் உடன்பட்டு பின்பு கொள்ளையிடப்பட்ட பொருட்கள் அனைத்தையும் அவர்களுக்கே கொடுத்தனுப்பினார்கள்.

இந்த விடயங்களைத் தெரிந்து கொண்ட கன்சரீன், காலிரான் எனும் இரு நகரத்தவர்களும் தம்மிடையே யோசித்து ''அறபிகளுடன் இணங்கிப் போவது நன்மையே'' எனத் தீர்மானித்தார்கள். ஆயினும் ஹிறக்கீல் மன்னன் பத்தாயிரம் போர்வீரர்களை அனுப்பி அவ்விரு நகரங்களிலுமுள்ள அறபிகளுடன் போரிடும்படி அனுப்பி வைத்தான். ஆனால் அந்நகரத்தார்கள் அதனை ஏற்காது ஓராண்டுக்கு மாத்திரம் இணக்கம் தெரிவித்து திறை செலுத்துவதாகக் கூறி ஓர் கடிதத்தை அபூஉபைதா (றழி) அவர்களுக்கு அனுப்பினார்கள். இதன் உள்நோக்கத்தை அறிந்து கொண்ட காலித் (றழி) அவர்கள் றூமிகள் ஒற்றுமையை நாடவில்லை என்பதைப் புரிந்து கொண்டார்கள். ஆயினும் அபூஉபைதா (றழி) அவர்கள் அவர்களது ஒப்பந்தத்திற்கு இணக்கம் தெரிவித்தார்கள். மேலும் ஓராண்டுக்கு கன்சரீனின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அறபிகள் எவரும் கலகம் செய்யக்கூடாதெனவும் பணித்தார்கள். அதன்படியே தோழர்களும் செயற்பட்டார்கள். மேலும் கன்சரீன் பகுதி எல்லைகளில் ஹிறக்கீலின் உருவச்சிலைகள் செய்து அவை நடப்பட்டிருந்தன. ஒருநாள் சஹ்ல் இப்னு அம்ர் (றழி) அவர்களால் எதிர்பாராத விதமாக அச்சிலையொன்றின் கண் கழற்றப்பட்டுவிட்டது. இதனால் கோபமுற்ற றூமிகள் உமது தலைவரின் சிலையொன்றை செய்து இதேபோல் கழற்ற வேண்டும் எனக்கூற அதற்கு அபூஉபைதா (றழி) அவர்களும் இணக்கம் தெரிவித்து அவ்வாறே செய்யப்பட்டது.

அடுத்ததாக அபூஉபைதா (றழி) அவர்கள் கன்சரீனுக்கான தவணைக் காலம் முடிவடைவதை எதிர்பார்த்து கொண்டு கிம்மஸில் தங்கியிருந்தார்கள்.

இவ்வாறிருக்க ஹிறக்கீல் மன்னன் கன்சரீன் நகருக்காக பத்தாயிரம் குதிரை வீரர்களை அனுப்பியிருப்பதை அபூஉபைதா (றழி) அவர்கள் அறிந்து கொண்டார்கள். இதனூடாக கன்சரீன் மன்னன் வஞ்சகத்துடனே ஒப்பந்தம் செய்து கொண்டான் என்பதையும் உணர்ந்து கொண்டார்கள். பின் காலித் (றழி) அவர்கள் பத்து வீரர்களை தன்னுடன் அழைத்துக்கொண்டு போரிடுவதற்காக ஹிறக்கீலின் படையைத் தேடிச் சென்றார்கள். அங்கு சென்று கன்சரீனின் அரசனை சிறைபிடித்தார்கள். ஹிறக்கீல் அனுப்பி வைத்த படைக்கு ஒத்தாசையாக இருந்த ஜபலா என்பவன் இதனை அறிந்து கொண்டு காலித் (றழி) அவர்களிடம், நீர் யார்? என வினவ, காலித் (றழி) அவர்கள் ''நான் வலீதின் மகன் காலித்'' என்றார்கள். பின் ஜபலாவுக்கும் காலித் (றழி) அவர்களுக்குமிடையில் நீண்ட உரையாடல் இடம்பெறுகிறது. அதன்பிறகு றூமிகளுக்கும் அறபிகளுக்குமிடையில் நீண்ட போர் இடம்பெற்று, இறுதியில் றூமிகளே தமது கோட்டையை வந்தடையுமாறு கூறி நகரையும் அறபிகளிடம் ஒப்படைத்தார்கள்.

அதன்பின் அபூஉபைதா (றழி) அவர்கள் கன்சரீனில் வெற்றிக் கொடியை நட்டு விட்டு, அங்கிருந்து சென்று காலிரான் பகுதியையும் வெற்றி கொண்டார்கள்.
இந்நிகழ்வுகள் பாறூக்கிய்யாக் காண்டத்தில் கன்சரீன் சமாதானப் படலத்திலும் கன்சரீன் கொண்ட படலத்திலும் கூறப்பட்டுள்ளன. அதன் ஆரம்ப செய்யுள் பின்வருமாறு:

*''கொடுங்கனன் மன்னன் மூதூர் கொளவரு ளுமறு கத்தா*
*பெடுங்கருத் தியற்று மேவ லெடுத்தயா மிடையி னுற்ற*
*நெடுங்கணத் தலபு தன்னை நேடிமுன் கொண்டு பின்னர்*
*கொடுங்கருத் ததனிற் சேறு மென்றனர் தூய வள்ளல்''*[1]

[1]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கன்சரீன் சமாதானப் படலம் : 01, ப. 125

## பகுலபு நகர் வெற்றி கொள்ளப்பட்டமை

அபூஉபைதா (றழி) அவர்கள் தோழர்கள் சிலரை அழைத்து ஓர் ஆலோசனையை நடாத்தினார்கள். அதிலே எங்கு படையெடுப்பது என்பது தொடர்பில் ஆலோசித்து இறுதியில் பகுலபு நகர் மீது படையெடுக்க முடிவு செய்தார்கள்.

முஸ்லிம்கள் பகுலபு நகர் மீது படையெடுத்து செல்கையில், ஹிறக்கீல் மன்னனால் பகுலபு நகரத்தவருக்காக அனுப்பிய நூறு ஒட்டகைச் சுமை உணவுப்பொருட்களை கைப்பற்றிக் கொண்டார்கள். இதனை அறிந்து கொண்ட பகுலபின் மன்னன் கறுபிசு கோபம் கொண்டு தனது ஒன்பதினாயிரம் வீரர்களைக் கொண்டு முஸ்லிம்களுடன் போரிட ஆயத்தமானான். அதையறிந்த ஒரு தலைவன் "அறபிகள் திமிஸ்கு, அசுனாதீன், பலஸ்தீன், கன்சரீன் போன்ற நகரத்தாருடன் போரிட்டு வெற்றி கண்டுள்ளார்கள். எனவே நாமும் அவர்களுடன் இணங்கிப் போவது நல்லது என்றார்." அதற்கு கறுபிசு மன்னன் அதனை ஏற்காது அபூஉபைதா (றழி) அவர்கள் இருக்கும் இடத்துக்கு எதிராக பாளையமடித்து இருந்தான். சில தலைவர்கள் கறுபிசுவின் சொல்லைக் கேட்காமல் திரும்பிப்போய் விட்டார்கள். இறுதியில் கறுபிசுவும் மற்றையோரும் முஸ்லிம்களுடன் போரிட்டார்கள்.

அதன்பின் அபூஉபைதா (றழி) அவர்கள் கறுபிசு மன்னனுக்கு இணக்கம் தெரிவிக்குமாறு ஓர் கடிதத்தை எழுதி அனுப்பினார்கள். அதற்கு எவ்வித பதிலையும் அளிக்காது போரிடவே மன்னன் எண்ணம் கொண்டான். மீண்டும் கடுமையாக போர் நடந்தேறியது. இதில் அதிகமான றூமிகள் கொல்லப்பட்டனர். அதன் பின்பே கறுபிசு மன்னன் முஸ்லிம்களுடன் இணங்கிச் செல்ல நினைத்தான். பின் அபூஉபைதா (றழி) அவர்களிடம் சென்று தாம் திறை செலுத்துவதாகக்கூறி ஒற்றுமையானான். இவ்வாறு பகுலபு நகரும் முஸ்லிம்கள் கைவசமானது.

இது தொடர்பாக பகுலபு கொள் படலத்தில் கூறப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப செய்யுள் பின்வருமாறு:

*“இருவகையின் வென்றிபுனைந் தெப்பொருளுங்*
*கைக்கொண்டங் கிருக்குமுண்மை……”[1]*

## கிம்மசு நகர் நகர் வெற்றிகொள்ளப்பட்டமை

அபூஉபைதா (றழி) அவர்கள் மசுறூக்கின் மகன் மைசறா (றழி) யை அழைத்து அவரின் கையிலே ஓர் கொடியைக் கொடுத்து ஐயாயிரம் வீரர்களையும் அத்தோடு மகுதீர்கரீபுடைய மகன் அம்ர் (றழி) அவர்களை அழைத்து அவரின் கையிலோர்க் கொடியைக் கொடுத்து ஐயாயிரம் வீரர்களைச் சேர்த்து “கிம்மசுக்குப் போரிடச் செல்லுங்கள்” எனப் பணித்தார்கள். பின் படையினரனைவரும் கிம்மசை அடைந்தார்கள். அங்கு காலித் (றழி) அவர்களின் படையினரைக் கண்டு அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள்.

அதன் பின் அபூஉபைதா (றழி) அவர்கள் கிம்மசின் அரசனுக்கு ஓர் கடிதம் எழுதி அதில் அவர்கள், ஏனைய நகரத்தவர்கள் கீழ்ப்படிந்ததைப் போன்று நீங்களும் கீழ்ப்படிந்து விடுங்கள் என எழுதப்பட்டிருந்தது. அதனைக் கண்ட அரசன் “நாம் போருக்கே தயாராயுள்ளோம்” என்றவாறு அமீர் அவர்களுக்கு எழுதி அனுப்பினான். அதைக் கண்ட அபூஉபைதா (றழி) அவர்கள் கோபமுற்றவர்களாக தமது வீரர்களை நான்கு பிரிவுகளாக்கி ஒவ்வொரு பிரிவிற்கும் தலைவர்களை நியமித்து அனுப்பினார்கள்.

பின் அறபிகளுக்கும் றூமிகளுக்குமிடையில் பெரும்போர் நிகழ்ந்தது. அதன்பின் சூரியன் அஸ்தமித்ததும் போர் நிறுத்தப்பட்டது. பின் பொழுது புலர்ந்ததும் காலித் (றழி) அவர்களின் ஓர் தந்திரத்தினூடாக எதிரிகளைத் தாக்கினார்கள். அதன்பின் இரவானதும் கிம்மசின் மன்னன்

---

[1]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : பகுலபு கொண்ட படலம் : 01, ப. 248

அபூஉபைதா (றழி) அவர்களுக்கு இந்நகரை விட்டு நீங்கள் செல்லாதிருந்தால் நாளை நான் படைகளைத் திரட்டிக் கொண்டு போருக்கு ஆயத்தமாகி வருவேன் என்று கடிதம் ஒன்றெழுதி அனுப்பினான். இதனைப் பெற்ற அபூஉபைதா (றழி) அவர்கள் இச்செய்தியைத் தோழர்களுக்கு அறிவித்தார்கள்.

அப்போது அதா இப்னு உமர் (றழி) அவர்கள் தமது உபாயத்தைக் கூறினார்கள். அதாவது, ஐந்து நாட்களுக்குப் போதுமான உணவுகளை எமக்குத் தந்தால் நாம் இந்நகரை விட்டு விட்டு வேறு நகர்களைக் கைப்பற்றச் செல்வோம் என்றவாறாக அவ்வுபாயம் அமைந்திருந்தது. அச்செய்தி கிம்மசு மன்னனிடம் அறிவிக்கப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட கிம்மசின் அரசன் அவ்வாறே முஸ்லிம்களது கோரிக்கையை நிறைவேற்றினான். பின் முஸ்லிம்கள் அவற்றைப் பெற்றுக் கொண்டு றசுத்தன் என்ற நகரை நோக்கிச் சென்றார்கள். அங்கு சென்று றசுத்தன், கிமாத்து, சீறாஸ் போன்ற நகரங்களையும் முஸ்லிம்கள் கைப்பற்றினர். அதன்பின் கிம்மசை நோக்கி முஸ்லிம்கள் படையெடுத்துச் சென்றனர். இதனை அறிந்த கறுபிசு மன்னன் நீங்கள் முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் நிலையை வினவ, அதற்கு அபூஉபைதா (றழி) அவர்கள் தாம் முன்பு செய்து கொண்ட ஒப்பந்தம் தொடர்பாக தெளிவாக எடுத்துக்கூறி மற்றைய நகரத்தாரைப் போன்று நீங்களும் இணக்கத்திற்கு வாருங்கள் எனப் பணித்தார்கள். இதனை ஏற்காத கறுபிசு மன்னன் போருக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டான்.

பின் முஸ்லிம்களுக்கும் உரோமர்களுக்குமிடையில் கடும்போர் நிகழ்ந்தது. இப்போரில் இக்ரிமா (றழி) அவர்கள் ‘ஹீதானார்கள். போரின் இறுதியில் சகீது (றழி) அவர்கள் கிம்மசின் மன்னனான கறுபிசுவை வெட்டிக் கொன்றார்கள். அதன்பின் றூமிகள் சிலர் அபூஉபைதா (றழி) அவர்களிடம் வந்து இஸ்லாத்தை ஏற்றனர். இன்னும் சிலர் திறை கொடுக்க சம்மதித்தனர். இப்போரில் முஸ்லிம்கள் இருநூற்று முப்பத்தைந்து பேர் ஷஹீதானார்கள். அவர்களை ஏனைய தோழர்கள் தொழுவித்து நல்லடக்கம் செய்தார்கள். இவ்வாறு கிம்மசு நகரும் முஸ்லிம்கள் கைவசமானது.

இது தொடர்பாக கிம்மசு அரண் முற்றிய படலத்திலிருந்து கிம்மசு கொண்ட படலம் வரையிலான பகுதிகளில் கூறப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப செய்யுள் பின்வருமாறு:

*"சீரோங்கு நகர்பகுல பக்கான வை வேற்றிறல் றாபிகைப்*
*பேரோங்கு மரசாக்கு மதியூக முறைபோற்றிப் பிதிர்க்கீர்த்தியா……"*[1]

## எறுமூக் போரில் வெற்றி கொள்ளப்பட்ட நகரங்கள்

ஸஹாபாத்தோழர்கள் புடைசூழ தளபதி அபூஉபைதா (றழி) அவர்கள் கிம்மசில் ஆட்சி நடாத்தி வந்தார்கள். அப்போது சில ஒற்றர்கள் அமீரிடம் வந்து ஐந்து அரசர்களும் ஐந்திலட்சத்தறுபதினாயிரம் வீரர்களும் யுத்தத்துக்கு ஆயத்தமாக வருகிறார்கள் என்ற செய்தியைக் கூறினார்கள். அதன்பின் அபூஉபைதா (றழி) அவர்கள் தோழர்களை ஒன்றுகூட்டி ஆலோசனை செய்தார்கள். அதில் காலித் (றழி) அவர்களின் யோசனைப்படி தோழர்கள் அனைவரும் செயற்பட்டனர். அதன்படி முஸ்லிம்களின் படையானது எறுமூக்கைச் சென்றடைந்தது.

முஸ்லிம்கள் படையுடன் எறுமூக் வந்திருக்கும் செய்தியை அறிந்த கைசாரியாவில் ஆட்சிபுரியும் கிறக்கீலின் மகன் கிஸ்தந்தீன் கிறக்கீலின் தளபதி மாகானுக்கு அறிவித்தான். அதன்பின் மாகான் கிம்மசுக்கு செல்லாது எறுமூக்கையடைந்து முஸ்லிம்களின் பாசறைக்கு சிறிது தூரத்தில் வந்திறங்கினான். றூமிகளின் படை மிகுதியைக் கண்டு முஸ்லிம்கள் அல்லாஹ்விடம் உதவியை வேண்டினார்கள்.

அதன்பிறகு மாகான், ஹிறக்கீல் மன்னனுக்கு ஓர் கடிதம் எழுதினான். அதாவது "அறபிகள் எறுமூக் வந்திருப்பதையும் அவர்களுடன் இணங்கிக் கொள்வதா? அல்லது போராடுவதா?" எனக் கேட்டு அக்கடிதம் எழுதப்பட்டிருந்தது. அதற்கு ஹிறக்கீல் மன்னன்,

---

[1] ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கிம்மசு அரண் முற்றிய படலம் : 01, ப. 317

“அறபிகளுடன் ஒற்றுமையாவதென்றால் அவர்களின் கலீபா உமருக்கு வருடமொன்றுக்கு இவ்வளவு திறை கொடுக்கிறோம் என்றும் மற்றைய தலைவர்களுக்கு இவ்வளவு கொடுக்கிறோமென்றும் பேசுங்கள் என்றான். அதற்கு அவர்கள் சம்மதித்தால் அவ்வாறே செய்யுங்கள். இல்லையென்றால் போரிடுங்கள்” என்றவாராக பதில் எழுதியனுப்பினான். இவ்வொப்பந்தத்திற்கு அபூஉபைதா (றழி) அவர்கள் இணங்க மறுத்தார்கள். அதன்பிறகு மாகான் ஜபலாவை முஸ்லிம்களிடம் அனுப்பி அச்சமூட்டி விட்டு வருமாறு அனுப்ப, அங்கு ஜபலாவுக்கும் உப்பாத் (றழி) அவர்களுக்குமிடையில் நீண்ட உரையாடல் நிகழ்ந்தது. இறுதியில் எம்முடிவும் இன்றி ஜபலா திரும்பிச் சென்றார். அதன்பின் காலித் (றழி) அவர்களின் ஆலோசனையைப் பின்பற்றி முஸ்லிம்களில் அறுபது பேரைத் தேர்ந்தெடுத்து றூமிகள் அறுபதினாயிரம் பேருடன் போரிட ஆயத்தமானார்கள்.

பின் பொழுதுபுலர்ந்ததும் காலித் (றழி) அவர்கள் போருக்காக தனது படையினரைத் தயார்படுத்தினார்கள். பின் படையானது புறப்பட்டுச் சென்றது. அங்கு ஜபலாவுக்கும் காலித் (றழி) அவர்களுக்குமிடையில் ஓர் உரையாடல் இடம்பெற்றது. அதன்பின் காலித் (றழி) அவர்களின் படையினர் வீரதீரமாகப் போரிட்டார்கள். இறுதியில் இப்போரில் முஸ்லிம்கள் பதின்மர் ஷஹீதானார்கள். றூமிகள் ஐயாயிரம் பேர் கொல்லப்பட்டார்கள். முஸ்லிம்களில் ஐவர் சிறைபிடிக்கப்பட்டார்கள்.

அதன்பின் அபூஉபைதா (றழி) அவர்கள் கலீபா உமர் (றழி) அவர்களிடம் தமக்கு உதவிப்படையை அனுப்புமாறு ஓர் கடிதத்தை எழுதி அனுப்பினார்கள். பின் காலித் (றழி) அவர்கள் ஜபலாவால் சிறைபிடிக்கப்பட்ட ஐவரை மீட்பதற்காக நூறு படை வீரர்களுடன் மாகானின் இடத்திற்குச் சென்றார்கள். அங்கு பல பேச்சுவார்த்தைகளின் பிற்பாடு காலித் (றழி) அவர்கள் ஐவரையும் மீட்டுக்கொண்டு வந்தார்கள்.

பின் அடுத்த நாள் தோழர்கள் போருக்காக தயாரானார்கள். அந்த வகையில் காலித் (றழி) அவர்கள், மஆத் இப்னு ஜபல் (றழி) அவர்களை வலப்பக்கத் தலைவராகவும் கனானத் இப்னு அஸீம் (றழி) அவர்களை இடப்பக்கத்தலைவராகவும் நியமித்து விட்டு தாங்கள் நடுவிலே நின்றார்கள். மேலும் பல அணிகளாகப் பிரித்து அவை ஒவ்வொன்றுக்கும் தலைவர்களையும் நியமித்தார்கள். இவ்வாறு முஸ்லிம்கள் அணிவகுத்திருப்பதை அறிந்த மாகான் தானும் போருக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டான். பின்பு ஸஹாபாத் தோழர்களுக்கும் உரோமர்களுக்குமிடையில் கடுமையாக போர் நிகழ்ந்தது. இறுதியாக போர் நிறைவுக்கு வந்து அப்போரில் உரோமர்கள் பலர் கொல்லப்பட்டனர். ஸஹாபாக்கள் பதின்மர் ஷஹீதானார்கள்.

இதன்பின் மாகான் முஸ்லிம்களின் வெற்றிகளை எண்ணி பயந்து ஹிறக்கீல் மன்னனுக்கு கடிதம் அனுப்பினான். ஹிறக்கீலிடமிருந்து பதில் வரும்வரை மாகான் போரிட தயாராகாமல் காத்திருந்தான். அதனால் ஏழு நாட்களாக போர் நடைபெறாமலிருந்தது. இச்சந்தர்ப்பத்தில் மாகான் அறபிகள் ஆயுதம் ஏந்தாது பராமுகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அவர்கள் மீது அடர்ந்து போரிடுவோம் என உரோமர்களுக்கு ஆலோசனைக் கூறினான். அதன் பிறகு முஸ்லிம்கள் தொழுகையை முடித்து விட்டு போரிடச் சென்றார்கள். இப்போரில் பத்ர் களத்தில் போன்று மலக்குமார்கள் முஸ்லிம்படையினருக்கு போரிட உதவினார்கள். இப்போரிலும் முஸ்லிம்களும் உரோமர்களும் கடுமையாகப் போரிட்டு இறுதியில் முஸ்லிம்களே வெற்றி கொண்டார்கள்.

அடுத்த நாளும் முஸ்லிம்கள் போருக்கு ஆயத்தமானார்கள். இதையறிந்த மாகானும் தன் படைகளைப் போருக்கு தயார் செய்து ஓரிலட்சம் வீரர்களை அம்பெய்யும்படி நிறுத்திவிட்டு மற்றையோரை அணிசெய்தான். முஸ்லிம்களும் தமது அணிகளைச் சீர் செய்து கொண்டார்கள். இதில் சறுக்கபீல் (றழி) அவர்கள் தோழர்களுக்கு ஓர் உபதேசத்தையும் நிகழ்த்தினார்கள். இப்போரிலே லிறார் இப்னு அஸ்வர் (றழி), சுபைர் (றழி)

மற்றும் சறுக்கபீல் (றழி) ஆகியோர் கடுமையாகப் போராடினார்கள். இப்போரில் எதிரிகள் நாற்பதினாயிரம் பேர் இறந்தனர். முஸ்லிம்களில் சிலரே ஷஹீதானார்கள். அவர்கனெல்லாம் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அதன்பின் மாகானுடனான போரும் நடைபெற்றது. இதில் மாகான் இறந்து போனான். இவ்வாறு எறுமூக்கில் பல போர்கள் நடைபெற்றது.

இப்போர் நிகழ்வுகள் பாறூக்கிய்யாப் காண்டத்தில் எறுமூக்கிற் பாசறை வகுத்த படலத்திலிருந்து மாகான் வதையுண்ட படலம் வரையில் கூறப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப வரிகள் பின்வருமாறு:

*“தவத்தி னின்றமெய் முகம்மதி னருள்வழி தாங்கி*
*யெவற்றி னும்பெரும் புகழணி மாதவர்க் கிறைவர்……”*[1]

## பைத்துல் முகத்தஸ் வெற்றி கொள்ளப்பட்டமையும் ஏனைய சில நகரங்கள் முஸ்லிம்கள் கைவசமானமையும்

முஸ்லிம்கள் எறுமூக்கில் போர்களை முடித்து விட்டு அடுத்ததாக, கலீபா உமர் (றழி) அவர்களின் கட்டளைக்கிணங்க பைத்துல் முகத்தஸைக் கைப்பற்ற ஆயத்தமானார்கள். இதற்காக அபூ உபைதா (றழி) அவர்கள் ஆறு நாட்களாக ஆறு தலைவர்களின் தலைமையிலான பெரும் படையினரை அனுப்பி வைத்தார்கள். முதலாவது நாளில் யஸீத் இப்னு அபூசுப்யான் (றழி) அவர்களின் தலைமையில் ஐயாயிரம் குதிரை வீரர்களை அனுப்பினார்கள். அடுத்த நாள் சறுக்கபீல் இப்னு ஹஸனா (றழி) அவர்களின் தலைமையிலும், மூன்றாம் நாள் ஹாஷிம் இப்னு மிர்க்கல் (றழி) அவர்களின் தலைமையிலும், நான்காம் நாள் முஸையப் இப்னு தகிய்யதுல் பஸரி (றழி) அவர்களின் தலைமையிலும் ஐந்தாம் நாள் கைஸ் இப்னு

[1]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : எறுமூக்கிற் பாசறை வகுத்த படலம் : 01, ப. 03

பைறத்துல் முறாதி (றழி) அவர்களின் தலைமையிலும் ஆறாம் நாள் உர்வத் இப்னு முகல்லில் (றழி) அவர்களின் தலைமையிலும் படைகளை அனுப்பினார்கள். இவ்வாறு ஆறு தலைவர்களும் முப்பதினாயிரம் வீரர்களும் போரிடச் சென்று வெவ்வேறு இடங்களில் தங்கினார்கள்.

அதன்பின் யஸீத் (றழி) அவர்கள் ஒரு தூதரை அழைத்து பைத்துல் முகத்தஸில் உள்ளவர்களுக்கு இஸ்லாத்தை ஏற்குமாறும் இல்லையெனில் திறை செலுத்துமாறும் ஏவி அனுப்பினார்கள். அதனை அவர்கள் ஏற்காமையால் தோழர்கள் அனைவரும் போருக்கே தயாரானார்கள்.

பின் அடுத்த நாள் கடுமையாக போர் நடைபெற்றது. இறுதியில் இராப்பொழுதை அடைந்ததும் போரை நிறுத்திவிட்டு அனைவரும் தமது இருப்பிடம் அடைந்தனர். அதன்பின் எதிரிப் படையினரின் தலைவன், நகராதிபன் நபி (ஸல்) அவர்களின் வருகை தொடர்பாகவும் அவர்களின் தோழரான உமர் (றழி) அவர்கள் தொடர்பாகவும் அறிந்து வைத்திருந்தார். அதனால் முஸ்லிம்களின் கலீபாவைக் கண்டு, அவரிடத்தில் தான் அறிந்த அடையாளங்கள் இருப்பின் பைத்துல் முகத்தஸை விட்டுக் கொடுப்பதாகக் கூறினார். இவ்விடயத்தை அபூ உபைதா (றழி) அவர்களிடம் ஒரு தூதுவன் போய்ச் சொன்னான். பின் அபூ உபைதா (றழி) அவர்கள் உமர் (றழி) அவர்களுக்கு விடயத்தை அறிவித்து உடனே அங்கிருந்து புறப்பட்டு பைத்துல் முகத்தஸிற்கு வருமாறு கடிதம் அனுப்பினார்கள். இதனை அறிந்த உமர் (றழி) அவர்கள் பைத்துல் முகத்தஸ் நோக்கி பயணமானார்கள். அங்கு உமர் (றழி) அவர்களைக் கண்ட உரோமர்களின் அரசன் இவரே முஹம்மதின் தோழர்களில் அவர்களின் ஸ்தானத்தில் இருந்து ஆட்சி புரிபவர். சந்தேகமின்றி இவரையே பின்பற்றுங்கள் என்றும் மேலும் நகரை இவர்களிடம் ஒப்படைத்து விட்டு அவரின் சொற்படி நடவுங்கள் என்றும் கூறினார்கள். இவ்வாறே பைத்துல் முகத்தஸ் முஸ்லிம்கள் வசமானது. அதன் பின் கலபு, அகுசாசு, அந்தாக்கிய்யா போன்ற சிற்சில நகர்களும் முஸ்லிம்கள் கைவசமானது.

இவ்வாறு பைத்துல் முகத்தஸ் வெற்றி கொள்ளப்பட்ட வரலாறு பாறூக்கிய்யாக் காண்டத்தில் ஆவணம் விடுத்த படலத்திலிருந்து உமறுகத்தாப் மதீனம் புக்க படலம் வரையில் கூறப்பட்டுள்ளது. ஏனைய கலபு, அகுசாசு, அந்தாக்கிய்யா நகரங்கள் வெற்றி கொள்ளப்பட்டமை தொடர்பில் கலபு அரண் முற்றிய படலத்திலிருந்து புதூகுஷ்ஷாமின் இறுதிப் படலம் வரை கூறப்பட்டுள்ளது. பின்வரும் செய்யுளிலிருந்து பைத்துல் முகத்தஸ் வெற்றி கொள்ளப்பட்ட வரலாறு ஆரம்பிக்கிறது:

*"தண்ணிழ லறாத பூங்காத் தடந்தொறு முரத்த மேதிக்*
*கண்ணிழி மடியின் றீம்பா கூறிய கடிகொள் பண்ணை......"*[1]

இவ்வாறு பல வெற்றிகள் உமர் (றழி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் கிடைக்கப்பெற்றது. இவ்வாறு உமர் (றழி) அவர்களால் வெற்றி கொள்ளப்பட்ட ஷாம் நாட்டின் பகுதிகள் தொடர்பில் இஸ்லாமிய அறபு வீடியோக்களில் காணலாம். இதனை www. Islam story. com என்ற இணையத்தள முகவரியினூடாகக் காண முடியும்.

**உமர் (றழி) அவர்களது குணாம்சங்கள்**

இஸ்லாமிய ஆட்சியின் இரண்டாவது ஆட்சியாளரான உமர் (றழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களது உற்ற தோழர்களுள் ஒருவராகக் காணப்பட்டார்கள். அந்த வகையில் உமர் (றழி) அவர்களது குணங்கள் தொடர்பில் புதூகுஷ்ஷாமில் அதிகமாகவே இடம்பெற்றுள்ளன. அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்:

உமர் (றழி) அவர்கள் கலீபாவானதும் சூழவிருந்த தோழர்கள், உமர் (றழி) அவர்களை குற்றமற்றவர், உறுதி படைத்தவர், நீதிமான் எனப் பலவாறாகப் புகழ்ந்தார்கள். இதனை பின்வரும் செய்யுளினூடாகக் காணலாம் :

*"......போதர வொருமுறை புனைகொள வனை தர*

---

[1]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : ஆவணம் விடுத்த படலம் : 01, ப. 12

*நீதம னுமறெனு நிருமலர் நிலையினர்''*[1]

மேலும் கருணையுள்ளம் கொண்ட உமர் (றழி) அவர்களே ஆட்சிப் பொறுப்புக்கு ஏற்றவரென பெரியோர்கள் கூறினர். கீழ்வரும் செய்யுள் இதனை விளக்கியுள்ளது:

*'' ……கைமுறை பழகிய கருணையி னுமறை*
*யுய்முறை யுரிமையி னுயர்பதி யென்றார்''*[2]

மேலும் உமர் (றழி) அவர்கள் சுற்றத்தார், அனைவரையும் வரவேற்று உபசரிப்பவர்களாகவும் வலியவரையும் எளியவரையும் இஸ்லாமிய ஒழுங்கு முறையில் ஆதரிப்பவராகவும் காணப்பட்டார்கள். இதனை பின்வரும் செய்யுளினூடாகக் காணலாம் :

*''முதிர்தரு வயசினர் முறைநெறி யுணர்பவர்*
*பிதிர்தவ நனியினர் பெருமைய நவர்களை*
*யெதிர்கொளு மருமையர் வலியரை யெளியரை*
*யதிர்சற கனதிய லமைவர வருள்பவர்''*[3]

உமர் (றழி) அவர்கள் கொடுமை புரிவோரிடமிருந்து மக்களைக் காப்பாற்றி உதவி புரிந்து அல்லாஹ் இட்ட கட்டளையை அனுசரிப்பவராகவும் அல்லாஹ்வின் கோபம் தம்மில் சார்ந்து விடுமே எனப் பயப்படுபவராகவும் காணப்பட்டார்கள். பின்வரும் செய்யுள் இதனை தெளிவுபடுத்தியுள்ளது:

*''கொடியவ ரெடுபொருள் கொடுமைய தறவவை*
*யுடையவ ரிடமில துதவிட விய நெறி*
*நெடியவ னுரைவழி நிறுவுவ றவன்முனி*
*வடர்தரல் முறையொடு மகமிகு பயமுளர்''*[4]

---

[1]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : உமறுகத்தாப் அரசியற் படலம்: 17, ப. 11

[2]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : உமறுகத்தாப் அரசியற் படலம்: 06,ப. 05

[3]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : உமறுகத்தாப் அரசியற் படலம்: 28, ப. 16

[4]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : உமறுகத்தாப் அரசியற் படலம்:29, ப. 16

மேலும் உமர் (றழி) அவர்கள், அல்லாஹ்வின் விதியின் நிலையை முயற்சியின் முடிவில் ஒப்புக்கொள்பவராகவும் பிறரின் வசைமொழிகளைப் பொருட்படுத்தாதவராகவும் வறுமை நிலையிலுள்ளோர்க்கு உதவி செய்து அதிக நன்மைகளைப் பெற்றுக் கொள்பவராகவும் இருந்துள்ளார்கள். பின்வரும் செய்யுள் இதனை விளக்கியுள்ளது:

*"உடையவன் விதியின் முயல்தலி னொருவிய*
*கடையினர் வசைமொழி கருதர ரணுவினு*
*மடையினர் மிடியினர் விழைதர வுறவுசெய்*
*நடையினர் கதிபல னடமிடு மவையினர்"*[1]

மேலும் உமர் (றழி) அவர்கள், பல நாடுகளை வெற்றிக் கொள்ளக்கூடியவராகவும் பரந்த திறமையும் அறிவாற்றலும் மிக்கவராகவும் காணப்பட்டார்கள். அத்தோடு வெற்றியை அளிக்கக்கூடிய படையையும் கொண்டிருந்தார்கள். மிக்க பொறுமையாளராகவும் உறுதிமிக்க தைரியசாலியாகவும் ஒழுக்கமிக்கவராகவும் காணப்பட்டார்கள். கீழ்வரும் செய்யுளில் இதனைக் காணலாம் :

*"விறலணி யயிலினர் விரிவுள மதியினர்*
*திறலணி சவுரியர் செயமணி படையினர்*
*உறலணி பொறுமைய ருறுதியி னொருநிலை*
*பெறலணி தயிரியர் நெறிநிலை பெருமையர்"*[2]

மேலும் உமர் (றழி) அவர்கள் பொறுமையும் கருணையும் உடையவர்கள், மிகுந்த புகழும் தவமும் அருளும் தெளிவும் மிக்க வீரமும் உண்மையான மனவுறுதியும் தயவும் தருமத்தின் வழியில் ஒழுகக்கூடியவராகவும் அறிவும் ஆகிய இவற்றை மிகுதியாகப் பெற்றிருந்தார்கள் என பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

---

[1]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : உமறுகத்தாப் அரசியற் படலம்: 30, ப. 17
[2] ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : உமறுகத்தாப் அரசியற் படலம்: 31, ப. 17

*"பொறைகரு ணையர்மிகு புகழ்தவ மருடெருள்
நிறைசவு ரியம்வலி நிசமன நிலைதய
வறமுறை யொழுகுத லறிவதி நயமுக
முறைதரு மறையென வுருவெழி லுடையவர்"*[1]

உமர் (றழி) அவர்கள் அல்குர்ஆனில் தெளிவான அறிவைப் பெற்றவராகவும் உலகப் பொருட்களின் மீதான ஆசையை வெறுப்பவராகவும் நல்ல விடயங்கள் செய்வதில் மறதியற்றவராகவும் அனைவரையும் சமமாக மதித்து நீதி செலுத்துபவராகவும் இருந்தார்கள். என பின்வரும் செய்யுள் விளக்கியுள்ளது:

*"வேதியர் பலபொருள் பெறுமன வொருமையர்
வீதியி னிறைகுடம் விளியொரு கொடு செலு
மியாதினு மயர்கில ரெவைகளு முறவுறு
நீதிய ருமறிய னிகழ்தர வரியவர்"*[2]

உமர் (றழி) அவர்களின் வீரமும் புதூகுஷ்ஷாமில் சிறப்பிக்கப்பட்டுள்ளது. அதாவது நெருங்கித் தாக்கக்கூடிய சிங்கம் போன்ற வீரமிக்க உமர் (றழி) அவர்கள் மக்களுக்குரிய உரிமைகளைப் பெற்றுக் கொடுத்து அதனூடாகவும் போற்றப்படுகிறார். அரசுகள் பலவற்றையும் வெற்றி கொள்ளும் திறமை கொண்டவராகவும் காணப்பட்டார்கள். இதனை பின்வரும் செய்யுள் எடுத்துக்காட்டியுள்ளது:

*"பாத்திய நெறியெலாம் பல்வி தத்தினு
மேத்திய வந்தன னடரு மேறனான்
வேத்திய லெவையுள வடங்க வென்று தான்
காத்திய முரசறா துஞற்றுங் கையினான்"*[3]

---

[1] ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : உமறுகத்தாப் அரசியற் படலம்: 32, ப. 17
[2] ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : உமறுகத்தாப் அரசியற் படலம்: 33, ப. 18
[3] ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : அபூ உபைதா தலைமை பூண்ட படலம் : 18, ப. 28

உமர் (றழி) அவர்களது குணாம்சங்களை இஸ்லாமிய வரலாற்று நூலான கலீபாக்கள் வரலாறு என்ற நூலில் 121 – 322 வரையான பக்கங்களிலும் மற்றும் நாயகத்தின் கலீபாக்கள் வரலாறு என்ற நூலில் 189 – 244 வரையான பக்கங்களிலும் காணலாம்.

இவ்வாறாக புதூகுஷ்ஷாமில் ஷாம் நாடு வெற்றி கொள்ளப்பட்ட வரலாற்று நிகழ்வுகள் இஸ்லாமிய வரலாற்று நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. அந்த வகையில் அவை சரியான நிகழ்வுகளாகவே கணிக்கப்படுகின்றன. அவற்றை தெளிவுபடுத்துவதாகவே இவ்வத்தியாயம் அமையப்பெற்றுள்ளது.

# புதூகுஷ்ஷாமில் புனைவுகள் : சமயமும் வரலாறும்

## முஸ்லிம் பண்பாடு, வரலாற்றோடு முரண்படும் ஏகத்துவ அம்சங்கள்

தௌஹீத் எனும் அறபுச் சொல்லுக்கான தமிழ் பொருளே ஏகத்துவம் என்பதாகும். அந்த வகையில் தௌஹீத் எனும் சொல் 'வஹத' எனும் வேர்ச் சொல்லிலிருந்து பிறந்துள்ளது. 'வாஹித்' என்ற பதத்திற்கு ஒருவன், ஒன்று ஆகிய கருத்துக்கள் உண்டு. 'வஹ்ஹத' என்ற வினைச்சொல்லிலிருந்து 'தௌஹீத்' எனும் பதம் பெறப்பட்டுள்ளது. இதற்கு தனிமைப்படுத்தல், ஒற்றையாக்குதல், ஓர்மைப்படுத்தல் போன்ற கருத்துக்கள் காணப்படுகின்றன. இவ்வகையில்தான் ஓரிறைக் கொள்கையைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. தௌஹீத் என்பது மொழி வழக்கில் ஒரு பொருளை ஏனைய பொருள்களிடமிருந்து தனியாக பிரித்து வைப்பதாகும்.

இஸ்லாமிய வழக்கில் அல்லாஹ்வை மாத்திரமே ஏக இறைவனாக ஏற்று, அவனுக்கு வழிபடுவதைக் குறிக்கவே இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. அந்த வகையில் ஏகத்துவத்தை விளக்கும் போது, அல்லாஹ்வையே அனைத்தினதும் படைப்பாளனாகவும் வணக்கத்திற்குரியவனாகவும் எவ்வித குறைகளுமற்ற பரிபூரணமானவனாகவும் ஏற்பதைக் குறிக்கிறது. மேலும் ஏகத்துவமானது உள்ளத்தாலும் வணக்கத்தாலும் மார்க்கத்தாலும் பிரதிபலிக்கப்பட வேண்டும். அதாவது உள்ளத்தால் அல்லாஹ்வை மட்டுமே கடவுளாக ஏற்க வேண்டும். வணக்க வழிபாடுகளை அவனுக்கு மட்டுமே ஆக்கி உடல் உறுப்புக்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அத்தோடு மார்க்கத்தின் சட்டதிட்டங்களை இஸ்லாமிய மூல நூல்களில் பெற்று நடைமுறைப்படுத்த வேண்டும். அந்த வகையில் ஏகத்துவம் குறித்து அல்குர்ஆனில் கூறப்பட்டிருப்பதாவது:

> "மனிதர்களே! நீங்கள் (அல்லாஹ்வை) அஞ்சி நடக்கும் பொருட்டு உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தவர்களையும் படைத்த உங்கள் இரட்சகனையே வணங்குங்கள்."[1]

ஆனால் புதூகுஷ்ஷாமில் ஏகத்துவத்திற்கு முரணாக பல்வேறு விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அல்லாஹ்வைத் தவிர ஏனையோரை வணங்குவது வழிபடுவது ஏகத்துவத்திற்கு முரணானதாகவே அமையும். அந்த வகையில் புதூகுஷ்ஷாமில் பல இடங்களில் "நபி (ஸல்) அவர்களின் திருப்பாதங்களில் பணிதல்" என்ற விடயம் கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் இது ஏகத்துவத்திற்கு முற்றுமுழுதாக முரணான அம்சமாகும். அத்தோடு அல்லாஹ்வுக்குரிய பண்புகளை நபி (ஸல்) அவர்களுக்கோ ஏனையோருக்கோ உரித்தானது எனக் கூறுவதும் ஏகத்துவத்திற்கு முரணான விடயமே. இது பிழையான அம்சமாகும். அல்லாஹ் அல்குர்ஆனிலே பின்வருமாறு கூறியுள்ளான்:

> "எனவே, நீர் அல்லாஹ்வையே வணங்கி, நன்றி செலுத்துவோரில் ஆகிவிடுவீராக!"[2]

> மேலும், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ்வைத் தவிர வணங்கத்தகுதியான நாயன் இல்லை என்றும் நான் அவனது தூதுவர் என்றும் சாட்சி சொல்கிறேன். இந்த இரண்டு விடயங்களிலும் சந்தேகம் கொள்ளாத நிலையில் யாராவது அல்லாஹ்வைச் சந்தித்தால் அவன் சுவர்க்கம் நுழைவான்".[3]

எனவே வணங்கி வழிபடுதல் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உரியதாகும். இதற்கு மாற்றமாக புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ள விடயங்களாவன,

---

[1]அல்குர்ஆன் : அல் பகறா : 21
[2]அல்குர்ஆன் : ஸுமர் :66
[3]அல்ஹதீஸ் : ஸஹீஹ் முஸ்லிம்

புதூகுஷ்ஷாமின் ஆரம்பமான கடவுள் வாழ்த்துப்படலத்தில் நபி (ஸல்) அவர்களை போற்றும் விதமாக பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் திவ்விய திருவடிகளைத் தலையின் மீது சூடிக் கொள்வோமாக என்று பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*"……தேற்றவண் சோதி முகம்மது நபிதஞ்*
*சீர்பதஞ் சிரமிசை யணிவாம்"*[1]

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் திருவடிகளை இரு காலங்களிலும் தலையின் மீது அணிந்து கொள்வோமாக என பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*"……ரிருகாத ணிந்தமொழி மகுமூது தஞ்சரண*
*மிருகால மும்பு னைகுவாம்……"*[2]

நபி (ஸல்) அவர்கள் இஸ்லாமிய ஆட்சியை ஏற்ற சந்தர்ப்பத்தில் இடம்பெற்றதாக பின்வரும் விடயம் கூறப்பட்டுள்ளது. அதாவது, உலகத்திலுள்ள எல்லா வகையான உயிரினங்களும் பெருமானாரை ஏற்று சாட்சி பகர்கின்றன. மேலும் பாதம் போற்றி பணிந்து வணங்குகின்றன என பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*"……திருந்தனவு நாற்காலி னனியுயிர்கள்*
*பற்பலவு மிறகூ லென்னத்*
*திருந்துகரி யுரைத்தீமா னொடுபோற்றித்*
*திருப்பாதந் தேற்றா நிற்ப"*[3]

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கடவுள் வாழ்த்துப் படலம் :09,ப.05

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கடவுள் வாழ்த்துப் படலம் :10,ப.05

[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : 29, ப. 49

நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் ஆட்சி செலுத்திய சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள், தங்களின் பேச்சுத் திறத்தாலும் அரசர் பலரின் உள்ளத்தில் உண்மையை உணர்த்தி வாய்மையைக் கொண்டு தங்கள் பாதங்களில் பணிந்து இஸ்லாத்தைத் தழுவும்படி செய்தார்கள் என்றும் பின்வரும் செய்யுளில் குறிப்பிடப்பட்டுள்ளது:

*"கலையணி மொழியி னாலுங் கதிரணி வாளி னாலு*
*நிலையணி புதுமை யாலு நெஞ்சணிந் தறிவு வாய்மைத்*
*தலையணிந் தரசர் தாழ்ந்து தகைகொள வியற்றும் வள்ளல்......"*[1]

ஹிறக்கீலுக்கு நிருபம் விடுத்த படலத்திலே, தூதுவர் தகிய்யத் என்பவர் தன்னுடன் வந்த ஒருவரின் கையில் ஹிறக்கீலின் கடிதத்தைக் கொடுத்து மதீனாவுக்கு அனுப்பி விட்டு தமது வணிகத் தொழிலுக்காக 'ாம் நாட்டிற்குச் சென்றார்கள். கடிதத்தை வாங்கிய தோழர், மதீனா நகர் சென்று பெருமானார் (ஸல்) அவர்களிடம் போய், திருவடிகளிலே பணிந்து அக்கடிதத்தைக் கொடுத்தார்கள் என்று கீழ்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*"உடன்வரு மவர்கரத் துதவிச் சாமெனுந்*
*தடநகர்த் தொழிலொடு தகிய்யத் தேகினார்*
*திடனுடை மதீனத்திற் சேர்ந்து நந்நபி*
*யிடனளித் தனர்பதத் திவருந் தாழ்ந்தரோ"*[2]

நபி (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க முஅத்தா போருக்காக தம்மை தயார்படுத்திக் கொண்ட போர்த்தலைவர்கள், அழகு விளங்குகின்ற நபிகளாரின் திருவடிகளில் தாம் நலம் பெறுவதற்காக பணிந்து எழுந்து போருக்கான முரசங்களை முழக்கியவர்களாக வெளிச் சென்றார்கள். என்ற விடயம் பின்வரும் செய்யுளினூடாக கூறப்பட்டுள்ளது:

*"அருந்தவ முறைந்தணி யலர்ந்தமகு மூதின்*

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம்: முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கிறக்கீலுக்கு நிருபம் விடுத்த படலம் : 02, ப. 51

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம்: முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கிறக்கீலுக்கு நிருபம் விடுத்த படலம் : 73, ப. 76

*பெருந்தகை பதத்திடை நலன்பெற விறைஞ்சித்*
*திருந்திய புகழ்ச்சியி னுளத்துடை திறத்தோர்*
*பொருந்தட வியம்பல புடைத்துவெளி யுற்றார்"[1]*

தகிய்யத்து (றழி) அவர்கள், ஷாம் நாட்டு அரசனுக்கு இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்து பெருமானார் (ஸல்) அவர்கள் கொடுத்த கடிதத்தை ஏற்று, எவரும் வந்து போற்றுகின்ற, நபியவர்களின் அழகிய தாமரை மலர் போன்ற திருவடிகளில் பணிந்து இறைவனின் திருநாமத்தையும் பெருமானார் மீது ஸலவாத்தையும் தமது நாவால் ஓதியவராக ஷாம் தேசத்திற்கு பிரயாணம் செய்தார்கள். இதனை பின்வரும் செய்யுள் குறிப்பிட்டுள்ளது:

*"சொல்லொடு மெழுத்து மன்புஞ் சுகம்பெறச் சிரசி னேற்றி*
*யல்லொடு பகலும் போற்று மணிமலர்ப் பாதந் தாழ்ந்து*
*நல்லொடு மிறையோ னன்னோர் நாமமு நாவி லோதி*
*வெல்லொடுஞ் சேர்ந்தா ரோடு மிகையொடு விரைந்தா ரன்றே"[2]*

தபூக் போருக்காக மதீனாவிலிருந்து வந்த வீரர்கள், ஆர்ப்பரிக்கும் கடலானது தாழ்ந்து பணிந்து நிற்பதைப் போன்று இறைவனால் புகழப்படும் நபி (ஸல்) அவர்களின் திருப்பாதங்களில் பணிந்து நின்றனர் என பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*"முறைமுறை முரசொலி முழங்கு முன்றிலி*
*னிறைபுகழ் நபிபத மியாரு நேர்ந்தனர்*
*பொறைதரு மாரணக் கடலைப் பொங்கலை*
*யறைதரும் பாற்கட லடைந்து தாழ்தல் போல்"[3]*

நபி (ஸல்) அவர்கள் தபூக் போருக்காக செல்கையில் தமது குடும்பத்தினரின் பாதுகாப்புக் கருதி அலி (றழி) அவர்களை நிறுத்தி விட்டுச் சென்றார்கள்.

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம்: முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கிறக்கீலுடன் போர்புரி படலம்: 16, ப. 83

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம்: முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கிறக்கீலுக்கு நிருபம் விடுத்த படலம் : 05, ப. 52

[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : தபூக்கிற் றிறை கொண்ட படலம் : 28, ப. 151

இதனை அறிந்த சில வஞ்சகர்கள், நபி (ஸல்) அவர்கள் பக்கச்சார்பாக நடப்பதாக தமக்குள் பேசிக்கொண்டனர். இதனை கேள்வியுற்ற அலி (றழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் திருப்பாதங்களில் பணிந்து தமது துயரத்தைக் கூறினார்கள் என பின்வரும் செய்யுள்களில் கூறப்பட்டுள்ளன:

*"……பன்னிய புகழின் வாய்ந்த*
*முகம்மது பாதம் போற்றித்*
*தன்னுளத் துயரிற் சொன்னார்……"*[1]

அலி (றழி) அவர்கள் புகழையுடைய நபி (ஸல்) அவர்களின் பாதங்களைப் போற்றிப் புகழ்ந்ததாக பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது.

*" ……செம்மலர்ப் பாதம் போற்றித் திருப்பதிக் கடைந்தார் சூழ்ந்த*
*மெய்ம்மனம் பூத்த வள்ள லலியெனும் விறல்கொண் டாரே"*[2]

நபி (ஸல்) அவர்கள் தபூக் போருக்காக தமது சேனைகளுடன் வந்திறங்கியதை தெரிந்துக் கொண்ட கர்பா, அதுறுகு, அயிலத்து என்னும் மூன்று நகரத்தவர்களும் அவர்களின் அதிபனான புசன்னத்து எனும் மன்னனும் நபி (ஸல்) அவர்களின் திருவடிகளில் பணிந்து நின்றார்கள் என பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*"……காக்குநா யகன்றன் றூதர் பாசறைக் கடிதி னெய்தி*
*யூக்கநல் லொழுக்கத் தோடு மொளிர்மலர்ப் பாதந் தாழ்ந்தார்"*[3]

மேலும், தபூக் போரின் போது, சமாதான ஒப்பந்தம் செய்து கொண்ட அரசர்கள் பெருமானாரின் பாதங்களைப் போற்றியவர்களாய் தத்தம் நகரங்களுக்குச் சென்றனர். இதனை கீழ்வரும் செய்யுளில் காணலாம்:

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : தபூக்கிற் றிறை கொண்ட படலம் : 61, ப. 162

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : தபூக்கிற் றிறை கொண்ட படலம் : 72, ப. 165

[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : தபூக்கிற் றிறை கொண்ட படலம் : 90, ப. 171

*“ ……வரும்வரி முன்னம் பற்றி வழியொடுங் கொடுப்ப வாங்கித்*
*திருநபி பாதம் போற்றிச் சென்றனர் தத்தம் பாக்கம்”[1]*

தபூக் போருக்குச் செல்லாது பின்தங்கிய மூன்று ஸஹாபாத்தோழர்களும் பெருமானாரின் திருவடிகளைப் பணிந்து தாம் போருக்குச் செல்லாமைக்கான காரணங்களை விளக்கினர் என்பதாக பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*“……மிண்டமர்க் குடன்ப டாத மூவகை வீரர் தம்மிற்*
*கொண்டகா ரணத்தி னார்வந் தகத்தெழுங் குறியி னோடு*
*லிண்டவர் பாதம் போற்றித் துயரொடு விளக்க லுற்றார்”[2]*

தபூக் போருக்குச் செல்லாது பின்தங்கிய மூன்று ஸஹாபாத்தோழர்களும் நபி (ஸல்) அவர்களிடம் தம் இரு கைகளையும் ஏந்திப் பிரார்த்தித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் செய்யுளில் காணலாம்:

*“……வின்முறைக் கைக ளேந்தி விழிபுன லுதிர்த்து நின்றார்”[3]*

அல்லாஹ் அல்குர்ஆனிலே தபூக் போருக்குச் செல்லாது பின்தங்கியோரை மன்னித்தமை தொடர்பில் ஓர் ஆயத்தை இறக்கியதும், அத்தோழர்கள் மூவரும் பெருமானாரின் பாதங்களை முத்தமிட்டுக் குற்றம் நீங்கியவர்களாய் தம் இன்பக் கண்ணீரினால் கழுவினார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் செய்யுள் விளக்கியுள்ளது:

*“……சீரின்ப மனமும் பூத்த தேவரீர் திருப்பொற் பாத*

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : தபூக்கிற் றிறை கொண்ட படலம் : 96, ப. 173

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : மூவர் பிழை பொறுத்த படலம் : 01, ப. 200

[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : மூவர் பிழை பொறுத்த படலம் : 05, ப. 201

*நீரின்பக் கண்ணீரினாலே கழீஇயினர் நிமல ரன்றே"*[1]

ஷாம் தேசம் நோக்கி, உஸாமா (றழி) அவர்களின் படையை போருக்காக அனுப்புகையில் நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் ஓர் கூட்டம் கூட்டினார்கள். அக்கூட்டத்திற்காக ஸஹாபாத்தோழர்கள் நபி (ஸல்) அவர்களின் அழகிய பாதங்களைப் பணிந்து திரண்டு வந்தார்கள். இதனை பின்வரும் செய்யுளினூடாகக் காணலாம்:

*"……யிதத்தினி லொருமை கொண்டே யியைந்துமுன் னிலைநின்*
*றார்சொன்*
*மதித்துவந் தினிதிற் போற்றி வழிபெற நிற்றி ரென்றே"*[2]

அபூபக்கர் (றழி) அவர்கள் ஆட்சி செலுத்துகையில், அரசர்கள் பலரும் பாதங்களில் பணிந்து வணங்குகின்ற வெற்றி மாலைத் தரித்த அபூபக்கர் (றழி) அவர்களை அனஸ் (றழி) அவர்கள் பணிவுடன் வாழ்த்திப் புகழ்ந்தார்கள் என பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*"மாமணி மகுட வேந்தர் மலர்ப்பத மிறைஞ்சா நிற்குந்*
*தாமவொண் புயத்து வள்ளற் றவத்தொடு வாழ்த்தி யேத்தி……"*[3]

இவ்வாறாக ஏனையோரின் பாதம் போற்றி வணங்கியமைத் தொடர்பில் புதூகுஷ்ஷாமில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

மேலும், அல்லாஹ் தான், உலகுக்கெல்லாம் ஆதியானவன். இதனை அல்லாஹ்வின் திருநாமங்களில் ஒன்றான 'அவ்வல்' என்ற திருநாமம் குறித்துக் காட்டுகிறது. ஆனால் புதூகுஷ்ஷாமில் இதற்கு மாற்றமாக முஹம்மத்

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : மூவர் பிழை பொறுத்த படலம் : 28, ப. 209

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : உஸாமா தலைமை பூண்ட படலம் : 04, ப. 214

[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதுகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : படையெழுச்சிப் படலம் : 24, ப. 30

(ஸல்) அவர்கள் உலகுக்கெல்லாம் ஆதியானவர் எனக் கூறப்பட்டுள்ளது. அச்செய்யுள் பின்வருமாறு:

*"……காதிய வேலினர் கருத்துப் போலொளி*
*ராதியங் கடவுளு மழகிற் போயினார்"[1]*

இவ்வுலகையும் மறுவுலகையும் தனி ஒருவனாக நின்று ஆள்பவன் அல்லாஹ் மாத்திரமே. மாறாக புதூகுஷ்ஷாமில் நபி (ஸல்) அவர்கள் இரு உலகங்களையும் ஆள்பவர் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் இவ்வுலகைப் படைத்து பரிபாலிப்பவன் அல்லாஹ் மாத்திரமே. அதனை அல்குர்ஆனின் பின்வரும் வசனங்கள் பறைசாட்டுகின்றன.

"அவனே ஏழு வானங்களைத் தட்டுத்தட்டாகப் படைத்தான்……"[2]

"ஆட்சி யாருடைய கையில் உள்ளதோ, அவன் பாக்கியமுடையவனாகிவிட்டான்"[3]

இக்கருத்துக்கு முரணான பல விடயங்கள் புதூகுஷ்ஷாமில் இடம்பெற்றுள்ளன. அவை ஏகத்துவத்திற்கு முரணான விடயங்களாகும். அவை பின்வருமாறு:
பெருமானார் (ஸல்) அவர்கள் தமது இறுதிநிலையை அடைந்த போது அவர்களின் மனைவியர், இரு உலகங்களையும் ஆளும் அழகிய நபிகளுக்கரசர் நம்மையெல்லாம் விடுத்து மறுவுலகை அடையப்போகிறார்கள் என உணர்ந்து கவலை கொண்டார்கள். என்பதனை பின்வரும் செய்யுள் கூறுகிறது:

*"……யிம்மையு மறுமை காக்கு மெழிநபி மார்கள் கோமா*
*னம்மையல் லாது வேறு நனிவரத் தெரிந்தா ரென்னத்*

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : தபூக்கிற் றிறை கொண்ட படலம் : 78, ப. 167
[2] அல்குர்ஆன் : அல்முல்க் : 03
[3] அல்குர்ஆன் : அல்முல்க் : 02

*தம்மகத் தடங்கி டாத சஞ்சலக் கடலிற் றாழ்வார்"*[1]

மேலும், பெருமானார் (ஸல்) அவர்கள் தமது கிருபையால் உலகங்களையெல்லாம் காத்தருளுகின்றவர். என பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*"கண்ணிய கருணை தன்னாற் காவல்கொ ணயினார்க் கந்த……"*[2]

மறைவான விடயங்கள் பற்றிய அறிவு அல்லாஹ்வுக்கே மட்டும் உரிய அவனது அதிகாரத்தில் உள்ள விடயமாகும். எனவே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றியோ மறைவில் நடக்கக்கூடியவை பற்றியோ சுயமாக அறிய முடியாது. தேவைக்கேற்ப, அந்தந்த நிலமைகளில் அல்லாஹ்வால் அறிவித்துக் கொடுக்கப்பட்டவைத் தவிர வேறு எந்தத் தகவலும் அவருக்குத் தெரிய முடியாது.

இதற்கு ஆதாரமாக பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் அமைந்துள்ளன:

> "அவனிடமே மறைவானவற்றின் திறவுகோல்கள் இருக்கின்றன. அவனைத் தவிர வேறு யாரும் அவற்றை அறிய மாட்டார்கள். மேலும், தரையிலும் கடலிலும் உள்ளவற்றை அவன் நன்கறிவான். எந்த ஒரு இலையும் அவன் அதை அறியாமல் விழுவதில்லை. பூமியின் இருள்களில் உள்ள விதையோ, பசுமையானதோ, காய்ந்ததோ எதுவாயினும் தெளிவான ஏட்டில் இல்லாமலில்லை."[3]

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : அபூபக்கரை முன்னிலை நிறுத்த படலம் : 10, ப. 238

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : அபூபக்கரை முன்னிலை நிறுத்த படலம் : 15, ப. 240

[3] அல்குர்ஆன் : அல்அன்ஆம் : 59

"நிச்சயமாக அல்லாஹ் வானங்கள் மற்றும் பூமியில் மறைந்திருப்பதை அறிகிறவன். நிச்சயமாக அவன் இதயங்களில் இருப்பவற்றை நன்கறிகிறவன்".[1]

ஆயினும் புதூகுஷ்ஷாமில் இடம்பெற்றுள்ள இதற்கு மாற்றமான அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. அவை பின்வருமாறு:

நபி (ஸல்) அவர்கள், தோன்றியுள்ள பல்வேறு உலகங்களையும் அங்குள்ள பல்வேறு உயிர்களையும் அங்கு இருக்கும் வெளிப்படையான மற்றும் மறைமுகமான உண்மைகளையும் அத்தோடு அறிவும் பிரகாசமான ஞானமும் ஆற்றலும் ஆகிய நான்கையும் உணரக்கூடியவர். இதனை பின்வரும் செய்யுள் தெளிவுபடுத்துகிறது:

*"தோற்றிய பண்மை யிடங்களு மவையிற்*
*றுலங்கிய வுயிர்களும் பலவு*
*மேற்றிடந் தோற்றா வுண்மையு மறிவு*
*மிலங்கிய வொளிவொடு காட்சி*
*யாற்றலி னான்கி னருமணி யாகி*
*யகன்ற மெய்ப் பொருளென விளங்குந்*
*தேற்றவண் சோதி முகம்மது நபிதஞ்……"*[2]

ஏகத்துவத்திற்கு முரணான அம்சங்களில் ஒன்றாகவே அல்லாஹ் அல்லாத வேறொருவர் மீது சத்தியம் செய்வது அமைகிறது.

"நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்கிறாரோ அவர் காபிராகி விட்டார். அல்லது இணைவைத்தவராகி விட்டார்."[3]

ஆயினும் புதூகுஷ்ஷாமில் இதற்கு முரணாகக் கூறப்பட்டுள்ளது. அது பின்வருமாறு:

---

[1] அல்குர்ஆன் : அல் பாதிர் : 38

[2] அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கடவுள் வாழ்த்துப் படலம் : 09, ப. 05

[3] அல் ஹதீஸ் : அஹ்மத் , அபூதாவூத்

நபி (ஸல்) அவர்கள், உஸாமா (றழி) அவர்களின் தலைமையிலான படையை ஏற்காத ஸஹாபாத்தோழர்களை நோக்கி, நீங்கள் எனது கட்டளையை ஏற்காதிருந்தால் பெரும் இழிவையே அடைவீர்கள். என் மீது ஆணையாக இதனைக் கூறுவேன். என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக கூறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் செய்யுள் தெளிவுபடுத்தியுள்ளது:

*"……யொக்குவப் புடையநீ ரவரை யொல்கிலா*
*நக்குவப் புடையரென் னாணை நாட்டினேன்"*[1]

உலகிலுள்ள அனைத்து மக்களினதும் துன்ப துயரங்களையும் நோய்களையும் போக்கக்கூடிய ஆற்றல் அல்லாஹ்வுக்கு மட்டுமே இருக்கிறது. மேலும் பாவங்களை நீக்கி பரிசுத்தப்படுத்துபவனும் அல்லாஹ் மாத்திரமே ஆவான். இதனை பின்வரும் அல்குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகிறது:

"நான் நோயுற்றால் அவனே என்னைக் குணப்படுத்துகின்றான்."[2]

"அல்லாஹ்வையன்றி பாவங்களை மன்னிப்பவன் யார்?"[3]

ஆயினும் இதற்கு மாற்றமான அம்சங்கள் புதூகுஷ்ஷாமில் இடம்பெற்றுள்ளன. அவை பின்வருமாறு:

நபி (ஸல்) அவர்கள் உலகிலுள்ள அனைவரையும் நோய்கள், பாவங்கள் நெருங்கிடாது காப்பாற்றும் வல்லமைமிக்கவர் என கூறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் செய்யுள் விளக்குகிறது:

---

[1] அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : உஸாமா தலைமை பூண்ட படலம் : 51, ப. 230

[2] அல்குர்ஆன் : அஷ்ஷுஅரா : 80

[3] அல்குர்ஆன் : ஆலஇம்ரான் : 135

*"……பாரு டுத்த திசைநான்கும் பிணிபாவ மணுகாது*
*படர்ந்து மன்னுங்……"*[1]

பாவத்தில் வாடுவோர்க்கு அவற்றை நீக்குபவரும், துன்பத்தில் வாடுவோர்க்கு இனிய வாழ்வளிப்பவரும், உள்ளத்து நோய்களை நீக்கி பாவங்களைப் போக்கும் நோய் நிவாரணியாகவும் விளங்கும் நபி (ஸல்) அவர்களை மூன்று ஸஹாபாத்தோழர்களும் புகழ்ந்தனர் என பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*"……வெறிதரு நிழல்கு லாய விதிர்தரு தருவே துன்ப*
*மெறிதரு மதியே யெங்க ளின்னுயிர்க் காக்க மேநோப்*
*பறிதரு மருந்தே தேனே பவமறுங் கருணைக் காரே"*[2]

## இஸ்லாமிய வரலாற்றில் கற்பனைகளை இணைத்துக் கூறியுள்ள விதம்:

புதூகுஷ்ஷாமில் கற்பனைக்குட்படுத்தப்பட்ட அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. அவை இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட விடயமாகும். இதற்கு ஆதாரமாக பின்வரும் அல்குர்ஆன் வசனம் அமையப் பெற்றுள்ளது:

"ஷைத்தான்கள் யார் மீது இறங்குகின்றனர் என உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? இட்டுக்கட்டும் ஒவ்வொரு பாவியின் மீதும் இறங்குகின்றனர்"[3]

அந்த வகையில் புதூகுஷ்ஷாமில் கற்பனையாக கூறப்பட்ட பிழையான விடயங்களை பின்வருமாறு நோக்கலாம்:

மனிதன் படைக்கப்பட்ட அமைப்பு முறை குறித்து புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டிருப்பதாவது, ஐம்பூதங்களின் சேர்க்கையினால் மனிதன் படைக்கப்பட்டுள்ளான்.

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : 06, ப. 41

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யாக் காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : மூவர் பிழை பொறுத்த படலம் : 02, ப. 200

[3] அல்குர்ஆன் : அஷ்ஷுஅரா : 221 , 222

பஞ்சபூதங்களும் ஒன்றாகி ஆகாயத்திலே அவன் கலந்திருந்தான். அதிலிருந்து காற்றில் கலந்தான். பின்னர் நெருப்பிலும் அதன் பின்பு நீரிலும் தரித்தான். இறுதியாக மண் எனும் பூதத்தில் சேர்ந்தான். இதனை பின்வரும் செய்யுளில் விளக்கியுள்ளார்:

*“வானத்தி னிருந்து வந்து வாயுவிற் கலந்து தீயின்*
*றானத்தி னிறங்கி நீரிற் றரித்துமண் டலத்திற் புக்கி……”*[1]

இவ்விடயம் இஸ்லாத்திற்கு புறம்பானதாகும். மாறாக மனிதன் படைக்கப்பட்டதன் சரியான நிலையை அல்குர்ஆன் பின்வருமாறு கூறியுள்ளது:

“சுட்டெடுத்த மண் பாண்டத்தைப்போல் (தட்டினால்) சப்தமிடும் களிமண்ணால், அவன் (முதல்) மனிதரைப் படைத்தான்.”[2]

பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வுலகை விட்டு பிரிந்த போது பூமியானது பின்வருமாறு அழுது புலம்பியது என புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளது. அதாவது, “இறைவனே என் மீது மனிதர்கள் தோன்றிய காலம் முதல், ஆதம் (அலை) முதலான நுபுவ்வத்தையுடைய நபிமார்களையும் றஸூல்மார்களையும் அனுப்பினாய். இறுதியாக வந்த முகம்மது றஸூலுல்லாஹ்வையும் உன் பால் அழைத்துக் கொண்டாய். இனி இப்பூமி தீயவர்களின் உறைவிடமாகிவிடுமோ என பயப்படுகிறேன்” என முறையிட்டது. அதற்கு இறைவன், “பூமியே பயப்படாதே இனி உன் மீது விலாயத்தையுடைய அவுலியாக்களையும் குதுபுமார்களையும் அனுப்புவேன். ஆதலால் உன் சிறப்பு குன்றாது” என ஆறுதல் கூறினான். இதனை பின்வரும் செய்யுள் விளக்குகிறது:

*“இரங்கிக் கரையும் புடவிதனக்*
*கிறையோ னருளு மெந்நாளும்*

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கடவுள் வாழ்த்துப் படலம் : 05, ப. 03

[2] அல்குர்ஆன் : அர்ரஹ்மான் : 14

*வரங்க ளுடையார் வகையுடையார்*
*மருவி யிருப்ப ரெனவவர்கள்*
*கரங்க டாழ்த்துந் தகுதிநிலைக்*
*கண்ணே யரசென் றுலவுமெமர்*
*சிரங்கொள் பதத்தின் மலர்கவுதுல்*
*லகுலம் குதுபைச் சிந்தைசெய்வாம்''*[1]

உமர் (றழி) அவர்களின் ஆட்சியில் ஷாம் நாட்டின் கிம்மசு நகரைக் கைப்பற்றுவதற்காக இக்ரிமா (றழி) அவர்கள் போரிட்டுக் கொண்டிருக்கும் போது தம் இறுதிநிலையை அடையவிருக்கையில் ஹுருல்ஈன்களை கண்ட நிலையானது பிழையாக வர்ணிக்கப்பட்டுள்ளது: அவர்களில் ஒருத்தி தனது ஒரு கையில் இரத்தினப்பூங் கிண்ணத்தில் அமுதமும் மற்றொரு கையில் தனது வாய்துடைக்கும் பசிய சுந்துசுப் பட்டினாலாகிய கைக்குட்டையும் கொண்டு எங்கும் பிரகாசிக்க என்முன் வந்து பேசினாள் எனக் கூறப்பட்டுள்ளது. இதனைப் பின்வரும் செய்யுளினூடாகக் காணலாம்:

*''அத்தகை யாரி னொருத்தி யிரத்தின மலர்கிண்ணத்*
*தத்தமு தத்தொடு கையொரு கையிடை தண்பைங்கேழ்*
*மொய்த்தொளிர் சுந்துசி னான்மணி வாய்துடை முதிர்காம்போ*
*டெத்திசை பூப்ப விளக்குனென் முன்ன மிசைக்கின்றாள்''*[2]

இவ்வாறான சம்பவங்கள் இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்றதற்கான ஆதாரங்கள் இல்லை. எனவே இவை பிழையான விடயங்களாகும்.

இஸ்லாத்தில் நல்லடியார்களின் புகழைப் பற்றி கூறுகையில் புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ள கற்பனையான விடயங்களாவன:

இவ்வுலகிலுள்ள சிறந்த மணிமாளிகை ஒன்றை வாங்கவிருந்த ஒருவரின் பணத்தை சுல்தானுல் ஆர்பீன்

---

[1] அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கடவுள் வாழ்த்துப் படலம் : 20, ப. 14

[2] ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கிம்மசு கொண்ட படலம் : 77, ப. 427

அவர்கள் அல்லாஹ்வுக்குப் பொருத்தமான வழியில் செலவிடச் செய்தார்கள். அப்பணத்தைக் கொடுத்த மனிதருக்கு தானே பிணையாக நின்று நிலையற்ற இவ்வுலகிற்கு பதிலாக விண்ணுலக சுவர்க்க மாளிகையொன்றைக் கிடைக்கச் செய்தவர்களே செய்யிதுனா அஹ்மதுல் கபீறுர் ரிபாயி ஆண்டகை அவர்கள் என கீழ்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*"மண்மணி மாளிகை விலைப்பொன் வாங்கிமேல்*
*விண்மணி மாளிகை பெறச்செய் மேன்மையந்*
*தண்மணி யாஞ்சுலுத் தானுல் லாரிபீன்……"*[1]

சீடர்கள் சிலர் அகோர பசியின் காரணமாக காளைக் கன்று ஒன்றை அறுத்துப் புசித்தனர். அதன் பின் நாகூரின் நாயகராகிய ஷாகுல்மீது ஒலியுல்லாஹ் அவர்கள் அதன் என்புக் குவியலின் மீது தோலைப் போர்த்தி எழுந்து செல்லுமாறு அல்லாஹ்வின் திருநாமத்தால் பணித்தார். அப்பொழுது அக்காளை உயிர் பெற்றுச் சென்றது என பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*"என்பினில் வடகம்போர்த் தெழுப்பி யவ்விடை*
*முன்பினி லுலவருண் முதிய காரண*
*மன்பயில் சாகுல் கமீது மாதவப்……"*[2]

நபி (ஸல்) அவர்களின் ஆட்சியின் போது, முஅத்தா போரினை முடித்து விட்டு மதீனா நகருக்குப் புறப்பட்ட காலித் (றழி) அவர்களும் படைக்கூட்டத்தினரும் இடையில் ஓர் தங்குமிடத்தை அடைந்தார்கள். அப்போது அக்கூட்டத்துடன் வந்த சுபைனா எனும் ஓர் அடியார் வழிதவறிப் பிரிந்து போய்விட்டார். அவ்வேளை அவமானத்தையடைந்து தோற்றோடிய பகைவர்கள்

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கடவுள் வாழ்த்துப் படலம் : 21, ப. 15
[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கடவுள் வாழ்த்துப் படலம் : 22, ப. 16

காட்டிலே பதுங்கி நின்றார்கள். தோல்வியடைந்ததால் கோபம் கொண்ட அப்பகைவர்கள் சுபைனாவை எதிர்த்தார்கள். அவர் வீரத்தோடு பகைவர்களை எதிர்த்து விட்டு மது அருந்தும் அக்கூட்டத்தினரைக் கடந்து போனார். அப்போது ஒரு புலி அவரை வழிமறித்தது. புலியால் மறிக்கப்பட்ட சுபைனா பயந்தார். ''நான் முஹம்மத் (ஸல்) அவர்களின் அடியவர்களுள் ஒருவர்'' எனக் கூறியதும், அதனைக் கேட்ட புலி அவரைக் கொல்லும் எண்ணத்தைக் கைவிட்டது. மேலும் அப்புலியானது, பெருமானார் (ஸல்) அவர்களின் பெயரைக் கேட்டதும் மகிழ்ச்சியடைந்தது. அத்தோடு பெருமானாரின் நாமத்தைப் புகழ்ந்து, இவ்வுலகில் என்றுமே கிடைக்காத பாக்கியம் இன்று இங்கு கிடைத்தது எனக்கூறி மகிழ்ந்து அவரை வேறு விலங்குகளால் எதுவும் தீமை நேராது காத்து, கூடவே நடந்து வந்து மனிதர்கள் வாழும் பகுதியில் விட்டுச் சென்றது.

பின் சுபைனா என்பவர் தன் கூட்டத்தாரிடம் வந்து, தான் பகைவர்களிடம் அகப்பட்டமை தொடர்பிலும் பின் கொடிய புலியொன்று பெருமானாரின் பெயரைக் கேட்டதும் உள்ளம் மகிழ்ந்து தன்னை ஆதரித்தமை தொடர்பிலும் படையினருக்கு எடுத்துக் கூறினார். இவ்வற்புதத்தைக் கேட்ட யாவரும் அல்லாஹ்வைப் புகழ்ந்து மகிழ்ச்சியுடன் தமது பயணத்தைத் தொடர்ந்தார்கள். இச்சம்பவம் புதூகுஷ்ஷாமில் கிறக்கீலுடன் போர்புரிப் படலத்தில் 192 – 196 வரையிலான செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது. அது பின்வருமாறு:

*''வெண்டிரைப் பரவை யார்ப்பின் விரிதரும் பதாதி மொய்ப்ப*
*வெண்டிசை குளிரும் பேரி யியம்பல முழங்க மூசும்*
*வண்டினம் பறவை பாடு மகிழ்வளங் கடந்தோர் தங்க*
*லண்டினர் சுபைனா செல்லும் வழிபிழைத் தகன்று போனார்''*[1]

நபி (ஸல்) அவர்கள் இவ்வுலகைவிட்டு மறைந்த போது நபிமார்களின் வருகை முற்றுப்பெற்றதாலும் வஹி இறங்குவது நின்றமையாலும் பூமியானது இனி தன்னிலே பாவங்கள் பெருகுமென்று இறைவனை நோக்கி அழுது

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கிறக்கீலுடன் போர்புரி படலம் : 192, ப. 136

முறையிட்டது என்றும் அதற்கு அல்லாஹ் "நீ அழாதே, உன்னிடத்தில் என் நேசர்களான மேலோர்கள், குதுபுகள், கௌதுகள் முதலியோரை அனுப்புவேன்" என்று ஆறுதல் அளித்தான் எனறுக் கூறப்பட்டுள்ளது. பூமி, அபூபக்கர் (றழி) அவர்கள் ஆட்சியேற்றதும் அவர்களின் தலைமையைக் கண்டு மகிழ்வுற்றது. எனவே தன் துயரை இறைவன் நீக்கி வைத்ததால் பூமியிலுள்ள அனைத்து உயிர்களும் மகிழ்ந்து அபூபக்கர் (றழி) அவர்களை வாழ்த்தின என்பதாகக் கூறப்பட்டுள்ளது. அச்செய்யுள் பின்வருமாறு:

*"தன்னகத் துயரினை யிறைவன் றான்கொள*
*முன்னுரைத் திடும்புவி முழுது மேமகிழ்*
*வின்னகத் தலர்தர வியையும் பல்லுயிர்*
*மன்னகத் தருங்களிப் பெய்தி வாழ்த்துமால்"[1]*

இவ்வாறான சம்பவங்கள் இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்றதற்கு எவ்வித ஆதாரமும் இஸ்லாமிய நூல்களில் இடம்பெற்றில்லை. எனவே இவை இஸ்லாத்தின் பெயரில் உருவாக்கப்பட்ட புதிய விடயங்களாகும்.

இஸ்லாமிய வரலாற்றில் கூறப்பட்டுள்ள சில விடயங்கள் புதூகுஷ்ஷாமில் திரிபுக்குட்படுத்தப்பட்டுள்ளன. அவை இஸ்லாத்தில் இடம்பெறாதவையாகும். அவ்வாறான சம்பவங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த வகையில் நபி (ஸல்) அவர்களின் மறைவிற்கு பிறகு அபூபக்கர் (றழி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்கள். அதாவது, நபி (ஸல்) அவர்கள் மறைந்த அன்றே அடக்கம் செய்வதற்கான ஆயத்தங்களை செய்யும் போதே ஸகீபா பனீ ஸாஇதாவில் அன்சாரிகள் ஒன்றுகூடி தங்களில் ஓர் தலைவரைத் தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்கள். இது தொடர்பாக இஸ்லாமிய வரலாற்று நூலான நாயகத்தின் கலீபாக்கள் வரலாறு என்ற நூலில் 74 ஆம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : அபூபக்கர் அரசுரிமைப் படலம் : 33, ப. 13

ஆயினும் புதூகுஷ்ஷாமில் இச்சம்பவம் திரிபுபடுத்தப்பட்டு நபி (ஸல்) அவர்களை அடக்கம் செய்த பின்னரே ஸகீபா பனீ ஸாஇதாவில் ஒன்றுகூடியதாகக் கூறப்பட்டுள்ளது. அபூபக்கர் அரசுரிமைப் படலத்தில் 5,6 ஆம் செய்யுள்களில் இவ்விடயம் இடம்பெற்றுள்ளது:

*"அணித்திரு புறவினை யருகின் மேயவர்……"*[1]

நபி (ஸல்) அவர்களின் மறைவிற்குப் பிறகு அபூபக்கர் (றழி) அவர்களை கலீபாவாக ஏற்று உறுதிமொழி அளித்தோரில் முதன்மையானோராக உமர் (றழி), உஸ்மான் (றழி) மற்றும் அலி (றழி) ஆகியோராவர் என புதூகுஷ்ஷாமின் விளக்கவுரையில் கூறப்பட்டுள்ளது. அது பின்வருமாறு:

*"தெரிமொழி யுணர்ந்தவர் செல்வ மேன்மையிற்*
*புரிமொழி மூவரும் புகழ்ந்து கூறினர்……"*[2]

ஆனால் இஸ்லாமிய வரலாற்று நூல்களில், உறுதிமொழி அளித்தோரில் முதன்மையானோராக உமர் (றழி), அபூ உபைதா (றழி) மற்றும் பஷீர் இப்னு ஸஅத் அல்அன்சாரி (றழி) அவர்களேயாவர் எனக் கூறப்பட்டுள்ளது. இவ்விடயம் கலீபாக்கள் வரலாறு எனும் நூலில் 73, 74 ஆம் பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உமர் (றழி) அவர்களது காலத்தில் அபுல்குதுஸ் வெற்றி கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் அப்துல்லாஹ் (றழி) அவர்கள் ஒரு கனவு கண்டார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. அதாவது, அப்துல்லாஹ் (றழி) அவர்கள் நித்திரையில் தமது தந்தையை கனவில் கண்டார்கள். சொர்க்கத்தின் வாசனை கமழும் ஆடை அணிந்து முத்துமணிமாலை அணிந்து வெற்றி பொருந்திய வாளைக் கரத்தில் ஏந்தியவாரான தோற்றத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள். பின் தந்தை, மகனின் கையிலே

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : அபூபக்கர் அரசுரிமைப் படலம் : 05, ப. 03

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : அபூபக்கர் அரசுரிமைப் படலம் : 16, ப. 06

வாளைக் கொடுத்து போர் செய்வாயாக எனப் பணித்ததாகக் கனவு கண்டார்கள். கனவு கண்டு விழித்தெழுந்த அப்துல்லாஹ் (றழி) அவர்கள், தகப்பனார் கனவில் கொடுத்த வாள் கையிலிருக்கக் கண்டு மிக்க சந்தோஷமடைந்து, குதிரையேறி போரிடச் சென்றார்கள். இதனை பின்வரும் செய்யுள் கூறுகிறது:

*"கண்கவ ரொளியின் சொற்கக்*
*கடிமக ழாடை சூடி*
*விண்கவர் சுடரின் சோதி விரிமணிச்*
*சிறகு பாலார்ந்*
*தொண்கவர் வெற்றி வைவா*
*ளுயர்வளந் தாங்கி வல்லோன்*
*றண்கவ ரருளிற் பூத்து மலர்முகந்*
*தயங்க மாதோ"*[1]

மேலும், அப்துல்லாஹ் (றழி) அவர்கள் தம் தந்தையின் திருநாமம் கபுறின் இரு பக்கங்களிலும் கல்லில் பொறித்து வைக்கப்பட்டுள்ள பீடத்தைக் காணும் போதெல்லாம் மனம் கலங்கி விம்மி விம்மி அழுதார்கள். அதன்பிறகு தம் கைகளை ஏந்தி பிரார்த்தித்தார்கள் என்றும் புதூகுஷ்ஷாமில் பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளன:

*"பொறித்ததோர் நாம மேன்மைப் புகழிரு பாலுங் கல்லிற்*
*செறித்ததோர் பீட நோக்குந் தொறுந் தொறுஞ் செருமி விம்மி*
*மறித்ததோ ருளத்தி னேங்கி யழுதனர் வாய்விண் டேத்திப்*
*பறித்ததோர் வடிவி னண்ணல் பாத்திகா வோதி னாரால்"*[2]

இவ்வாறாக மேலே குறிப்பிடப்பட்ட சம்பவங்கள் அனைத்தும் இஸ்லாமிய வரலாற்று நூல்களில் இடம்பெறாதவைகளாகும். அந்த வகையில் மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்படுபவை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதவையே. இதற்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸ் விளங்குகின்றது:

---

[1]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : அபுல்குதுசு கொண்ட படலம் : 17, ப. 57
[2]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : அபுல்குதுசு கொண்ட படலம் : 15, ப. 56

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “யார் நம்மால் ஏவப்படாத புதிய காரியங்களை மார்க்கத்தில் ஏற்படுத்துகிறார்களோ அது மறுக்கப்பட வேண்டும்.”[1]

[1] அல்ஹதீஸ் : புஹாரி

# புதூகுஷ்ஷாமில் புனைவுகள் : தமிழ் இலக்கிய செல்வாக்கு

## இஸ்லாமிய வரலாற்றில் ஆட்சியாளர்கள் ஆட்சியை ஏற்கும் போது பின்பற்றப்பட்ட இஸ்லாத்திற்கு மாற்றமான அம்சங்கள்

புதூகுஷ்ஷாமில் தமிழ் இலக்கிய மரபைப் பின்பற்றி பல அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. அந்த வகையில் அவை இஸ்லாம் மார்க்கத்திற்க்கு புறம்பான அம்சங்களாகும். அதனை நபி (ஸல்) அவர்கள் தடைசெய்துள்ளார்கள். இதற்கு ஆதாரமாக பின்வரும் நபிமொழியை நோக்கலாம்:

> நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: "யார் பிற மத கலாச்சாரத்தை பின்பற்றி நடக்கின்றாரோ அவரும் அவர்களைச் சார்ந்தவரே"[1]

அந்த வகையில் நபி (ஸல்) அவர்கள் முதல் உமர் (றழி) அவர்கள் வரையிலானோர் இஸ்லாமிய ஆட்சியை ஏற்ற போது தமிழ் மரபுகளைப் பின்பற்றியதாக சில விடயங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால் இஸ்லாத்தில் அவற்றிற்கு எவ்வித ஆதாரங்களும் இடம்பெற்றதாக தகவல்கள் இல்லை. அந்த விடயங்களை பின்வருமாறு எடுத்து நோக்கலாம்:

நபி (ஸல்) அவர்கள் மதீனா நகரை வந்தடைந்து ஆட்சியை ஏற்ற போது சூழவிருந்த தந்தையர், மக்கள், சகோதரர்கள், சம்பந்திகள், மைத்துனர்கள் இப்படியாக முஹாஜிரீன்கள், அன்சாரிகள் என பல பிரிவினர்களும் மனமொத்து வாழ்த்திட சொர்க்கமாதர் மலர்மாரி தூவி நின்றனர். என பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*"சொரிகதிர்வேற் றந்தையுடன் வருமவர்க டோன்றலவர்*
*துணைகண் மக்க*
*ளரியமுறை யருகுடைய சம்பந்தர் மைத்துநர்க*
*ளறிவின் மிக்க*

[1]அல்ஹதீஸ் : அபூதாவூத் : 3512

*விருமரபின் கேளிர்களு மதியுடைய நட்டர்பல*
*ரிணங்கி வாழ்த்தத்*
*திருவளரும் பொன்னகர மலர்மாரி யரம்பையர்கள்*
*சிறப்பிற் றூவ"*[1]

நபி (ஸல்) அவர்களிடம் என்ன நடந்தாலும் தம் கடமை மறவாமல் விசிறியும் காளாஞ்சியும் ஆலவட்டமும் வைத்துக் கொண்டு பணியாற்றக் காத்திருக்கும் உயர் மக்கள் பதினொரு பேர் இருந்தனர். இதனை பின்வரும் செய்யுள் கூறுகிறது:

*"அணியெழிலி னவையிடத்து மறையுமொழி தன்னிடத்து*
*மசையா துற்று*
*மணியெழில் கொள் சிவிறியொடு காளாஞ்சி சிற்றால*
*வட்ட மற்றுஞ்*
*பணியெழிலின் மாறாது காத்திருக்கு மாண்டகையாற்*
*பயன்கள் மிக்கக்*
*கணியெழிலார் பதிற்றொருவ ரொருபுறமு மிருபுறமுங்*
*கலவா நிற்ப"*[2]

அபூபக்கர் (றழி) அவர்களின் ஆட்சியேற்பு வைபவ நிகழ்வுகள் தொடர்பிலும் புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளது. அவற்றை தமிழ் இலக்கிய மரபுக்கமைய சேகுனாப்புலவர் கூறியுள்ளார். ஆயினும் இஸ்லாமிய வரலாற்றில் இதற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை.

கூடியிருந்த ஸஹாபாத் தோழர்கள் அனைவரும் அபூபக்கர் (றழி) அவர்களைப் புகழ்ந்து, தாமரை மலரின் நறுமணமும் குளிர்ச்சியும் கொண்ட தூய நீரினால் அன்புடனே நீராட்டினார்கள். மேலும் அவர்களுக்கு நல்லுடைகள் அணிவித்து பெருமானாரின் மோதிரத்தை அணியச் செய்து நவமணிகள் பதிந்து விளங்கும் இரத்தின கிரீடத்தையும் தலையின் மீது சூட்டியதாகக் கூறப்பட்டுள்ளது. அத்தோடு அபூபக்கர் (றழி) அவர்களைச் சூழவிருந்த உமர் (றழி), உஸ்மான் (றழி) மற்றும் அலி (றழி) ஆகியோர்

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : 22, ப. 47

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : 18, ப. 45

பொன்னும் நவரத்தினங்களும் கொடுத்ததாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும் அபூபக்கர் (றழி) அவர்களைச் சூழ்ந்தவாறு விசிறி, ஆலவட்டம், வெண்தாமரைகள் மற்றும் வெண்கொற்றக் குடைகளை ஏந்திய வண்ணம் பலர் இருந்தனர் என்றும் அபூபக்கர் அரசுரிமைப் படலத்தில் *26 – 30* வரையிலான செய்யுள்களில் கூறப்பட்டுள்ளன:

*"அங்கமீ தோங்கிய புளக மார்வமும்*
*பொங்கிய வாற்றினாற் புகழ்ந்து நன்மைசா*
*லிங்கித வாய்மையா ரெவரு மேந்தலைப்*
*பங்கய நறும்புனல் பரிவி னாட்டினார்"*[1]

## இஸ்லாமிய வரலாற்றில் போர்களின் போது பின்பற்றப்பட்ட இஸ்லாத்திற்கு மாற்றமான அம்சங்கள்

இஸ்லாத்தில் நபி (ஸல்) அவர்கள் காலம் முதல் பல்வேறு போர்கள் நடைபெற்று வந்துள்ளன. அந்த வகையில் அப்போர்களின் போது இடம்பெற்றதாக சில நிகழ்வுகள் புதூகுஷ்ஷாமில் குறிப்பிட்டுள்ளன. ஆனால் அவை தமிழ் போர் மரபில் காணப்படுகின்றவையாகும். மேலும் தமிழ் போர் மரபில் பின்பற்றப்படுகின்ற முரசவாத்தியங்கள் போன்ற ஏனையவையும் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாகவும் புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறான நிகழ்வுகள் இஸ்லாத்தில் இடம்பெற்றதற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை. அவற்றை பின்வருமாறு நோக்கலாம்:

நபி (ஸல்) அவர்களின் ஆட்சியின் போது, ஹிறக்கீல் மன்னனுடன் முஸ்லிம்கள் போரிடுகையில் தனது ஆயிரம் பணாமுடிகளாலும் பூமியைத் தாங்கி நிற்கும் ஆதிசேடனும் அஞ்சுமாறு வெற்றிக்கொடியைத் தாங்கியவராய்த் தமது குதிரையைச் செலுத்தி காலித் (றழி) அவர்கள் போரிட்டார்கள் என கீழ்வரும் செய்யுள் கூறுகிறது:

*" ……பணந்தரு மனந்த னஞ்சச் செறிந்தபற் கணத்தி னாப்பண்*

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : அபூபக்கர் அரசுரிமைப் படலம் : 26, ப. 10

*குணந்தருங் கொடிமா ஊர்ந்தார் குலபதி காலி தன்றே''*[1]

அபூபக்கர் (றழி) அவர்களது ஆட்சிக்காலத்தில் ஷாம் தேசம் நோக்கி போருக்காக செல்கையில் முரசவாத்தியங்களின் ஒலியானது கடலின் ஒலியை ஒத்திருந்தது என கூறப்பட்டிருப்பதனை பின்வரும் செய்யுளினூடாகக் காணலாம்:

*''……வீறு வெண்படங் கலையென மிகைமுர சொலியிற்……''*[2]

அபூபக்கர் (றழி) அவர்களின் ஆட்சியின் போது பலஸ்தீனை நோக்கி படையெடுத்துச் செல்கையில் பகைவர்களின் படையானது முருடு, துந்துமி, பேரி, முழா, தவில் ஆகிய வாத்தியங்களைக் கொண்டு ஆரவாரித்து தேர்களில் சென்றனர் என புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் செய்யுளில் காணலாம்:

*''முருடு துந்துமி பேரிமு ழாதவில்*
*மருடு லங்குமு யர்வெளி வாய்விட……''*[3]

பலஸ்தீன் போருக்காக செல்கையில், அம்ர் (றழி) அவர்களின் சேனையானது நவுரி, சச்சரி, துந்துமி, தண்ணுமை போன்ற வாத்தியங்கள் ஒலிக்க ஆர்ப்பரித்துப் புறப்பட்டனர். என பின்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது:

*''நவுரி சச்சரி துந்துமி தண்ணுமை நரற்றப்*
*பவுரி வெம்பரி விருதொடு திசையெலாம் படரச்……''*[4]

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கிறக்கீலுடன் போர்புரி படலம் : 162, ப. 128

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : படையெழுச்சிப் படலம் : 45, ப. 38

[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : பலஸ்தீன் கொண்ட படலம் : 55, ப. 141

[4]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : பலஸ்தீன் கொண்ட படலம் : 106, ப. 164

ஸஹாபாத் தோழர்களும் ஏனைய படை வீரர்களும் போர்களின் போது மலர்மாலைகள் அணிந்ததாக புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இஸ்லாமிய வரலாற்று நூல்களில் இது தொடர்பாக எவ்வித ஆதாரமும் காணப்படவில்லை. இவ்வாறு ஸஹாபாக்கள் மலர்மாலைகள் அணிந்தார்கள் என பின்வரும் செய்யுள்களில் கூறப்பட்டுள்ளன:

*“……வம்பி னங்கடு ரந்து நின்றனர் தும்பையம் புயரே”*[1]

*“மட்டுண்ட வாகை பூண்ட வள்ளலுந் தொடர்ந்தார் தாமுங்……”*[2]

*“அணிந்தெழுங் கலனுங் கையி னாயுத முடலு மாவித்*
*திணிந்தெழு மாலை யாவுந் தெரிந்திலர் சினமே கண்டார்……”*[3]

*“……வேரி மாலையர் விருதொளி குடைகொடி விரிப்பக்……”*[4]

*“ சிரத்தி னுந்திரட் புயத்தினுஞ் செந்நறா மாலை……”*[5]

*“……பொலிவணி வாகை மற்றோட் புண்ணிய றபீகா யானே……”*[6]

*“……விசைகொ ளளியி னறுந்தாம*
*வஞ்சி யிருதோ ளினுந்தவழ……”*[7]

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கிறக்கீலுடன் போர்புரி படலம் : 137, ப. 120
[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : தபூக்கிற் றிறை கொண்ட படலம் : 118, ப. 179
[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கிறக்கீலுடன் போர்புரி படலம் : 162, ப. 128
[4]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : தபூக்குக் கொண்ட படலம் : 58, ப. 80
[5]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : தபூக்குக் கொண்ட படலம் : 68, ப. 84
[6]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : தபூக்குக் கொண்ட படலம் : 91, ப. 90
[7]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : பலஸ்தீன் கொண்ட படலம் : 21, ப. 126

*"……துள்ளி துள்ளிய தும்பைபு னைந்தொளி……"*[1]

*"வாளணி வலத்தா ரியாரு மதிப்பினோ டெழுந்து தும்பைத்……"*[2]

*"……கள்ளுலாந் தும்பி வெட்சி கரந்தையோ டகன்ற தோளார்"*[3]

*"……கூறா நின்றன ளென்றார் தண்டார் குலமார்பார்"*[4]

உமர் (றழி) அவர்களின் ஆட்சியின் போது, சீறாஸ் நகரைக் கைப்பற்றுவதற்காக தோழர்கள், வண்டுகள் சஞ்சரிக்கும் மலர்மாலையணிந்த மார்பினையுடையவர்களாக சந்திரவட்டம் குடை நிழலிட்டவாறு சென்றனர் எனவும் சேனைகள், ஆண்யானைக் கூட்டங்கள் போன்று புறப்பட்டன எனவும் பின்வரும் செய்யுள் கூறுகிறது:

*"மதுகர நுகரிய மாலை மார்பினார்*
*விதுகர மென்மணிக் கவிகை மேனிழ*
*லதுகர மெனவெடுத் தாளுஞ் சேனைகள்*
*புதுகர மால்களி றென்னப் பொங்கிற்றே"*[5]

## இஸ்லாமிய வரலாற்றில் கூறப்பட்டுள்ள இஸ்லாத்திற்கு முரணான வர்ணனைகள்

புதூகுஷ்ஷாமில் பல பிழையான வர்ணனைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் நபி (ஸல்) அவர்கள் தொடர்பாகவும் ஏனைய ஸஹாபாத்தோழர்கள் மற்றும் ஸஹாபாப்பெண்மணிகள் தொடர்பிலும் பிழையாக வர்ணிக்கப்பட்டுள்ளன. அவற்றை பின்வருமாறு நோக்கலாம்:

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : பலஸ்தீன் கொண்ட படலம் : 53, ப. 141

[2] அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : பலஸ்தீன் கொண்ட படலம் : 164, ப. 190

[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : பலஸ்தீன் கொண்ட படலம் : 167, ப. 191

[4]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : கிம்மசு கொண்ட படலம் : 78, ப. 427

[5]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : முப்புரங் கொண்ட படலம் : 44, ப. 372

இஸ்லாத்தில் நபி (ஸல்) அவர்களை நேசிப்பது ஓர் முக்கிய விடயமாகவே காணப்படுகிறது. அந்த வகையில் அவர்களின் மீது கொண்ட நேசமானது, இஸ்லாத்தில் குறிப்பிடப்படாத மற்றும் இஸ்லாத்திற்கு முரணான விடயங்களாக அமைந்து விடக்கூடாது. ஆயினும் புதூகுஷ்ஷாமில் நபி (ஸல்) அவர்கள் தொடர்பில் பிழையான வர்ணிப்புக்களைக் கொண்டதாக சில விடயங்கள் அமைந்துள்ளன.

நபி (ஸல்) அவர்களை அளவு கடந்து வர்ணிப்பது இஸ்லாத்தில் தடுக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸை நோக்கலாம்:

> ‘‘இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ‘‘கிறிஸ்தவர்கள் மர்யமின் மகன் ஈஸாவை (அளவுக்கு மீறி புகழ்ந்து கடவுள் நிலைக்கு) உயர்த்திவிட்டதைப் போல் நீங்கள் என்னை உயர்த்தி விடாதீர்கள். ஏனெனில் நான் அல்லாஹ்வின் அடியான் தான். (அப்படி ஏதாவது என்னைப் பற்றிச் சொல்வதாயிருந்தால்) ‘அல்லாஹ்வின் அடியார்’ என்றும் ‘இறைத்தூதர்’ என்றும் சொல்லுங்கள்’’என மிம்பரின் (உரைமேடை) மீதிருந்தபடி உமர் (றழி) அவர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன்.’’[1]

அந்தவகையில் புதூகுஷ்ஷாமில் இடம்பெற்றுள்ள நபி (ஸல்) அவர்கள் தொடர்பில் பிழையான மற்றும் திரிபுக்குள்ளான வர்ணனைகள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன.

நபி (ஸல்) அவர்களது உடலானது கஸ்தூரி மணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது என்பதை பின்வரும் பாடலினூடாக சேகுனாப்புலவர் விளக்கியுள்ளார்:

*‘‘……காரு டுத்த விருளறுத்த வொளிமேனி நரந்தமணங்*

[1]அல்ஹதீஸ் : புஹாரி : 3445

*கமழ வன்றே"*[1]

இது தொடர்பாக ஹதீஸ் கிரந்தத்திலே இடம்பெற்றிருப்பதாவது,

> "அனஸ் (றழி) அவர்கள் கூறியதாவது: நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது(உடல்) வாசனையை விட நறுமணமிக்க "அம்பரையோ கஸ்தூரியையோ வேறெந்த நறுமணப் பொருளையோ நுகர்ந்ததேயில்லை."[2]

எனவே நபி (ஸல்) அவர்கள் கஸ்தூரியை விட நறுமணமிக்கவர்கள் என்பது ஆதாரபூர்வமாக தெளிவாகின்றது.

நபி (ஸல்) அவர்களது தோற்றத்தை வர்ணிக்கையில் பொன்னை பொதிந்து விளங்குகின்ற மலைகள் மண்டிக்கிடக்கும் இவ்வுலகையே தாங்கும் அவர்களது புயத்தின் மீது காணப்படும் மலர்மாலைகளின் மீது வண்டுகள் அமர்ந்து எழுவதால் தேன்துளிகள் சிந்திட, மேலும் சொர்க்கத்தின் ஆடைகள் நபிகளாரின் உடம்பை அணைத்திருக்க காணப்பட்டார்கள் என்பதனை பின்வரும் பாடல் விளக்குகின்றது:

*"பொன்னிலவு மலைமலையப் புவியனைத்தும் பொறுத்தமணிப்*
*புயத்தின் மீது*
*தென்னிலவு திறவாதை நறுந்தாது முருகளிகள்*
*சிதற மேனித்*
*தன்னிலவு துறக்கவுடை யிலங்கமருங் கணைத்தவுடை*
*தகைய வாளின்......"*[3]

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : 06, ப. 41

[2]*அல்ஹதீஸ் : முஸ்லிம் : 4653*

[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : 04, ப. 41

நபி (ஸல்) அவர்களது உடம்பானது முன்னால் எவ்வளவு தூரம் கண் பார்த்திடுமோ அவ்வளவு தூரம் பின்னாலும் பார்த்து உணர்ந்திடவும், உறங்கும் போது கூட கேட்டோருக்கு பதிலுரைத்திடும் தன்மையும், உடலில் அழுக்குகள் ஒட்டாமலும் ஈ, எறும்பு முதலானவை அணுகாத தன்மையும் கொண்டதாகவே காணப்பட்டது என்பதை பின்வரும் பாடல் தெளிவுபடுத்தியுள்ளது:

*“முன்பார்க்கு நெடுந்தூர முறைபுறத்தே தோற்றுதலான்*
*மொழியு மோசை*
*யன்பார்க்குந் துயிறலினுங் கேட்டெதிர்சொல் லறைதலினா*
*லழுக்கொன் றின்றி*
*வன்பார்க்கு மீமுதன்மற் றோருயிரு மண்மையிலா*
*வரிசை யாலே*
*மன்பார்க்கு ளசரீரப் பெருஞ்சோதி குவிந்தவென*
*வயங்க மாதோ”*[1]

நபி (ஸல்) அவர்களின் பாதங்களானவை, வாசனை பொருந்திய செந்தாமரை மலர் போன்ற திருப்பாதங்களில் சுவடு மண் மீதிலே பதிந்து தோன்றுதல் இல்லாததாக காணப்படுகிறது என புதூகுஷ்ஷாமிலே கூறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் பாடல் கூறுகிறது:

*“கானார் மலரின் சுவடின்றிய காவலர்செந்……”*[2]

பெருமானார் (ஸல்) அவர்களைச் சூழ பல அன்சாரித் தோழர்களும் முஹாஜிரீன்களும் இருந்தனர். ஆயினும் அவர்கள் சிற்சில குழுக்களாகப் பிரிந்து நபி (ஸல்) அவர்களுக்கு சேவகம் செய்யவில்லை. மாறாக நபி (ஸல்) அவர்கள் சாதாரண மனிதரைப் போன்று எளிமையாகவே வாழ்ந்தார்கள். அதேபோல் நபி (ஸல்) அவர்களும் தன்னை எல்லை மீறி புகழ்ந்து விட வேண்டாம் என தனது சமுதாயத்தினருக்கு தடைவிதித்துள்ளார்கள்.

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் : 07, ப. 42

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கிறக்கீலுடன் போர்புரி படலம் : 180, ப. 133

ஆனால் புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ள சில விடயங்கள் நபி (ஸல்) அவர்கள் தொடர்பில் பிழையான வர்ணிப்புக்களாகவே அமைந்துள்ளன. இவை இஸ்லாமிய வரலாற்றில் கூறப்படாத அம்சங்களாகும். அவை பின்வருமாறு: அதாவது நபி (ஸல்) அவர்களை அனுதினமும் காப்பதற்காக எண்மர் அருகிலும் அவர்களின் இரு புறமும் அமைச்சர்களைப் போன்று சிறப்புப் பெற்றவர்களாக பத்துத் தோழர்களும் தம் வீர வாட்களால் பகைவரை வென்று சன்மார்க்கத்தை நிலைநிறுத்தியோராக பன்னிருவரும் நபி (ஸல்) அவர்களை விசிறியும் காளாஞ்சியும் ஆலவட்டமும் வைத்துக்கொண்டு பணியாற்றக்கூடியோராக பதினொரு பேரும் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் நபி (ஸல்) அவர்களின் புகழைப் பாடக்கூடியோராக முப்பத்தொரு பேர் அருகில் சூழ்ந்திருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இவை புதூகுஷ்ஷாமில் றசூலுல்லா அரசுரிமைப் படலத்தில் *14 – 22* வரையிலான செய்யுள்களில் கூறப்பட்டுள்ளன. அவையாவன:

*“ ……சலியாத கொடைத்தானா பதிகள்பதிற் றொருவரிரு*
*பாலு மல்க”*[1]

*“……தானொழுக்கின் கணக்கர்இரு பதிற்றைவ ரிருபாகந்*
*தகையி நிற்ப”*[2]

*“……கட்டாளர் கஞ்சுகியோ ரெண்மர்அணித் தினிதுவந்து*
*களிப்ப மாதோ”*[3]

*“……பக்திபெற வோதியுவந் தளவகன்ற வமரர்மலர்ப்*

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் *: 14*, ப. *44*

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் *: 15*, ப. *45*

[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் *: 16*, ப. *45*

*பாதங் காப்ப.....''*[1]

*'' ......கணியெழிலார் பதிற்றொருவ ரொருபுறமு மிருபுறமுங்*
*கலவா நிற்ப''*[2]

*''......ரின்னுரிமை மக்களொரு முப்பதிற்று மொருவரணித்*
*தினிதின் மொய்ப்ப''*[3]

*''......பவ்வமென வெப்புறத்துஞ் சதுரங்கப் பதாதிநிரை*
*படரா நிற்ப''*[4]

*''......பாலணிந்த முகாசிரீன் களுமருங்கிற் புகழோடு*
*புரிவிற் சூழ''*[5]

*''......திருவளரும் பொன்னகர மலர்மாரி யரம்பையர்கள்*
*சிறப்பிற் றூவ''*[6]

நபி (ஸல்) அவர்கள் போர்களுக்காக புறப்படுகையில், அழகுக்கு மேலும் அழகு சேர்ப்பது போல் அதிகமான அணிகலன்களை அணிந்து சென்றதாகவும் புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் நபி (ஸல்) அவர்கள் மலர்மாலைகள் அணிந்ததாகவும் பாதங்களில் பொற்கழலைகள் அணிந்ததாகவும் கூறப்பட்டிருப்பதானது இஸ்லாமிய வரலாற்று நூல்களில் கூறப்பட்டிராத அம்சங்களாகும். புதூகுஷ்ஷாமில் தபூக்கிற்

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் *: 17*, ப. *45*

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் *: 18*, ப. *45*

[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் *: 19*, ப. *46*

[4]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் *: 20*, ப. *46*

[5]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் *: 21*, ப. *46*

[6]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), *(1991)*, புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : றசூலுல்லாஹ் அரசுரிமைப் படலம் *: 22*, ப. *47*

றிறை கொண்ட படலத்தில் 36 – 46 வரையிலான செய்யுள்களிலே இவ்வாறு கூறப்பட்டுள்ளன:

*“ஓங்கெழி லாரணத் துலவு மேம்பொரு*
*டாங்கெழிற் றிருமணி தவத்தின் மேன்மதி*
*யூங்கெழி றனக்கெழி லூட்டல் போலமர்க்*
*காங்கெழின் முகம்மது மணிக டாங்கினார்”[1]*

*“……முருங்கழ லானவ மொய்த்த பூம்பதங்*
*கருங்கழல் வீக்கினர் கதிக்கு நாயகர்”[2]*

மாறாக நபியவர்கள் தலைக்கவசம் மற்றும் கவச உடைகள் அணிந்திருந்தமைக்கான ஆதாரங்களாக பின்வருவனவற்றை கூறலாம் :

> “ஸஹ்ல் இப்னு ஸஅத் (றழி) அறிவித்தார்: நபி (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட காயத்தைப் பற்றி உஹதுப் போரின் போது என்னிடம் கேட்கப்பட்டது. அதற்கு நான் நபி (ஸல்) அவர்களின் முகம் காயப்படுத்தப்பட்டது. அவர்களின் நடுப்பல் உடைக்கப்பட்டது. அவர்களின் தலைக்கவசம் அவர்களின் தலைமீதே வைத்து நொறுக்கப்பட்டது என்று கூறினேன்.”[3] என இந்த ஹதீஸ் தொடர்கிறது.

மேலும் நபி (ஸல்) அவர்கள் கவச உடை அணிந்திருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரமாக பின்வரும் ஹதீஸை நோக்கலாம்:

> “நபி (ஸல்) அவர்கள் பத்ர் போரின் போது ஒரு கூடாரத்தில் இருந்தபடி இறைவா! நான் உன் உறுதிமொழியையும் வாக்குறுதியையும் உன்னிடமிருந்து கோருகிறேன். என்று பலவாறாக

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : தபூக்கிற் றிறை கொண்ட படலம் : 36, ப. 153

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : தபூக்கிற் றிறை கொண்ட படலம் : 40, ப. 154

[3]அல்ஹதீஸ் : புஹாரி : 2911

பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அபூபக்கர் (றழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு போதும் இறைத்தூதர் அவர்களே, தங்கள் இறைவனிடம் தாங்கள் நிறையவே மன்றாடி விட்டீர்கள் என்று கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் கவச உடை அணிந்திருந்தார்கள்…..”[1] இவ்வாறு இந்த ஹதீஸ் தொடர்கிறது.

நபி (ஸல்) அவர்களைப் பறவைகளும் பிராணிகளும் புகழ்ந்ததாக புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளது. தாமரை மலர்களில் வாழும் அன்னப்பறவைகளும் தேன் வண்டுகளும் கிளிகளும் வாய் திறந்து போற்றிப் புகழ்கின்ற பேரறிவினையுடையவர்களே நாயகம் (ஸல்) அவர்கள் என பின்வரும் பாடலில் கூறப்பட்டுள்ளது:

*“மாமல ரன்னமும் வண்டும் கிஞ்சுகம்*
*வாய்மலர்ந் தேத்திய வாழ்த்தும்……”*[2]

நபி (ஸல்) அவர்கள், தபூக் போரினை முடித்து விட்டு மதீனா திரும்புகையில் அழகிய மேல்மாடங்களில் கூடியிருக்கும் மங்கையரின் வேல் போன்ற கண்களும் மனமும், அகன்ற வீதியிலே வரும் அரிய நீதியையுடைய பெருமானாரின் மீது முந்திச் சென்று மொய்த்துக் கொள்ள, படைப்புக் காலத்தின் முன்னரே உயிரினங்கள் யாவற்றையும் தம்முள் அடக்கிக் கொண்ட ஒளிமுத்தாய் நபி (ஸல்) அவர்கள் இலங்கினார்கள் என்பதாக பின்வரும் பாடலில் கூறப்பட்டுள்ளது:

*“அணிமேனிலை நனிவீதியி னருநீதியர் மடவார்*
*கணிவேல்விழி மனமுந்துற வேறின்றிய காட்சித்*
*தணியாதுள வுயிரியாவையுந் தன்னுட்பட முன்னர்*

---

[1]அல்ஹதீஸ் : புஹாரி : 2915
[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : தபூக்கிற் றிறை கொண்ட படலம் : 80, ப. 168

*மணியாகிய நெறியாமெனவந்தார்முகம் மதுவே"*[1]

இங்கு நபி (ஸல்) அவர்கள் செய்த அற்புதம் புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளது:

பூரண சந்திரனை அமாவாசை இருளில் பூமியில் வந்திறங்கி அடிபணியுமாறு செய்தமையும், சுவனலோக நதியை தங்கள் கைவிரல்களாலேயே வரவழைத்துக் காட்டியதாகவும் புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் பாடலினூடாகக் காணலாம்:

*"கதிகாட்டுந் திருமொழியின் மதிகாட்டுங்*
*காரணத்தின் கடலே யன்ன*
*துதிகாட்டுங் ககனர்பலர் நதிகாட்டு*
*மருங்கரத்தின் றூய வள்ளல்......"*[2]

மேலே கூறப்பட்டவைகள் அனைத்தும் நபி (ஸல்) அவர்கள் தொடர்பில் பிழையான வர்ணிப்புக்களாகவே அமைந்துள்ளன. இஸ்லாத்தில் இவற்றிற்கான எவ்வித ஆதாரங்களும் இடம்பெறவில்லை.

மேலும் ஸஹாபாத்தோழர்கள் மற்றும் தோழியர்கள் தொடர்பிலும் பிழையான வர்ணிப்புக்கள் புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளன. ஆயினும் இஸ்லாத்தில் ஸஹாபாத்தோழர்கள் தொடர்பில் அவ்வாறு கூறப்படவில்லை. இஸ்லாத்தில் ஸஹாபாக்கள் தொடர்பில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: அதாவது, இஸ்லாமிய வழக்கில் ஸஹாபி எனப்படுவோர், "இஸ்லாத்தை நம்பிய நிலையில் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து முஸ்லிமாக மரணித்தவர்களையே குறிக்கின்றது."[3]

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : தபூக்கிற் றிறை கொண்ட படலம் : 172, ப. 198

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : நபி நாயகம் உபாத்துப் படலம் : 01, ப. 266

[3] இஸ்மாயில், எம்.பி.எம்., (2016), சிறப்புமிகு ஸஹாபாக்களும் அவர்களைக் குறைகாணும் ஷீஆக்களும், ப. 08

அந்த வகையில் நபி (ஸல்) அவர்களின் காலப்பகுதியில் வாழ்ந்தோராகவும் மற்றும் அவர்களுடன் ஒன்றாக உடனிருந்தோராகவும் அவர்கள் கருதப்படுவர். மேலும் ஸஹாபாக்கள் என்ற பட்டியலில் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த முஹாஜிரீன்களும் மதீனாவிற்கு நபி (ஸல்) அவர்கள் சென்ற போது அவர்களுக்கு உதவி செய்த அன்சாரிகளும் உள்ளடங்குவார்கள். அந்த வகையில் இஸ்லாத்தை ஆரம்பத்திலே ஏற்றதன் காரணமாக இவர்கள் சிறப்புக்குரியவர்களாகவே கருதப்படுகின்றார்கள். ஆயினும் இவர்களை அளவுகடந்து வர்ணிப்பது இஸ்லாத்தில் தடுக்கப்பட்டுள்ள அம்சமாகும். ஸஹாபாக்கள் குறித்து அல்குர்ஆனில் கூறப்பட்டிருப்பதாவது:

> "மேலும், முஹாஜிர்கள் மற்றும் அன்சாரிகளில் (ஈமான் கொள்வதில்) முதலாமவர்களாக முந்திக் கொண்டோரையும், அவர்களை நற்செயல்களில் பின்பற்றியோரையும் அல்லாஹ் பொருந்திக் கொண்டான். அவர்களும் அவனைப் பொருந்திக் கொண்டனர். அவன் அவர்களுக்குச் சுவனச் சோலைகளைத் தயார் செய்து வைத்துள்ளான். அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். அதில் அவர்கள் என்றென்றும் நிரந்தரமாக இருப்பார்கள். இதுவே மகத்தான வெற்றியாகும்."[1]

எனினும், புதூகுஷ்ஷாமில் ஸஹாபாக்கள் தொடர்பில் சில பிழையான வர்ணனைகள் காணப்படுகின்றன. அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம் :

உமர் (றழி) அவர்கள் ஆட்சியேற்ற சந்தர்ப்பத்தில், எல்லா நாடுகளிலுமுள்ள வேல், வாள் வலிமை மிக்க வீரர்கள் எல்லோரும் வந்து உமர் (றழி) அவர்களின் திருப்பாதங்களில் தாழ்ந்து பணிந்து நின்றனர் என கூறப்பட்டுள்ளது: இதனை பின்வரும் செய்யுள் தெளிவுபடுத்தியுள்ளது:

*"திசைபெறுலோ காதிலோக மிசையுறுவேல் வாள்வலாளர்*

---

[1] அல்குர்ஆன் : அத்தவ்பா : 100

*திறனொடுதா டாழநாளும் விறலாலே ……"*[1]

இங்கு உமர் (றழி) அவர்களின் பாதங்களை வணங்குதல் என தமிழ் மரபைப் பின்பற்றி சேகுனாப்புலவர் கூறியுள்ளார். ஆனால் அல்லாஹ்வைத் தவிர வேறொருவருக்கோ அல்லது வேறொன்றுக்கோ வணக்கம் செலுத்தக் கூடாது என இஸ்லாத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும், காலித் (றழி) அவர்கள் ஒளிபரப்பிப் பிரகாசிக்கும் செங்கதிர்ச் செல்வனாகிய சூரியனைப் போல் விளங்கினார்கள். என்பதாக பின்வரும் செய்யுள் எடுத்தியம்பியுள்ளது:

*"……விரிதரு செங்கேழ் வெய்யோன் பான்மையின் விளங்கி னாரால்"*[2]

நபி (ஸல்) அவர்களின் ஆட்சியில் முஅத்தா போரின் இறுதியில் போர்த்தளபதிகளாகிய மூவரினதும் (ஸைத் (றழி), ஜஹ்பர் (றழி), அப்துல்லாஹ் (றழி)) புதுமணம் புனைந்த கோலத்தினையுடைய அழகிய உடல்களை எடுத்து வாழ்த்துதலோடு அடக்கம் செய்தனர் என கூறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் செய்யுளினூடாகக் காணலாம்:

*"மணம்புது வனைந்த கோல மன்னவர் மூவர் தம்மோ*
*டிணங்கிய வைவ ராக்கை யொருவிய வெடுத்து வாழ்த்திக்*
*குணந்தர வடக்கஞ் செய்து குரிசில்நந் நயினார் வென்றி……"*[3]

நபி (ஸல்) அவர்களின் ஆட்சியில் முஅத்தா போரிலே, காலித் (றழி) அவர்கள் வாசைன வீசுகின்ற செந்தாமரை மலர் போன்ற சிவந்த கைகளையுடையவர்களும் தேனை சிந்துகின்ற குங்கும் மலர்மாலையை அணிந்த அழகிய புயங்களிலே வெற்றியின் அடையாள மாலையான செழுமையான வாகை

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கடவுள் வாழ்த்துப் படலம் : 13, ப. 07

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கிறக்கீலுடன் போர்புரி படலம் : 172, ப. 130

[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கிறக்கீலுடன் போர்புரி படலம் : 175, ப. 131

மலர்மாலைகள் பொலிந்து விளங்கும் படியாகவும் மதீனாவுக்கு புறப்பட்டார்கள். என கீழ்வரும் செய்யுளில் கூறப்பட்டுள்ளது :

*“தேன்றரு மரவப் பொற்றோள் செழுமலர் வாகைப் பூப்பக்*
*கான்றருங் கமலச் செங்கை காலிது மறிவின் மிக்கார்……”*[1]

அபூபக்கர் (றழி) அவர்களின் ஷாம் நாட்டை நோக்கிய போருக்காக பல ஸஹாபாத் தோழர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். அவ்வழைப்பை ஏற்று அபூ ஹுரைரா (றழி) அவர்கள், ஷாம் நாட்டின் இயற்கையான பழவகைகள் முதலியவற்றின் சுவையை நாடி போருக்காக தான் வந்ததாக அவரே கூறியதாக கூறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் செய்யுளில் சேகுனாப்புலவர் விளக்கியுள்ளார்:

*“……யாக்க நாடியுஞ் சாமெனும் பதியருங் கனிக*
*ளுூக்க நாடியு முவப்பணி யுளத்தொடு பூண்டே……”*[2]

ஷாம் நாட்டின் போரின் போது றபீஅத்து (றழி) அவர்கள் வஞ்சிமலர் மாலையினை சூடியவர்களாகக் காணப்பட்டார்கள் என அபூபக்கர் (றழி) அவர்கள் கூறியதாகக் கூறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் செய்யுள் தெளிவுபடுத்தியுள்ளது:

*“……மதிக்குந் திண்புய வஞ்சியர் நெஞ்செழு வலியார்”*[3]

மேலும், யஸீத் (றழி) அவர்கள் சிறை மங்கையர் மற்றும் சேற்றுவயல்கள் வள நாடுகளை விரும்பியே ஷாம் நாட்டை வெற்றி கொள்ள விரைந்ததாக அவர்களே கூறினார்கள். என புதூகுஷ்ஷாமில் கூறப்பட்டுள்ளது:

---

[1]அப்துல் காதிர், .ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1991), புதூகுஷ்ஷாம் : முஹம்மதிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும் : கிறக்கீலுடன் போர்புரி படலம் : 191, ப. 136

[2]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : படையெழுச்சிப் படலம் : 41, ப. 36

[3]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : படையெழுச்சிப் படலம் : 67, ப. 46

*"……வள்ளலம் பழன நாடு மருஞ்சிறை பலவு மற்றுங்*
*கொள்ளையு மொன்னா ரஞ்சுங் கொற்றமுங் கொள்வோ மாக*
*வுள்ளுபு விரைந்தே னென்றா ருணர்வுண ரெசீது மன்றே"[1]*

உமர் (றழி) அவர்களின் ஆட்சியின் போது, வீரலட்சுமி வீற்றிருக்கும் விசாலம் பொருந்திய தோள்களையுடையவர்களாக அபூ உபைதா (றழி) அவர்கள் காணப்பட்டார்கள். என பின்வரும் செய்யுள் கூறுகிறது :

*"……பொன்னா ரிலங்குந் தடம்புயத்துப்*
*போர்வே லண்ணல்வி டுத்தெழுந்து……"[2]*

முப்புரங்கொண்ட படலத்தில் கூறப்பட்டுள்ளதாவது, உமர் (றழி) அவர்களின் ஆட்சியின் போது நடந்த போரிலே இடம்பெற்றதாக கூறப்பட்டிருப்பதாவது, அறபிகள் பெட்டகத்திலிருந்து வெளியேறி மன்னனின் அரசி இருக்கும் அந்தப்புரத்தை அடைந்தனர். அங்கு அரசியிடம் மதிலின் திறப்பைக் கேட்டு ஆரவாரம் செய்தனர். அதன்போது சில பெண்கள் தாம் சேமித்து வைத்த பொருளைப் பற்றிய எண்ணம் இல்லாமல் போகவும் கணவனுடன் உள்ளம் கூடியிருப்பதை மறந்தும் பலத்தினால் தத்தம் கணவன்மார்களின் புயங்களைத் தழுவி ஒட்டிக் கொள்வர். சில பெண்கள் கணவருடன் காமக்கடலில் நீந்திக் கொண்டிருக்க அதன் கரையைக் காணாதவர்களாய் பொழிவு இழந்த கொடி போல உணர்வற்றிருப்பார்கள். இதனை பின்வரும் செய்யுள் கூறியுள்ளது:

*"சேமப் பொருளின் கருத்தொழிய……*
*காமப் புனையிற் கரைகாணார்*
*கைவந் தெழுதும் பாவையென……"[3]*

---

[1]அப்துல் காதிர், ஜே. எம். எம். (உரையாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் : சித்தீக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : படையெழுச்சிப் படலம் : 105, ப. 59

[2]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : முப்புரங் கொண்ட படலம் : 1, ப. 353

[3]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : முப்புரங் கொண்ட படலம் : 30, ப. 365

உமர் (றழி) அவர்களின் ஆட்சியில் நடந்த போரின் போது, சுபைர் (றழி) அவர்கள் போரிடச் சென்றமையால் கமல முகைப் போன்ற ஸ்தனங்களையுடைய பெண்கள் அச்சமின்றி காணப்பட்டனர். இதனை பின்வரும் செய்யுள் எடுத்துக்காட்டுகிறது:

*"……கணமொத்தவர் நற்குர யிற்கமலத்*
*தனமொத்தவ ரச்சம யமர்த்தனரால்"*[1]

இவ்வாறாக ஸஹாபாத்தோழர்கள் தொடர்பில் பிழையான வர்ணனைகளும் ஸஹாபாத் தோழியர்கள் தொடர்பில் மோசமான சில அம்சங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை இஸ்லாத்திற்கு புறம்பானவைகளாகும்.

இவ்வாறு இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களுள் ஒன்றான புதூகுஷ்ஷாமில் இஸ்லாத்திற்கு மாற்றமான பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றை தெளிவுபடுத்துவதாக இவ்வத்தியாயம் அமையப்பெற்றுள்ளது.

இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்வேறுபட்ட காப்பியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அந்த வரிசையில் மிக முக்கியமான இஸ்லாமிய வரலாற்றம்சங்களைக் கூறும் காப்பியமாக புதூகுஷ்ஷாம் கருதப்படுகின்றது. இக்காப்பியத்தில் நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்வின் இறுதிப் பகுதியிலிருந்து உமர் (றழி) அவர்களின் ஆட்சிக் காலப்பகுதி வரையில் ஷாம் நாடு வெற்றிக் கொள்ளப்பட்ட வரலாறு சித்திரிக்கப்பட்டுள்ளது.

புதூகுஷ்ஷாமில் சேகுனாப்புலவர் முஸ்லிம்களால் ஷாம் நாடு வெற்றி கொள்ளப்பட்ட வரலாற்று நிகழ்வுகளை செய்யுள்களினூடாக தெளிவுபடுத்தும் போது அவற்றுள் பல

---

[1]ஷரிபுத்தீன், ஆ. மு. (உரையாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் : பாறூக்கிய்யா காண்டம் (மூலமும் விளக்கவுரையும்) : மூன்றாம் போர்புரி படலம் : 25, ப. 383

நிகழ்வுகள் ஆதாரபூர்வமானதாகவும் உண்மைத்தன்மைக் கொண்டதாகவும் கூறப்பட்டுள்ளன. எனவே அவை இஸ்லாமிய தமிழ் இலக்கிய வட்டத்தில் வரவேற்க்கப்பட வேண்டிய விடயமாகும்.

அதே வேளை, சேகுனாப்புலவர், இஸ்லாமிய வரலாற்றை சித்திரிக்கும் போது இஸ்லாமிய மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத சில விடயங்களையும் கூறியுள்ளார். அவற்றுள் இஸ்லாமிய வரலாற்றோடும் பண்பாட்டோடும் முரண்படும் ஏகத்துவ விடயங்களை பெருமளவில் கையாண்டுள்ளார். ஏனைய புலவர்களும் இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களில் இலக்கியத்தின் செழுமைக் கருதி இஸ்லாத்திற்கு முரண்பட்ட விடயங்களைக் கூறியிருப்பதைப் போன்று புதூகுஷ்ஷாம் காப்பியத்திலும் சேகுனாப்புலவர் அவ்வாறு கையாண்டுள்ளார். ஆயினும் அவை தடுக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

மேலும் சேகுனாப்புலவர், தமிழர்களின் பண்பாட்டம்சங்களை ஏனைய இலக்கியங்கள் பின்பற்றியிருப்பதைப் போன்று புதூகுஷ்ஷாமிலும் தமிழ் இலக்கிய மரபுகள் பலவற்றை பின்பற்றி கூறியுள்ளார். அத்தோடு இலக்கிய நயத்தை மேம்படுத்துவதற்காக, இஸ்லாமிய வரலாற்றில் நிகழ்ந்ததாக பல கற்பனைகளையும் இஸ்லாத்திற்கு முரணான வர்ணிப்புக்களையும் இணைத்துக் கூறியுள்ளார். இவ்வாறு இஸ்லாமிய மார்க்கத்தில் ஆதாரமற்ற பல விடயங்களை கூறியிருப்பதானது இஸ்லாம் மார்க்கம் தொடர்பான பிழையான கண்ணோட்டத்தை சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்திவிடும். இது முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்த வரையில் கவலைக்கிடமான விடயமாகும். ஏனெனில் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் அது இஸ்லாமிய வரையறைக்குட்பட்டதாக, இஸ்லாத்தின் ஆதாரபூர்வமான விடயங்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். அவ்வாறான இலக்கியங்களே வரவேற்கப்பட வேண்டியவையாகவும் தரமானவையாகவும் அமையப்பெறும்.

எனவே இவ்வாய்வு புதூகுஷ்ஷாமில், ஷாம் நாடு வெற்றி கொள்ளப்பட்ட வரலாற்றைக் கூறுகையில் அதன் உண்மைத்தன்மை எவ்வமைப்பில் காணப்படுகின்றது என்பதைத் தெளிவுபடுத்தும் விதமாக அமையப்பெற்றிருப்பதானது, ஏனைய இலக்கிய ஆர்வலர்களுக்கும் மேலும் இஸ்லாமிய தமிழ் இலக்கியம் தொடர்பில் ஆய்வு முயற்சியில் ஈடுபடவிருக்கும் மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் உறுதுணையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உசாத்துணை


1. -(2008), அல்குர்ஆன் (தமிழ் மொழிபெயர்ப்பு), ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா, இலங்கை.

2. அப்துல் கபார், எஸ்.எம்., (1993), கலீபாக்கள் (ஜனாதிபதிகள்), ஷைகு மன்ஜில், பழனி.

3. அப்துர் ரஹ்மான் உமரி, (2008), ஜிஹாத் (ஓர் இஸ்லாமியப் பார்வை), திண்ணைத் தோழர்கள் பதிப்பகம், தமிழ் நாடு.

4. அப்துல் ஹமீது, எம்.எஸ்.எஸ்., (2008), கலீபாக்கள் வரலாறு, சாஜிதா புக் சென்டர், சென்னை.

5. இஸ்மாயில், எம்.பி.எம்., (2016),சிறப்புமிகு ஸஹாபாக்களும், அவர்களைக் குறை காணும் ஷீஆக்களும், அமானத்துத் த.ஃ.வா, கொழும்பு – 09.

6. உமர் ஷரீ.ஃ.ப், அ., (2006), முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு, தாருல் ஹுதா, சென்னை.

7. உவைஸ், ம.மு., (1973), இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்கள், அல்பியன் பிரஸ், கொழும்பு.

8. உவைஸ், ம.மு., (பதிப்பாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் (மூன்றாம் காண்டம், மூலமும் உரையும், இரண்டாம் பாகம்), மில்லத் பப்ளி'ர்ஸ், சென்னை.

9. உவைஸ், ம.மு., (பதிப்பாசிரியர்), (1979), புதூகுஷ்ஷாம் (மூன்றாம் காண்டம், மூலமும் உரையும், இரண்டாம் பாகம்), மில்லத் பப்ளி'ர்ஸ், சென்னை.

10. உவைஸ், ம.ம., (பதிப்பாசிரியர்), (1979), புதூகுஷ்:ஷாம் (மூன்றாம் காண்டம், மூலமும் உரையும், மூன்றாம் பாகம்), மில்லத் பப்ளிஷர்ஸ், சென்னை.

11. உவைஸ், ம.மு., (பதிப்பாசிரியர்), (1981), புதூகுஷ்ஷாம் (மூன்றாம் காண்டம், மூலமும் உரையும், நான்காம் பாகம்), மில்லத் பப்ளிஷர்ஸ், சென்னை.

12. உவைஸ், ம.மு., (1984), இஸ்லாம் வளர்த்த தமிழ், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

13. உவைஸ், ம.மு., (1986), இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு (தொகுதி இரண்டு), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், சென்னை.

14. உவைஸ், ம.ம., (பதிப்பாசிரியர்), (1989), புதூகுஷ்ஷாம் (இரண்டாம் காண்டம், மூலமும் விளக்கவுரையும், முதற்பாகம்), மில்லத் பப்ளிஷர்ஸ், சென்னை.

15. உவைஸ், ம.மு., (1990), இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு (தொகுதி இரண்டு), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், சென்னை.

16. உவைஸ், ம.மு., (1991), புதூகுஷ்ஷாம் (முதலாம் காண்டம், மூலமும் விளக்கவுரையும்), மில்லத் பப்ளி'ர்ஸ், சென்னை.

17. உவைஸ், ம.மு., (1991), வழியும் மொழியும், பஷாரத் பப்ளிஷர்ஸ், சென்னை.

18. உவைஸ், ம.ம., (2008), இஸ்லாமும் இன்பத்தமிழும், யுனிவர்ஸல் பப்ளி'ர்ஸ், சென்னை.

19. குலாம் முஹம்மது, மு., (1994), இஸ்லாமிய அரசு, இலக்கியச்சோலை, சென்னை.

20. சாயபு மரைக்காயர், (1986), இஸ்லாமியர் தொண்டு, கங்கை புத்தக நிலையம், சென்னை.

21. முக்தார், (1993), இஸ்லாத்தில் ஆன்மீகம், உவைஸியா மஜ்லிஸ், சென்னை.

22. முஸ்தபா, எம்.ஏ., (2010), தஃப்சீர் இப்னு கஸீர் (பாகம் ஒன்று), றஹ்மத் அறக்கட்டளை, சென்னை.

23. முஹம்மது தம்பி, எம்.எஸ்., (1990), நாயகத்தின் கலீபாக்கள் வரலாறு, அன்சார் பப்ளிஷர்ஸ், தஞ்சாவூர்.

24. முஹம்மது முஸ்தபா, ஏம்.ஆர்.எம்., (1973), உண்மைக்கு ஓர் அபூபக்கர் (றழி), யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், சென்னை.

25. முஹம்மது முஸ்தபா, எம். (1973), நீதிக்கு ஓர் உமர் (றழி), யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், சென்னை.

26. முஹம்மத் பின் இஸ்மாயில், (1994), நபிகளாரின் பொன்மொழிகள், ஸஹீஹுல் புஹாரி (இரண்டாம் பாகம்), றஹ்மத் அறக்கட்டளை, சென்னை.

27. முஹம்மத் பின் இஸ்மாயில், (1998), நபிகளாரின் பொன்மொழிகள், ஸஹீஹுல் புஹாரி (நான்காம் பாகம்), றஹ்மத் அறக்கட்டளை, சென்னை.

28. யூசுப் அன்சாரி, வி.யு.எ., (1988), ஏகத்துவமும் இறைநம்பிக்கையும், அனஸ் புக் சென்டர், சென்னை.

29. றிஸ்வான், எம்.ஜே.எம்.,(2010), இஸ்லாத்தின் பெயரால் தோன்றிய பிரிவுகள், சாஜிதா புக் சென்டர், சென்னை.

30. ஹபீபுர் ரஹ்மான், எம்.ஜே., (2001), கலீபாக்களின் ஆட்சி, இலக்கியச்சோலை, சென்னை.

31. ஹஸ்ஸான், ஐ., (1999), இஸ்லாத்தை மறந்த இலக்கியங்கள், இஸ்லாமியக் கல்வி வெளியீட்டு நிறுவகம், சென்னை.

32. ஜமாலுதீன், எஸ்., (2004), கலிமாவின் உண்மை நிலை, இஸ்லாமிய வழிகாட்டி மையம், குவைத்.

## சஞ்சிகைகள்

1. இஸ்மாயில், எஸ்.எச்.எம்., உண்மை உதயம் (இதழ்: 192, மார்ச் 2014), ஜமாஅத்து அன்சாரி சுன்னதில் முஹம்மதிய்யா.

2. இஸ்மாயில், எஸ்.எச்.எம்., உண்மை உதயம் (இதழ்: 202, மார்ச் 2015), ஜமாஅத்து அன்சாரி சுன்னதில் முஹம்மதிய்யா.

3. இஸ்மாயில், எஸ்.எச்.எம்., உண்மை உதயம் (இதழ்: 210, டிசம்பர் 2015), ஜமாஅத்து அன்சாரி சுன்னதில் முஹம்மதிய்யா.

4. இஸ்மாயில், எஸ்.எச்.எம்., உண்மை உதயம் (இதழ்: 215, மே 2016), ஜமாஅத்து அன்சாரி சுன்னதில் முஹம்மதிய்யா.

5. இஸ்மாயில், எஸ்.எச்.எம்., உண்மை உதயம் (இதழ்: 221, டிசம்பர் 2016), ஜமாஅத்து அன்சாரி சுன்னதில் முஹம்மதிய்யா.

## இணையத்தள முகவரிகள்

http:// www.alislam.org
https:// adiraipirai.in
https:// kathir.files.wordpress.com
http:// manaruddawa.org
http:// sunmarkam. blogspot. Com
http://  www.islamstory.com
http:// noolaham.org/wiki/index, php? title = MSik \upGj;jPd;-Mjk;ghth- kiuf;fhu;.
http:// www.tamilvu.org
http://www.satyamargam.com/Articles/history/tholarhal/1807-1807.html
http:// tamildigitallibrary.in/admin/assets/book/tvabok
http:// nidur.info/old/index.php
http:// www.keetru.com
https:// azeezahmed. wordpress.com

https:// islamqa. info
https:// shamela. ws
http:// islamtheparadise.wordpress.com
https:// thinnaitholan.wordpress.com
https:// tamililquran.com
https:// ta.wikipedia.org

கலாநிதி ஸாதியா பௌஸர் தனது தமிழ்ச் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும் முதுகலைமாணிப் பட்டத்தையும் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் கலாநிதிப் பட்டத்தையும் பேராதனைப் பல்கலைக் கழகத்திலே பெற்றுக்கொண்டார். பல்வேறு நூல்களினதும் சஞ்சிகைகளினதும் ஆசிரியரான இவர் தமிழ் இலக்கியம், மலையகத் தமிழ் இலக்கியம், இஸ்லாமியத் தமிழ் இலக்கியம், தொடர்பான பல்வேறு கட்டுரைகளை அவ்வப்போது எழுதிவருகிறார். இவர் தற்போது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராகவும் மொழித்துறையின் தலைவராகவும் கடமை யாற்றுகின்றார்.

குருநாகலையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி ஸபிய்யா ஸமீர் றிபாய் தென்கிழக்குப்பல்கலைக்கழகத்தின் மொழித்துறையில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றி வருபவர்.

ஆய்வுகள் சமூகவியல், பொருளியல், அரசியல், வரலாற்று அடிப்படைகளில் பார்ப்பது போல இஸ்லாமிய வரலாற்றின் அடிப்படையில் இந்த ஆய்வு இடம்பெற்றிருக்கின்றது. அவ்வாறு பார்க்கின்றபொழுது புதூகுகூஷ்கூஷாமிலுள்ள இஸ்லாமிய வரலாறு இங்கு கேள்விக்குட்படுத்தப்படுகின்றது. இஸ்லாமிய சிந்தனை யாளர்கள் இஸ்லாமிய வரலாற்றுத் திரிபுகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்தத் திரிபுகள் வரலாற்றுச் சான்றுக்காக வேறொரு இடத்தில் உசாத்துணையாகக்கூட பயன்படலாம். இந்த ஆபத்து நேர்ந்துவிட யாரும் அனுமதிக்கமாட்டார்கள். ஆகவேதான் இப்படி யான ஆய்வுகளும் இன்று கவனத்தில் கொள்ளப்படுகின்றன. அது இந்த இலக்கியங்களை தரங்குறைத்துப் பார்க்கின்ற ஒரு முயற் சியல்ல. இவ்வாறான இலக்கியங்களில், இவ்வாறான தவறுகள் நேர்ந்திருக்கும் என்பதை புரிந்து கொள்ளும் முயற்சியாகும். இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் கற்கும் மாணவர்களுக்கு இந்நூல் பெருதவியாக அமையும்.

**பேராசிரியர் றமீஸ் அப்துல்லா**
மொழித்துறை
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

EXCELLENT PUBLICATION

ISBN : 978-955-3492-13-5

cover design - nawas sawfi